
இலக்கியக் கேணி



கா.ம.வேங்கடராமய்யா.எம்.ஏ

உ

இலக்கியக்கேணி

வித்துவான்
கா. ம. வேங்கடராமையா, எம்.ஏ., பி. ஓ. எல்.,
செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

முதற்பதிப்பு : ஜனவரி 63
உரிமை: ஆசிரியருக்கு

விலை ரூபாய் இரண்டு

அச்சிட்டோர் :
ராயன் அச்சகம், சென்னை-1.

உ

முன்னுரை

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

இவ்வெளியீடு என் முதன் முயற்சி.

இதிற் கண்டவை "குமர குருபரன்" "திருக்கோயில்" போன்ற திங்களிதழ்களில் வெளிவந்தவை. இவற்றில் 1, 3-6, 9-11 ஆகிய கட்டுரைகளை வெளியிட இசைவுதந்த "குமரகுருபரன்" திங்களிதழ் ஆசிரியருக்கும், "ஆணை நமதே" (7) என்ற கட்டுரையை வெளியிட இசைவளித்த "திருக்கோயில்" திங்களிதழ் ஆசிரியருக்கும், பிறவற்றை அச்சிட இசைந்த ஏனையோர்க்கும் நன்றி.

தமிழ்ப்பெருமக்கள் ஏற்று ஊக்குவாராக.

அன்பன்,

1-12-1962 கா. ம. வே.

பொருளடக்கம்

உ

இலக்கியக் கேணி

1. தண்ணீர்ப் பந்தல்

வெந்நீர் வேண்டும்

காவிரிக்கரையில் ஒரு நாள் மாலை 6-30 மணி; திருவிழாவொன்று நடைபெறுகிறது; நட்டாறு; சிற்றாற்று; நீர் கலங்கித்தான் செல்கின்றது; அந்நீரையும் அங்கை நிறைய அள்ளிக் குடிப்பார் பலர்; இரவு 9 மணி இருக்கும்; நானும் ஒரு பலகையில் உட்கார்ந்திருந்தேன்; அன்பர் ஒருவர் சிற்றுண்டியும் தந்தார்; உண்டேன்; பலர் செல்லும் வழியில் செல்லும் பழக்கம்தான் எனக்கு எப்போதும் கிடையாதே; எல்லோரும் போல, ஓடும் நீரைச் சில்லென்றுள்ள தண்ணீரைக்குடித்தேன் என்று எதிர் பார்க்கிறீர்களா? அதுதான் இல்லை; "வெந்நீர் வேண்டும்" என்றேன்! சிற்றுண்டி படைத்தவர் திகைத்தார்! "வெந்நீர்தான் வேண்டும் ஐயா!" என்று மீண்டும் கூறினேன். அவ்விளைஞர் எங்கிருந்தோ கொணர்ந்து கொடுத்தார். வேனிற்காலம் தொடங்கிய சித்திரை மாசத்தில் நான் நிகழ்த்திய சிறுகூத்து இது! வெய்யில் காலத்தில் வெந்நீர் வேண்டும் என்பார் என் போல் ஒருவரும் இரார்.

தண்ணீர்ப் பந்தல்

தண்ணீர் என்றால் வேண்டாம் என்பாரும் என் போல் எவரும் இரார். சூரியனது வெய்ய கிரணங்கள் வானுலகும் மண்ணுலகும் பற்றிப் போகுமாறு செய்யும் காலத்தில் தண்ணீரை விரும்பாத பிராணியும் இருக்குமா! நண்பகலில் தெருவின் வழியே செல்லின், சிறிதும் இரக்கமில்லாத செல்வரிடம் சென்று இரப்பவரைப் போல, அத்தெருப்புழுதி வெப்பத்தைத்தானே அள்ளி வீசும்! தீயவரோடு சேர்ந்த நல்லவரும் தீயவர் ஆவது போல, வெப்பு நிலத்தில் படிந்து வரும் காற்றும் சுடத் தானே செய்யும்! வறுமை அடைந்தோர் தம்மிலும் வறுமையுடையாரிடம் சென்று இரத்தல் போல இலைகள் கருகி உதிர்ந்த மரத்தின் நிழலும், வீட்டு ஓரங்களும், கருகியுள்ள புல்தரையும் அன்னோர்க்கு ஒதுக்கிடமாம். இங்ஙனம் வெப்பத்தால் வருந்தும் சமயத்துத் **தண்ணீர்ப் பந்தர்** ஒன்று தெருக் கோடியில் இருந்தால் அவ்வழிப் போக்கன் என்ன கேட்பான்? "அப்பா! சில்லென்று ஒரு குவளை தண்ணீர் கொடு" என்றுதானே கேட்பான்! இந்நிலையறிந்தே அன்றும் இன்றும் வேனிற் காலங்களில் தண்ணீர்ப் பந்தர் வைத்து நடத்துதலைத் தமிழ் நாட்டு மக்கள் பல அறங்களில் ஒன்றாகக் கருதி மேற் கொண்டனர். இறைவனே ஒரோவழி தண்ணீர்ப் பந்தல் வைத்திருப்பதாக நூல்கள் கூறும்.

தண்ணீர்ப் பந்தல் வைத்த படலம்

திருவிளையாடற் புராணம் ஆலவாய்ப் பெருமான் மன்பதைகள் பொருட்டு நிகழ்த்திய 64 திருவிளையாடல்

களைக் கூறுவது. அவற்றுள் ஒரு திருவிளையாடல் தண்ணீர்ப் பந்தல் வைத்தது. அதில் கண்ட கதைச்சுருக்கம் வருமாறு :

மதுரை நகரில் இருந்து பாண்டி நாட்டை ஆண்ட மன்னர்களுள் இராசேந்திர பாண்டியன் ஒருவன். அவன் காலத்தில் காஞ்சிபுரத்தில் இருந்து சோழ நாட்டை ஆண்டவன் காடு வெட்டிய சோழன். அவனுக்கு மதுரைச் சொக்கேசரது வழிபாட்டில் பெரிதும் விருப்பம் உண்டு. அதற்காக இராசேந்திர பாண்டியனது நட்பை விரும்பி அவனுக்குக் கையுறைப் பொருள்கள் பலவற்றை அவன் அனுப்பினான். பாண்டியனும் சோழன் நட்பை விரும்பினான். இருவர் தொடர்பும் வலுப்பெற்று வளர்வதாயிற்று.

பாண்டியனது குணநலம் முதலியவற்றை நேரில் கண்டறிந்த சோழன், தன் மகளை அவனுக்கு மணம் செய்து கொடுக்க நினைத்தான்.

இதனையறிந்தான் இராசேந்திரனது தம்பி. அவன் எத்தகைய பழிச் செயலுக்கும் அஞ்சாதவன் ; இராசசிம்மன் என்ற பெயரினன் ; தன் தமையனுக்கு மணம் பேசப் பெற்ற சோழன் மகளைத் தானே மணம் செய்து கொள்ளக் கருதினான் ; காஞ்சி நகரத்தை யடைந்தான் ; சோழனிடம் பொய்ம்மொழிகள் பல பேசிமணம் புரிந்து கொண்டான்.

இராசசிம்மனுக்குப் பெண் கொடுத்த பின்னர்ப் பாண்டிய நாட்டு அரசுரிமை அவனுக்குக் கிடைக்க

வேண்டும் என்று சோழன் விரும்பினான்; இராசேந்திரன் மீது போர் தொடுக்க எண்ணினான்; எண்ணில்லாத சேனைகளோடு மதுரைக்குப் புறத்தே வந்து தங்கிப் பாடிவீடு அமைத்துக் கொண்டான்.; போர்முரசு அறை வித்தான்; முன்னெச்சரிக்கையோடு பெரும்படை திரட்டிப் போருக்கு வந்த சோழனைச் சிறு படையுடைய பாண்டியன் தடுத்துப் பொருதான்.

பேரூழிக் காலத்தில் உலகு அனைத்தையும் அழிக்கின்ற பெருந்தீயைப் போலக் கதிரவன் கொதித்து நின்று எரித்தான். தீயவரைச் சேர்ந்த நல்லவரும் தீயவரே ஆவார் என்னும் உண்மையை விளக்குவது போலக் கதிரவனின் வெப்பம் படிந்த காற்றும் நிலமும் அக்கதிரவனைப் போலவே பெரு வெப்பத்தை மக்களுக்கு அளித்தன. போர் வீரர் அனைவரும், யானை குதிரை தேர் முதலியவற்றின் சிறு நிழலில் தங்கி வெயிலில் வெப்பத்தை ஆற்றிக் கொள்ள முயன்றனர். நீர் வேட்கை உண்டாகி அவர்களைப் பெரிதும் துன்புறுத்தியது.

அந்த வேளையில் சொக்கேசப் பெருமான் பாண்டியன் படை நடுவில், நான்கு வேதங்களும் நான்கு கால்களாகப் பொருந்திய **தண்ணீர்ப் பந்தல்** வைத்தார்; அதன் கீழ் நீறணிந்த நெற்றியும், மலரணிந்த காதும், கிண்கிணி அணிந்த காலும் உடையராய்ப் புலித்தோல் உடுத்து, அகத்தேயுள்ள அருட்குறிப்புப் புறத்தே புன்முறுவலால் வெளிப்பட எழுந்தருளியிருந்து, சடையில் தரித்த கங்கை நீரை நிரப்பிய கெண்டி ஒன்றைத் தாங்கித் தண்ணீர் வார்த்து வீரர்களின் தாகத்தைத் தணித்தருளினார்.

தண்ணீர் அருந்தித் தாகம் தணிந்தனர் பாண்டியனது படைவீரர்கள். உடற்களைப்பு நீங்கி வலிய போரைச் செய்தார்கள் ; சோழன் படையும் புறங் கொடுத்து ஓடியது ; இராசேந்திரனும் வாகை சூடினான்.

இங்ஙனம் இறைவனே தண்ணீர்ப்பந்தர் வைத்த செய்தியை மாணிக்கவாசகப் பெருமான், "**தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து, நன்னீர்ச் சேவகனாகிய நன்மையும்**" என்று கீர்த்தித் திருவகவலில் குறித்துள்ளார்கள்.

திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல்

திங்களூரில் இருந்த அப்பூதியடிகள், "பொங்கு கடல் கன் மிதப்பில் போந்தேறிய" திருநாவுக்கரசரின் திருத்தொண்டின் மேன்மையைக் கேட்டறிந்து, அவர் பெயரால் "படிநிகழ் மடங்கள் **தண்ணீர்ப் பந்தர்கள்** முதலாவுள்ள முடிவிலா அறங்கள்" செய்து வாழ்ந்து வந்தார். பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு திங்களூர் மருங்குவழி வந்த திருநாவுக்கரசர்,

> அளவில் சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடை
> உளமனைய தண்ணளித்தாய் உறுவேனிற்பரிவகற்றிக் [யார்
> குளநிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்
> வளம்மருவு நிழல்தருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்.

வந்து அணைந்த வாகீசர், மந்தமாருத சீதப் பந்தருடன் அமுதமாம் தண்ணீரும் பார்த்தருளிச் சிந்தை வியப்புற்றார் ; திருநாவுக்கரசு எனும் பேர் சந்தமுற

வரைந்துள்ளதையும் எம்மருங்கும் கண்டார்: "இப் பந்தர் இப்பெயரிட்டு இங்கு அமைத்தார் யார்?" என்று கேட்டார்; "ஆண்ட அரசு எனும் பெயரால் செப்பருஞ் சீர் அப்பூதி அடிகளார் செய்தமைத்தார்" என்று அங்கிருந்தவர் கூறினர்; "அவர் எங்கேயுள்ளார்" என்று திருநாவுக்கரசர் கேட்டார்; "அவர் இவ்வூரவரே; இப்பொழுதுதான் வீட்டுக்குச் சென்ருர்; அவர் வீடும் அருகில்தான் இருக்கிறது" என்றனர்.

திருநாவுக்கரசர் திங்களூரை அடைந்தார்; அப்பூதியைக் கண்டு,

"ஆறணியும் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில்நும்பேர் எழுதாதே
வேறெருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம் என்கொல்"

என்று வினவினர். அப்பூதியடிகளார்,

"நன்றருளிச் செய்திலீர் நாணில் அமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூழ்ச்சி திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர்தம் திருப்பேரோ வேறெருபேர்"

என்று கூறிச் "செம்மைபுரி திருநாவுக்கரசர் பெயர்" எழுதியமைக்குக் காரணமும் கூறினர். இங்ஙனம் திருநாவுக்கரசர் பெயரையே கூறியும், எழுதியும், தண்ணீர்ப் பந்தர் வைத்துப் போற்றியும் இறைவனதருள் பெற்ருர் அப்பூதியடிகளார்.

கல்லெழுத்துக்களிற் புனற்பந்தர்கள்

முதலாம் இராசராச சோழனது 29 ஆவது ஆட்சி ஆண்டில் (கி. பி. 1014) உக்கல் என்ற ஊரில் ஒரு

கிணறும் தொட்டியும் இராசராசன் பெயரால் ஏற்படுத்தப் பெற்றன. இவற்றை அமைத்தவன் இராச ராசதேவர் பணிமகன் ஆலூருடையான் கண்ணன் ஆரூரன் என்பவன். தொட்டிக்கு நீர் இறைப்பார்க்கு நாடோறும் நெல் 2 குறுணியும், தண்ணீர் வார்ப்பவர்க்கு நாடோறும் நெல் 2 குறுணியும் அளிக்கப்பெற்றன. இத்தண்ணீர்ப் பந்தர் தருமம் ஆறுமாதம் நடைபெறும் என்பது இக்கல்வெட்டிலிருந்து அறிகிறோம்.

முதலாம் இராசராச சோழனது 31 ஆவது ஆட்சி ஆண்டில் (கி.பி.1015–16) கன்னியாகுமரிக் கல்லெழுத்து* ஒரு புனற்பந்தர் ஏற்படுத்தப் பெற்ற செய்தியைக் கூறுகின்றது. குமரிக் கழிக்குடி இராசராச ஈசுவர முடையார் **தேவகன்மிகள்,** † ஒரு தண்ணீர்ப் பந்தல் ஏற்படுத்த நிலம் விற்றனர். அத்தண்ணீர்ப் பந்தலுக்குச் செயங்கொண்ட சோழன் என்று பெயரிடப்பட்டது. அங்கு ஒரு **காவணமும்,** ‡ பலன்தரும் மரங்கள் அதனைச் சுற்றுமடைத்து இருத்தல் வேண்டும் என்றும் அக்கல் லெழுத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளது.

மூன்றும் இராசராச சோழனது 16 ஆவது ஆட்சி ஆண்டுக் கல்லெழுத்து (கி.பி. 1232) ஒரு செய்தியைக் குறிப்பிடுகிறது. நீலநக்கநாயனார் தொண்டு புரிந்த தலமாகிய சாத்தமங்கையில், மூன்றும் இராசராசனது 13 ஆவது ஆட்சியாண்டில், கணிச்சைப்பாக்கத்துத் திருவேகம்பமுடையார் என்பவர் ஒரு தண்ணீர்ப் பந்தல்

---

* T. A. S. I. 168-9

† தேவகன்மிகள் - கோயில் காரியங்களைச் செய்பவர்.

‡ காவணம் - மண்டபம்

அமைக்க வேண்டும் என்று நிலம் அளித்தார். ஆனால் தண்ணீர்ப் பந்தல் அமைக்கப் பெறவில்லை. சாத்த மங்கலத்துச் சபையார் அந்நிலத்தைத் தாம் கைப்பற்றி, ஆண்டார் மருதப் பெருமாள் சந்தானத்து நமச்சிவாய தேவன் என்பாரிடம் ஒப்படைத்து, அவர் திருச்செங் காட்டங்குடியில் கட்டிய சிறுத்தொண்டன் திருமடத்தை நடத்துவதற்கு அந்நில வருவாயைப் பயன்படுத்த அவர்க்கு உத்தரவளித்தனர். இங்ஙனம் இப்புனற் பந்தர் தருமம் வேறு முறையில் பயன்படுத்தப் பெற்றது !

கன்னியாகுமரியில் கிடைத்த ஒரு கல்வெட்டு, சோழ அரசனது அமைச்சர், அய்யன் மங்கலக் காமன் என்பார் ஒரு தண்ணீர்ப் பந்தலை நிறுவினார் என்றும், அதனை நடத்துவதற்கு நாடோறும் பத்து நாழி நெல் அளிக்கப் பெற்றது என்றும் கூறுகிறது. இக்கல் வெட்டின் காலம் புலப்படவில்லை.

சாவாவுடம்பெய்துவார்

இதுகாறும் கூறியவற்றால் இறைவனே தண்ணீர்ப் பந்தரமைத்துப் பாண்டிய அரசுக்கு வெற்றி தந்தமை யும் அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் பெயரால் அமைத்து வீடுபேறு அடைந்தமையும் நோக்கச் சிறந்த புண்ணியங் களில் புனற்பந்தர் அமைத்தல் ஒன்றென்பது வெளிப் படை. இப்புனற்பந்தர்ப் புண்ணியத்தைப் பலரும் செய்யலாம்; செய்து சாவா உடம்பெய்தலாம் என்கிறது திரிகடுகம் :

மண்ணினமேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப்
பெண்ணினுட் கற்புடையாட் பெற்ருனும்—உண்ணுநீர்க்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவா வுடம்பெய்தி னூர்.

இனிப் புனற்பந்தர் வைத்தவர் மறுமையில் சிவலோகத்தில் உறைவர் என்று திருவிளையாடற் புராணம் சிவலோகம் காட்டிய படலம் கூறும்:—

முக்கண் நாயகன் பொருட்டென வேள்விகள் முடித்துத்
தொக்க வேதியர் இவர்; புனற்சாலை இத்தொடக்கத்
தக்க பேரறம் புகழ்பயன் றமைநன்கு மதிக்கும்
பொக்க மாறிய நிராசையாற் புரிந்தவர் இவர்காண்.

2. தத்தா நமரே காண்

மெய்ப்பொருளார் மாண்பு

'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' என்று சிவ நெறியின் கண் ஒழுகியவர் மெய்ப்பொருள் நாயனர். இவர் திருக்கோவலூரில் வாழ்ந்த மிலாடர் கோமான்; அன்பர் வேடமே சிந்தை செய்தவர்; திருக்கோயில் களில் பூசை விழா முதலியன புரிந்து வாழ்ந்தவர்; "தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள் ஆடிய பெருமான் அன்பர்க்கு ஆவன ஆகும்" என்று அடியார் களுக்குக் குறைவறக் கொடுத்தவர்.

முத்தநாதன் பகைமை

இவர்க்கு முத்தநாதன் என்ற ஒரு சிற்றரசன் பகைஞனுயிருந்தான். அவன் மெய்ப்பொருள் நாயனு ரோடு பலமுறை போர்புரிந்து தோற்றான்; நாயனுரை இகலினுல் வெல்ல முடியாது என்பதை அறிந்தான்; திருவேடந்தாங்கிச் சென்று வஞ்சனையால் வெல்லக் கருதினன்; மெய்யெல்லாம் நீறு பூசினன்; கையினிற் படைகரந்த புத்தகக் கவளி ஏந்தினன்; நாயனுரின் மாளிகையை அடைந்தான்.

முத்தநாதன் நினைத்த அப்பரிசே செய்தல்

திருவேடப் பொலிவழகு கண்ட காவலாளிகள் இவ் வஞ்சகனை அரண்மனையில் விடுத்தனர். நாயனர் இருந்த அறையிடத்துச் சென்றான் முத்தநாதன். அங்குத் தத்தன்

என்ற வாயிற் காவலன் 'அரசர் உறங்கும் நேரம் இது; சமயமறிந்து செல்லவேண்டும்' என்று தடுத்தான். இத் தடையையும் பொருட்படுத்தாது முத்தநாதன் உள்ளே சென்றான். நாயனாருடன் இருந்த தேவியார் நாயனாரைத் துயிலெழுப்பினார். நாயனார் எழுந்து அடியாரைச் செங்கை கூப்பி வணங்கித் 'தாங்கள் வந்த காரணம் என்ன?' என்று வினவினார். முத்தநாதன், 'உங்கள் இறைவர் முன் அருளிய ஆகமங்களுள் ஒன்று என்னிடம் உள்ளது; எங்கும் காணப்படாதது: அதனை உனக்கு அறிவிக்க வந்தேன்' என்றான்; 'நாம் அதனை உனக்கு உபதேசிக்கும் பொழுது உன் தேவி இருத்தல் கூடாது' எனவும் கூறினான். தேவியாரும் அரசனிடம் விடைபெற்று ஏகினாள். வஞ்சகன் புத்தகம் அவிழ்ப்பான் போலப் பாசாங்கு செய்து நாயனார் வணங்கும் பொழுதில் மறைத்திருந்த வாளையுருவித் தான் நினைத்த செயலை முடித்தான்.

தத்தா! நமர்

தத்தன் உள்ளே சென்ற அடியார் மேலேயே மனம் வைத்தவன் ஆகையால் நிகழ்ந்ததைக் கண்டதும் அவ் வஞ்சகனைக் கொல்ல வாள் எடுத்தான். குருதி சோர வீழும் நிலையில் இருந்த நாயனார், "தத்தா நமர்" எனத் தடுத்து விழுந்தார்; பின்னும் "இவ்வடியாருக்கு எவராலும் தீங்கு நிகழாதவாறு காத்து, இவரைக் கொண்டு செல்க" என்றும் அருளினார். தத்தனும் நாயனாரின் கட்டளைப்படி நடந்தான். இதுவே மெய்ப்பொருள் நாயனாரின் வரலாறு.

திருவந்தாதியில்

இவ்வரலாற்றுக்கு மூலமாகிய திருத்தொண்டர் திருவந்தாதிச் செய்யுள், இவ்வரலாற்றைச் சுருக்கமாகத் தருகிறது. அப்பாடல் பின்வருமாறு :—

கற்றநன் மெய்த்தவன் போலொரு பொய்த்தவன் காய்சினத்
செற்றவன் தன்னை அவனைச் செறப்புக லுந்திருவாய் [தால்
மற்றவன் தத்தா நமரே எனச் சொல்லி வானுலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொரு ளாம் என்று பேசுவரே.

இத்திருப்பாடலில் 'தத்தா நமரே' என்ற வாக்குப் பயின்றிருத்தல் காண்க. இந்நூலை அருளியவர் நம்பி யாண்டார் நம்பிகள்; இவர் முதலாம் இராசராச சோழன் காலத்தவர் ; இவரே திருமுறைகளைத் தொகுத்தவர்; இவர் காலம் முதல் இராசராச சோழன் காலமாகிய கி. பி. 985–1014 இன் இடைப்பட்ட காலமாகும். எனவே மெய்ப்பொருள் நாயனாருடைய திருவாக்கில் முகிழ்த்த "தத்தா நமர்" என்ற தொடர் திருவந்தாதியில் தவழ்ந்துள்ளமை காண்க.

கல்லெழுத்தில்

முதல் இராசராசன் என்னும் சோழ அரசர் தஞ்சாவூரில் பெரிய கோயிலைக் கட்டியவர். அக்கோயிலில் "ஸ்ரீ காரியம்" என்னும் அரசாங்க அலுவலில் அமர்ந்திருந்தவர் பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனாகிய தென்னவன் மூவேந்த வேளான் என்பவர். இவர் தஞ்சை இராசராசேச்சுரத்தில் (பெரிய கோயிலில்) திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர், பரவையார், மெய்ப்பொருள் நாயனார், சிறுத்தொண்டர்

என்போர்க்குச் செப்புப் படிமங்கள் செய்து எழுந்தருளி வித்தார் என்று தஞ்சைப் பெரிய கோயிலிற் காணும் கல்வெட்டுக்களினின்றறியலாம். மெய்ப்பொருள் நாயனு ரின் படிமத்தை எழுந்தருளுவித்த செய்தியைக் கூறும் கல்லெழுத்து, நாயனுரை. "தத்தா நமரே காண் என்ற மிலாடுடையார்" என்று குறிக்கிறது. இதனுல் 'தத்தா நமர்' என்று மெய்ப்பொருள் நாயனுர் கூறியது அக் காலத்துச் சிவ பக்தர்களின் உள்ளத்தில் கல்லெழுத்துப் போல் பதிந்திருந்தது என்றும், அதனுலேயே மெய்ப் பொருள் நாயனுரைக் குறிக்க வந்த பொய்கை நாடு கிழவன் 'தத்தா நமர் என்ற மிலாடுடையார்' என்று கல்லெழுத்திற் குறித்தார் என்றும் அறிகிறோம்.

கல்லெழுத்துப் பின்வருமாறு

ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிவர்மரான ஸ்ரீ ராசேந்திர சோழதேவர்க்கு யாண்டு மூன்ருவது உடையார் ஸ்ரீ ராச ராசேசுவரம் உடையார்க்கு ஸ்ரீகார்யஞ் செய்கின்ற பொய்கைநாடுகிழவன் ஆதித்தன் சூர்யனுன தென்னவன் மூவேந்தவேளான் யாண்டு மூன்ருவதுவரை செய்வித்த செப்பு பிரதிமங்கள் உடையார் கோயிலில் முழத்தால் அளந்தும் ரத்நங்கள் தக்ஷிணமேருவிடங்கனென்னும் கல்லால் நிறை எடுத்தும் கல்லில் வெட்டின பாதாதிகே சாந்தம் இருபதிற்று விரல் உசரத்து இரண்டுகையுடையா ராகக் கனமாகச்செய்த "தத்தா நமரேகாண் என்ற மிலாடுடையார்" ஒருவர். இவர் நின்ற பதிற்று விரல் நீளத்து எண்விரல் அகலத்து எண்விரல் உசரத்து பத்மத் தொடுங்கூடச்செய்தபீடம் ஒன்று. இவனே இவர்க்குக் குடுத்தன. உருத்திராக்ஷம் ஒன்றிற் கட்டின பொன்

ஏழுமஞ்சாடி உட்பட உருத்திராக்ஷம் ஒன்று நிறை அரைக்கழஞ்சே நாலு மஞ்சாடியும் குன்றிக்கு விலை காசு ஒன்று.

படிமத்தைப்பற்றிய குறிப்பு

இது செப்புப் படிமம்; இருபது விரல் உயரம்; இரண்டு கையுடையது; கனமாகச் செய்தது: நின்ற கோலமுடையது. இப்படிமம் நின்ற பீடம் பத்துவிரல் நீளம், எண்விரலகலம், எண்விரலுயரமுடையது; பத்ம (தாமரை) வடிவமுடையது. இப்படிமத்துக்கு உருத்தி ராக்கமாலை யளிக்கப்பெற்றது. அம்மாலை கட்டின பொன் ஏழுமஞ்சாடியும் சேர்த்து மொத்த எடை அரைக்கழஞ்சு நாலுமஞ்சாடி, ஒரு குன்றி, அதன் விலை காசு ஒன்று.

அந்தநாளும் வந்திடாதோ !

இங்ஙனம் பலவழிகளில் சோழர் காலத்து அரசியல் அலுவலர் பலர் சைவம் தழைக்கச் செய்தனர். திருக் கோயில்களைப் பராமரித்தும், திருக்கோயில்களுக்கு நிபந்தங்கள் வழங்கியும், நாயன்மார்களின் திருமேனிகளை எழுந்தருளுவித்துப் போற்றியும், சைவ நூல்களைக் கசடறக்கற்று அதற்குத்தக நின்றும் சைவத்தைப் பரப்பினர். பொய்கை நாடு கிழவன் திருத்தொண்டர் திருவந்தாதியை நன்கு அறிந்தவர்; ஆகலின் அன்றோ மெய்ப்பொருள் நாயனாரின் பெயரைக் குறிக்காது "தத்தா நமரேகாண் என்ற மிலாடுடையார்" என்று குறிக்கச் செய்தார்! இங்ஙனம் சமய நூல் அறிவும், சமயப்பற்றும் தழைத்தோங்கிய அந்த நாளும் வந்தி டாதோ ?

---

3. அந்தாதியில் சுந்தரர்

தோற்றுவாய்

அந்தாதி என்று இத்தலைப்பிற் குறித்தது **திருத்தொண்டர் திருவந்தாதி** ஆகும். இத்திருவந்தாதி திருநாரையூர் **நம்பியாண்டார் நம்பியால்** அருளப்பெற்றது; திரு என்ற அடையொடு சேர்த்த அந்தாதிப் பெயரால் அமைந்திருப்பதே இதன் பெருமையை விளக்கும். இத்திருவந்தாதி **'செப்பத்தகும்'** என்று தொடங்கிச் **'செப்பிடவே'** என்று முடிந்து மண்டலித்து அந்தாதித் தொடையான் அமைந்தது; **திருத்தொண்டத் தொகை**யில் 11 பாடல்களில் அருளப்பெற்ற தொகையடியார் 9 பேர், தனியடியார் 63 பேர்* ஆக 72 திருத்தொண்டர்களுக்குத் தனித்தனி ஒரு பாடல் வீதம் (சில தொண்டர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்களோடு) 89 பாடல்களையுடையது; திருத்தொண்டத் தொகைப் பாடல் ஒவ்வொன்றினீற்றிலும் **'ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே'** என்றுள்ள வரிக்கு ஏற்பச் சுந்தரர் வரலாற்றைக் குறிக்கும் பாடல்கள் இடையிடையே வந்துள்ளன. இங்ஙனம் அமைந்தவை 8, 23, 32, 40, 48, 57, 63, 69, 77, 86, 87 என்ற எண்ணுள்ள பதினொரு பாடல்களாம். இவற்றினின்றும், 18, 27, 35,

---

* சுந்தரரையும் சேர்த்து 63 என்க. 'கூட்டம் ஒன்பானோடு அறுபத்து மூன்று தனிப்பெயரா ஈட்டும் பெருந்தவத்தோர்' என்பது திருத்தொண்டர் திருவந்தாதி 87-ம் பாட்டு.

39, 45, 68, 76 ஆகிய எண்ணுள்ள பாடல்களினின் றும், சடையனர், இசைஞானியாரைப் பற்றிய (84, 85 ஆம்) பாடல்களினின்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பற்றி அறியும் செய்திகளைத் தொகுத்துக் கூறுவதே இக் கட்டுரையின் நோக்கமாம்.

ஊரும் பெற்ருேரும்

சுந்தரர் அவதரித்த ஊர் திருநாவலூர்; தந்தை சடையனர்; தாய் இசை ஞானியார்; இவை 84, 85 ஆம் பாடல்களினின்று அறியப்பெறும். 'நல்லவன் தன்பதி நாவலூர் ஆகின்ற நன்னகரே' என்பது 57 ஆம் செய்யுள். குவலயத்தில் நலம் விளங்க, நாம் விளங்க, நற்றவத்தின் பலம் விளங்கச் சுந்தரர் திரு அவதாரம் செய்தார் என்று 84 ஆம் செய்யுள் கூறும்.

திருப்பெயர்கள்

நம்பியாரூரன் (8) வன்ரெண்டன் (18, 32, 35, 39, 63), நாவலர்கோன் (23), நாவலூராளி (27, 87), திருவாரூரன் (40, 48, 77), நாவலர் பெருமான் (45), நாவற்குரிசில் (68), நாவலூரரசு (69), நாவலூர் மன்னவன் (76) என்பனவாம்.

ஆவணம்காட்டி ஆட்கொண்டது

சுந்தரர் தடுத்தாட் கொள்ளப்பெற்ற செய்தியே இவ்வந்தாதியில் முதன்முதலாகச் சுந்தரரைப்பற்றிக் கூறும் 8 ஆம் செய்யுளில் சொல்லப்பெற்றது. அப் பாடல் வருமாறு:—

தொழுதும் வணங்கியும் மாலயன் தேடருஞ் சோதிசென்று
எழுதும்தமிழ்ப்பழஆவணம்காட்டி, 'எனக்குஉன்குடி[ஆங்கு
முழுதும்அடிமை, வந்துஆட்செய்' எனப்பெற்றவன்முரல்தேன்
ஒழுகு மலரின் நல் தார் எம்பிரான் நம்பி ஆரூரனே.

பரவையாரும் சங்கிலியாரும்

சுந்தரர் திருவாரூரில் பரவையாரையும், திருவொற்றியூரில் சங்கிலியாரையும் வாழ்க்கைத் துணையாகக்கொண்டார் என்பது 'பரவை யென்னும் மாதுக்குக் காந்தன் வன்றொண்டன்' (39), 'சங்கிலி பேரமைத்தோள் அணையுமவன் திருவாரூரன் ஆகின்ற அற்புதனே' (40) என்றவற்றுள் குறிக்கப்பெற்றது. சங்கிலியாரை மணம் பேச வந்தவர் இறந்தார் என்பதும், சுந்தரர் சங்கிலியாரை மணந்தது இறைவன் உதவியினாலேயே என்பதும் பின் வரும் (69 ஆம்) பாடலிற் காணலாம் :—

தருமகட் பேசினேன் வீயவே நூல்போன சங்கிலிபால்
புகுமணக் காதலி னால்ஒற்றி யூர்உறை புண்ணியன்றன்
மிகுமலர்ப் பாதம் பணிந்தரு ளால்இவ் வியனுலகம்
நகும்வழக் கேநன்மை யாப்புணர்ந் தான்நாவ லூரரசே.

'நூல்போன' என்பது 'நூற்றுறையில் புகழப்பட்ட' என்று பொருள்படும். கற்றுத்துறைபோய எனினும் ஆம்.

'துணையும் அளவும் இல்லாதவன் தன்னருளே துணையாக...
சங்கிலி தோள் இரண்டும் அணையுமவன்' (40)

என்ற பாடற் பகுதியும் இறைவன் திருவருட்டுணையாலேயே இத்திருமணம் நிகழ்ந்தது என்பதை வலியுறுத்தும்.

அற்புத நிகழ்ச்சிகள்

புகலூரில் செங்கல் பொன்னாகப் பெற்றது – 'வன்றெண்டர் அம்பொன் அதிகம் பெறும் புகலூர்' (18) தென்புகலூர் அரன்பால் செம்பொன் கொள்ளவல்லான்' (57) என்ற பாடற் பகுதிகளாலும்; திருப்பதிகம் பாடித் திருவருளால் காவிரி வழிவிட்ட அற்புதம்–'செந்தமிழ் பாடிப் படர் புனலிற் சிந்திப்பரியன சேவடி* பெற்றவன்' (32) என்றதாலும், ஆற்றில் இட்ட பொன் குளத்தினிற் பெற்றது–

செழுநீர் வயல்முது குன்றினில் செந்தமிழ் பாடிவெய்ய
மழுநீள் தடக்கையன் ஈந்தபொன் ஆங்குக்கொள் ளாதுவந்தப்
பொழிநீ டருதிரு வாரூரில் வாசியும்பொன் னுங்கொண்டோன்
கெழுநீள் புகழ்த்திரு வாரூரன் என்றுநாம் கேட்பதுவே'

என்ற 77 ஆம் திருப்பாடலாலும், முதலையுண்ட பாலனை யழைத்தது–

'கொடுத்தான் முதலைகொள் பிள்ளைக்
குயிர் அன்று புக்கொளியூர்த்
தொடுத்தான் மதுரகவி அவிநாசியை' (63)

என்பதாலும், திருமுருகன் பூண்டியில் சிவகணங்கள் கொள்ளையடித்தமை—'வேடர் சுற்றம் படுத்தான்† திருமுருகன் பூண்டியினில்' (63) என்பதாலும் அறியலாம். திருவொற்றியூரினின்று வரும் சுந்தரர் சோழ நாட்டுத் திருத்துருத்தி எனும் தலத்தருகே வந்த பொழுது புதிய ஒரு பிணியின் அறிகுறி காணப்பட்டது என்றும், தான் முன் செய்த சபதத்தைப் பிழைத்தமையால் இப்பிணி

---

* சேவடி-திருவருள். † படுத்தான்-பறிக்கப்பட்டான்.

நேர்ந்தது என்றும், திருத்துருத்தியீசனை ஏத்திப் பிணி தீர்ந்தார் என்றும், பின்வரும் (23 ஆம்) பாடலால் அறியலாம் :—

நிதியார் துருத்திதென் வேள்விக் குடியாய் நினைமறந்த
மதியேற் கறிகுறி வைத்த புகர்பின்னை மாற்றிடென்று
துதியா அருள் சொன்னவா றறிவாரிடைப் பெற்றவன்காண்
நதியார் புனல் வயல் நாவலர் கோனென்னும் நற்றவனே.

(துருத்தி-குற்ருலம்; புகர்-பிணியால் மேனியிற் காணும் அடையாளம்; சொன்னவாறறிவார்-தலத்து இறைவன்பெயர்)

பிற அடியார்கள்

ஏயர்கோன் வாள்கொண்டிறந்தார் என்பது, 'வன்றெண்டனே மற்றிப் பிணி தவிர்ப்பான் என்று உடைவாள் உருவி அங்நோய் செற்றுத் தவிர் கலிக் காமன்' (35) என்றதாலும், **சோமாசிமாறர் சுந்தரர் பால் பெருநண்பு பூண்டவர்** என்பது, 'சோமாசிமாறன் என்பான்......வன்றெண்டன் தனக்கு மகிழ்துணையே' (39) என்றதாலும், **பெருமிழலைக் குறும்பர்** சுந்தரர் கயிலை செல்லும் நாளுக்கு முதல்நாளே கயிலை அடைந் தார் என்பது 27 ஆம் பாடலாலும், **கோட்புலியார்**, 'நாவற்குரிசில் அருள்பெற்ற அருட்கடல்' என்ற 68ஆம் பாடற்பகுதியாலும் அறியப்பெறும்.

சேரரும் ஆரூரரும்

சுந்தரருக்குச் சிவபெருமான் யானை அனுப்பியமை யும், சேரமான் சுந்தரர்க்கு முன்பு குதிரையில் சென்ற மையும், "தென் நாவலர் பெருமாற்குச் சிவன் அளித்த வீரக்கடகரி முன்பு தன்பந்தி இவுளி வைத்த வீரன்"

என்று 45 ஆம் பாடலிற் கூறப்பெற்றன. (கரி-யானை; இவுளி-குதிரை; வீரன்-சேரமான்). களையா உடலொடு சேரமானும் ஆரூரரும் கயிலை புகுந்தனர் என்றும், வேறு யாரும் மனித யாக்கையோடும் கயிலை அடைய வில்லை என்றும் பின்வரும் (86 ஆம்) பாடல் புகலும்:—

ஞானவா ரூரரைச் சேரரை அல்லது நாம்அறியோம்
மானவ ஆக்கை யொடும்புக் கவரை வளரொளிப்பூண்
வானவ ராலும் மருவற் கரிய வடகயிலைக் [திலே.
கோனவன் கோயில் பெருந்தவத் தோர்தங்கள் கூட்டத்

சுந்தரர் வெள்ளையானைமேல் ஆரோகணித்துச் சென்றார் என்பது, 'செங்கண் வெள்ளைப் பொள்ளல் நீள்பனைக்கைக் கயம் தான் உகைத்த நற்காளை' என்ற 85 ஆம் பாடலினின்றறியலாம். (பொள்ளல் – துளை; கயம் – யானை; நற்காளை என்றது சுந்தரரை.)

கூனனும் குருடனும்

பரவையாரது ஊடலைத் தீர்க்க இறைவர் இருமுறை தூது சென்றார். இரண்டாவதுமுறை தூது சென்று மீண்ட இறைவர் சுந்தரரை நோக்கித், "தாழ்குழல் செற்றம் தணித்தோம்; நம்பி! இனிப்போய் மற்றவள் தன்பால் நணுகு" என்றருளினர். நம்பியாரூரர் பரவைபால் செல்லப் புறப்பட்டார். பரிசனங்கள் மங்கலப் பொருள்கள் தாங்கி முன் சென்றனர். இவர்களுள் கூனனும் குருடனும் இருந்தனர். இவ் விருவரும் தம் உடற் குறைவினால் தண்மாலை தாம்பூலம் இவற்றை ஏந்திச் செல்ல முடியாமை குறித்து வருந்திச் சுந்தரரிடம் விண்ணப்பித்தனர்; சுந்தரர் திருவருள்

பாலித்தார்; கூனன் கூன் நிமிரப் பெற்றான்; குருடன் கண் பெற்றான். இதனைத் திருத்தொண்டர் திருவந்தாதி (48) பின்வருமாறு கூறும் :—

கூற்றுக் கெவனோ புகல்? திருவாரூரன் பொன்முடிமேல்
ஏற்றுத் தொடையலும் இன்அடைக் காயும் இடுதரும்அக்
கோல்தொத்து கூனனும் கூன்போய்க் குருடனும் கண்பெற்
சாற்றித் திரியும் பழமொழி யாம்இத் தரணியிலே. [றமை

இச்செய்தி திருத்தொண்டர் புராணம்—கூற்றுவ நாயனார் புராணத்து இறுதிச் செய்யுளில் சேக்கிழார் சுவாமிகளாலும் அருளப் பெற்றுள்ளது. அது வருமாறு:—

தேனும் குழலும் பிழைத்ததிரு
 னொழியாள் புலவி தீர்க்கமதி
தானும் பணியும் பகைதீர்க்குஞ்
 சடையார் தூது தருந்திருநாள்
கூனும் குருடுந் தீர்த்தேவல்
 கொள்வார் குலவு மலர்ப்பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றேன்
 ஏழு பிறப்பின் முடங்குகூன்.

4. திருத்தொண்டத் தொகை

தோற்றம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரில் இறைவனருளால் பரவையாரை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டார்; நாடோறும் சிவபெருமானுக்கு நல்ல பாமாலைகளைச் சூட்டினர். ஒருநாள் வழக்கம்போல் நம்பியாரூரர் (சுந்தரர்) இறைவனை வணங்கத் தியாகேசப் பெருமான் திருக்கோயிலை அடைந்தார்; அப்போது தேவாசிரிய மண்டபத்தில் சிறப்பு மிகுந்த அளவற்ற அடியார்கள் கூடியிருப்பதைக் கண்டார்; "இவர்களுக்கெல்லாம் நான் அடியவனாகும் நாள் எந்நாளோ?" என்று எண்ணித் திருமுன் சென்றார். சிவபெருமான் காட்சியளித்து, நம்பியாரூரருக்கு அடியார்களின் பெருமையை,

"பெருமையால் தம்மை யொப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனமேல் ஒன்று மில்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்"

என்றருளிச் செய்து, 'இவரை நீ அடைவாய்' என்று பணித்தார். நம்பியாரூரர், 'நான் அவர்களை எங்ஙனம் பாடுகேன்?' என்று வேண்டச் சிவபெருமான், "**தில்லை**

வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று அடியெடுத்துக் கொடுத்துப் பாடும்படி பணித்தருளி மறைந்தார். எம்பெருமான் மறைந்ததும் நம்பியாரூரர் தேவாசிரிய மண்டபத்தை நோக்கிப் புறப்பட்டார்; அங்கு எழுந்தருளியிருந்த அடியார்களின் திருக் கூட்டத்தைத் தொலேவிலிருந்து கண்டவுடனே கீழே விழுந்து பன்முறை வணங்கினர்; அடியார்களின் அருகே சென்று நின்றுகொண்டு எக்காலத்தும் அழியாத வீர முடையவர்களான அடியார்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே அவ்வவர் திருப்பெயர் சொல்லி 'இவருக்கு அடியேன்' என்றும், பின் தொகுதியான அடியார்களைக் குறித்து, 'இத்தொகுதியார்க்கு அடியேன்' என்றும் கூறப்பெறும் திருத்தொண்டத்தொகை என்று பேர் பெற்ற திருப்பதிகத்தை அருளிச் செய்தார்.

சேக்கிழார் சிறப்புரை

சேக்கிழார் சுவாமிகள் அமயம் வாய்த்துழி யெல்லாம் திருத்தொண்டத் தொகையைப் புகழ்ந்துள் ளார். அவை வருமாறு:—

1. தமிழ் மாலே
2. திருத்தொண்டத் தொகைப் பதிகம்
3. மற்றிதற்குப் பதிகம் வன்றொண்டர்தாம்
   புற்றிடத்தெம் புராணர் அருளினல் சொற்ற
   மெய்த்திருத் தொண்டத் தொகை எனப்
   பெற்ற நற்பதி கம்தொழப் பெற்றதாம்
4. சுந்தரத் திருத்தொண்டத் தொகைத் தமிழ்

5. தென்றமிழ்ப் பயனுயுள்ள திருத்தொண்டத் தொகை

6. ஞாலமுய்ய நாமுய்ய நம்பி சைவ நன்னெறியின் சீலமுய்யத் திருத்தொண்டத் தொகை முன் பாட......

7. ஈசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழவெடுத்துத், தேசம் உய்யத் திருத் தொண்டத் தொகை முன் பணித்த திருவாளன்

8. மூலமான திருத்தொண்டத் தொகை

9. மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திடத், தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரப் போதுவார்.........

விறன்மிண்ட நாயனுர் புராணத்தில், திருத் தொண்டத் தொகையால் உலகு விளங்க வரும்பேறு தனக்குக் காரணராம் பிரானுர் விறண்மிண்டர்'' என்றும்,

குலச்சிறை நாயனுர் புராணத்தில், "வன்றெண்டர் தாம் ஒப்பரும் பெருநம்பி என்றேதிய செப்பருஞ் சீர்க் குலச்சிறை'' என்றும் குறித்தமை இங்கு அறிதற் பாலனவாம்.

இனி, திருத்தொண்டத் தொகை, மக்கள் மனத் தைக் கவர்ந்ததொன்ருயிருத்தல் வேண்டும் என்பது கல்லெழுத்துக்களினின்று அறியப் பெறுகின்றது. திருத்தொண்டத்தொகை நினைவாகக் குகையும், மடமும்,

கோயிலும், ஊரும் பண்டை நாட்களில் தமிழகத்திருந்தன. அவற்றைக் குறித்துச் சிறிது காண்போம்.

திருத்தொண்டத் தொகையான் குகை

மூன்றும் இராசேந்திர சோழனுடைய 4 ஆவது ஆட்சி ஆண்டு (கி. பி. 1250) க்குரிய திருவிடைவாயில் கல்லெழுத்தினின்று "திருத்தொண்டத் தொகையான் குகை" என்று ஒரு குகை இருந்ததாக அறிகிறோம். திருப்பள்ளியறையைப் பார்வையிடுவாருக்கு மாகவும், திருப்பதியம் விண்ணப்பம் செய்வாருக்குமாகவும் நிலம் விடப்பெற்றதாக இக்கல்லெழுத்துக் கூறுகின்றது. இப்பள்ளியறையில் திருத்தொண்டத் தொகையான் குகை இருந்தது. இக்குகையுள் திருமுறைகள் வைக்கப் பட்டிருந்தன. திருக்கழுமலத்தில் திருத்தோணி புரமுடைய நாயனுர் கோயிலில் திருமுறைத் தேவாரச் செல்வன் குகை என்ற ஒரு குகை இருந்தது. அதில் முதலியார் திருவையாறுடையார் என்பவர் இருந்தார். அவர் வழியில் வந்தவரே இக்கல்லெழுத்தில் கண்ட தருமத்தைச் செய்தவர் ஆவர் என்றும், ஆனமங்கல முடையான் அரையன் வடுகநாதனுன சென்னவரையர் என்பவர் வாணுதரயர் பொருட்டு இத்திருத்தொண்டத் தொகையான் குகையை ஏற்படுத்தினுர் எனவும் இக் கல்லெழுத்துக் கூறுகிறது.

திருத்தொண்டத் தொகையான் திருமடம்

திருச்சி ஜில்லா கோவந்தபுத்தூரில் மூன்றும் இராசேந்திர சோழனது 2 ஆம் ஆட்சியாண்டு (கி. பி. 1248)க் குரிய கல்லெழுத்து, திருத்தொண்டத் தொகையான்

திருமடம் என்று ஒரு மடத்தைக் குறித்துச் சில செய்தி களைக் கூறுகின்றது. இக்கல்லெழுத்து "வாழ்க அந்தணர்" என்ற திருப்பாடலை முதற்கண் கொண் டுள்ளது. சிதம்பரத்தவராகிய சுப்பிரமணிய சிவம் என்பார் 'கண்டாபரணர்' என்றவருடைய பெயரர். இவர் சில நிலங்களை விலைக்கு வாங்கித் திருத்தொண்டத் தொகையான் திருமடத்துக்கு அளித்தார். இத்திருமடம் கோவந்தபுத்தூரில் திருவிசயமங்கை என்ற திருக் கோயிலில் திருமடை விளாகத்தில் இருந்தது. இங்ஙனம் அளிக்கப்பெற்ற நிலவருமானம் இத்திருமடத் துக்கு வரும் யாத்திரிகர்களுக்கு உப்பும் ஆமணக்கெண் ணெயும் கொடுக்கவும், ஸ்தானத்தார் நோய்வாய்ப்படின் அவர்களுக்கு வைத்திய உதவி செய்யவும் பயன்படுத்தப் பெற்றது. மேற்குறித்த சுப்பிரமணிய சிவம் என்பவரே இம்மடத்துக்குத் தலைவர் போலும். தன்னால் நியமிக்கப் பெறும் பின் உரிமையுள்ளவர்கள் தனக்குப் பிறகு இத்தருமங்களைச் செய்து வருதல் வேண்டும் என்றும், தனக்குப்பின் உரிமையுள்ளவர்களை நியமிக்கத் தவறினால் இம் மடத்துக்குத் தலைவர் ஒருவரைச் சிதம்பரத்தில் உள்ள திருத்தொண்டத் தொகையான் மடத்துத் தலைவரே நியமிக்கலாம் என்றும், அங்ஙனம் நியமிக்கப் பெறுபவர் மேற்குறித்த தருமங்களைச் செவ்வனே புரிதல் வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப் பெற்றது. எனவே சிதம்பரத்திலும் கோவந்தபுத்தூரிலும் திருத் தொண்டத்தொகையான் திருமடம் என்று திருமடங்கள் இருந்தன என்று அறிகிறோம்.

குலசேகர பாண்டியனது 13 ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டிலிருந்து திருத்தொண்டத் தொகையான்

திருமடம் ஒன்று திருப்புத்தூரில் இருந்ததாகத் தெரிகிறது. (104 of 1908). அவ்வூர்ச் சபையார் திருத்தளியாண்டார் கோவிலிலிருந்த தயாபஞ்சரம் என்ற மண்டபத்தில் கூடினர். ஒருவன் ஓர் அந்தணனை ஒரு எருதின் காலில் கட்டி இழுத்துக் கொன்ற குற்றத்துக்குக் கழுவாயாகத் தனிவழிபாடு நடத்தத் திருத்தொண்டத் தொகையான் திருமடத்துக்கு நிலதானம் அளிக்கப் பெற்றது. இனி வீரபாண்டிய தேவரது 17 ஆம் ஆண்டு (கி. பி. 1327) க்குரிய கல்லெழுத்து (116 of 1908) திருத்தொண்டத் தொகையான் திருமடத்து நிலங்களுக்கு வரிகள் தள்ளுபடி செய்யத் திருப்புத்தூர் அவையினர் கூடினுர்கள் என்று தெரிவிக்கிறது. இவற்ருன் பாண்டி நாட்டிலும் திருத்தொண்டத் தொகையான் திருமடம் இருந்ததென அறியலாம்.

திருத்தொண்டத் தொகையீச்சரம்

சிதம்பரம் நடராசப் பெருமான் திருக்கோயிலின் "வடக்குக் கோபுரத்தையடுத்துத் **திருத்தொண்டத் தொகை யீச்சரம்** என்ற ஒன்று குறிப்பிடப் பெறுகிறது. இதில் திருத்தொண்டத் தொகையில் பாராட்டப்பெற்ற தனியடியார் அறுபத்து மூவரும் தொகையடியார் ஒன்பதின்மருமாக உள்ள பெரு மக்களில், தனியடியார்களுக்குத் தனித்தனித் திருவுருவம் அமைக்கப்பெற்றமை போலத் தொகையடியார்களாகிய கூட்டத்தினருக்குத் தனித்தனி உருவம் அமைக்க முடியாமையின் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு இலிங்கத் திருமேனியாக எழுந்தருளச் செய்திருக்கிறது. முத்தியடைந்த பெரு மக்களை உருவம் தெரிந்தால் உருவமைத்தும், உருவமைக்க முடியாததற்குச் சிவலிங்கம் தாபித்தும்,

அதுவுமில்லையானுல் பீடங்கள் அமைத்தும் வழிபடலாம் என்று ஆகமம் கூறுகிறது. ஆதலால் உருவம் அமைக்க முடியாத தொகையடியார்களைச் சிவலிங்கத் திருமேனி வாயிலாக வழிபட வேண்டித் திருத்தொண்டத்தொகை யீச்சரம் என்ற இக்கோயிலை அமைத்துள்ளார்கள். அன்றியும் திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தரர் வடக்கு வாயில் வழியாக வந்தார் என்பதும் ஊன்றிக் கவனிக்கத்தக்கது. இவ்வாலயம் "நவலிங்கம் கோயில்" என்று இப்பொழுது வழங்கப்படுகிறது.* "இக் கோயிலில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவுருவம் அமைக்கப் பெற்றதாகக் கல்வெட்டுக்கள் அறிவிக் கின்றன."‡

மூன்ரும் குலோத்துங்க சோழன் தனது 2 ஆவது ஆட்சியாண்டில் (கி பி. 1180ல்) நில அளவு செய்தான்; அப்போது அருமொழியீச்சரத்துச் சுப்பிரமணியப் பிள்ளை யாருடைய நிலங்களை எட்டாந்தரமாக்கி இறையிலி யாகச் செய்திருப்பதோடு, திருத்தொண்டத்தொகை யீச்சரமுடையார் திருக்கோயிலுள்ள இடமும் அதில் உள்ள குளம் முதலியனவும் இறையிலியாக்குமாறு உத்தரவு அளிக்கப்பெற்றன; பெரும்பற்றப் புலியூர்ச் சபையிலிருந்த நிலம் அளவுடைப் பெருமக்களால் இவ் வுத்தரவுகள் நிறைவேற்றப் பெற்றன. (இங்ஙனம் மூன்ரும் குலோத்துங்க சோழனது சிதம்பரக் கல் லெழுத்தினின்று அறிகிரும்.)

---

* தருமபுர ஆதீனத்து வெளியீடாகிய சிதம்பரம் என்னும் நூல்; பக்கம் 136. ‡ ஷை பக்கம் 44.

திருத்தொண்டத் தொகை விண்ணப்பித்தல்

தில்லை நடராசப் பெருமான் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் "**திருமன்னிவளர**" இரு நிலமடந்தையும் என்று தொடங்கும் கல்லெழுத்துமுளது. இத்தொடக்கமுள்ள மெய்கீர்த்தி முதல் இராசேந்திர சோழனுடையது என்பது வெள்ளிடை. ஆனால் இதில் 8ஆவது வரி வரையிலும் மெய்க்கீர்த்தி சரியாக உள்ளது. "திக்கணை கீர்த்தித் தக்கண லாடமும்" என்றதற்குப் பிறகு பிற கல்வெட்டுக்களில் காணப்படுவது போலக், "கோவிந்த சந்தன் மாவிழிந்தோட" என்பது முதலிய செய்திகள் காணப்படாமல், "வராகவெல்கொடி இராச பரிச்சின்னமும்" என்று செல்லுகிறது. "திருமன்னி வளர" என்ற மெய்கீர்த்திக்கு உரியவர் கோப்பரகேசரியாவர்; ஆனால் இம் மெய்கீர்த்திக்கு உரியவர் கோவிராசகேசரி இராசேந்திரன் எனப்பெறுகிறார். எங்ஙனமாயினும் சோழ மன்னர்களில் ஒரு இராசேந்திர சோழனது 24ஆம் ஆட்சியாண்டில், **தில்லையில்** மாசித் திருநாளில் **திருத்தொண்டத்தொகை விண்ணப்பிக்க** நிபந்தம் அளிக்கப் பெற்றது என்று அறியலாம். (S. I. I. Vol IV Page 30). "திருமாசித் திருநாளில் திருத்தொண்டத்தொகை விண்ணப்பம் செய்வார்க்குக் காசு ஐஞ்சும்" என்பது இக்கல்லெழுத்துப்பகுதி.

மக்கட்பெயர்

பிரான்மலைக் கல்வெட்டொன்றில் கையெழுத்திட்டவர்களுள் ஒருவர் திருத்தொண்டத்தொகையுடையார். மணிமங்கலம் என்னும் ஊர்க் கல்லெழுத்தில்

திருத்தொண்டத் தொகை மாணிக்கம் என்று ஒருவர் பெயர் காணப் பெறுகின்றது (277 of 1897). இதனுல் திருத்தொண்டத் தொகைப்பெயரால் மக்களும் வழங்கப் பெற்றமை தெளிவு.

திருத்தொண்டத்தொகை நல்லூர்

இரண்டாம் குலோத்துங்க சோழனின் 12 ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டொன்று களத்தூரில் உள்ளது (346 of 1911); சில நிலங்களைத் தேவதான இறையிலியாக்கிக் குலோத்துங்க சோழன் திருத்தொண்டத்தொகை நல்லூர் என்ற பெயரிட்டுத் தொண்டைமான் என்ற தலைவர்க்கும், வரியிலார், வரிக்கூறு செய்வார்க்கும் உத்தரவு அனுப்பிக்கப் பெற்றது.

முடிப்புரை

திருத்தொண்டத் தொகையின் பெயரால் அமைந்த குகை, மடம், கோயில், ஊர் என்பவைகளைக் காணின் திருத்தொண்டத் தொகையினிடத்துத் தமிழ் மக்களிடையிருந்த நன்மதிப்பும் பற்றும் நன்கு தெரியவரும். சைவப்பெருமக்கள் திருத்தொண்டத்தொகை ஓதி நன்னெறிப் படர்வாராகுக.

5. பொன்னார் மேனியன்

சுந்தரரும் திருமழபாடியும்

சுந்தரமூர்த்தி சுவாமிகள், தல யாத்திரையாகப் போகின்றவர், திருவையாறு திருப்பூந்துருத்தி முதலான பதிகளையடைந்து சிவபெருமானை வணங்கித் துதித்தார்; திருவாலம் பொழிலை யடைந்து வணங்கி அங்குத் துயில் கொள்ளுங்கால், அவருடைய கனவிலே சிவபிரான் எழுந்தருளி வந்து, "மழபாடியின் கண் வருவதற்கு நினைக்க மறந்தனையோ" என்று வினவித் தமது இளமை யாகிய திருக்கோலத்தைக் காட்டியருளச் சுந்தரர் துயி லுணர்ந்தெழுந்து காவிரியின் வடகரையில் ஏறிச் சென்று திருமழபாடியினை அணைந்தார்; திருக்கோயிலி னுட் சென்று இறைவனது அளக்கலாகாத கருணைத் திறத்தினைப் புகழ்ந்து, உள்ளமுருகிப் "பொன்னார் மேனியனே" என்று தொடங்கி, "அன்னே உன்னை யல்லால் இனி யாரை நினைக்கேனே" என்று துதித்துப் பதிகமாலையினைச் சாத்தினார்.[1]

பதிகக் குறிப்பு

இப்பதிகம் "பொன்னார் மேனியன்" என்ற தொடக்கமுடையது; "மழபாடியுள் மாணிக்கமே" என்று ஒவ்வொரு பாட்டிலும் விளி பெற்றுள்ளது; 5 ஆவது பாடல் "கண்ணாய், ஏழுலகும் கருத்தாய் அருத்தமுமாய்ப், பண்ணார் இன்தமிழாய்" என்று இறைவன் பெருமையை விளக்குவது. திருநாவுக்கரசர்,

---

[1] பெரிய புராணம்-ஏயர்கோன் கலிக்காமர் - செ. 71-74.

'மழபாடி மன்னும் மணாளர்' என்றும், 'மழபாடி வயிரத்தூண்' என்றும் பாடியிருக்கிறார். சம்பந்தர், 'கனவயிரத்திரள்' என்று பாடியுள்ளார். சுந்தரர், 'பொன்னார் மேனியன்' என்றதற்கேற்பத் திருநாவுக்கரசரும், **"பொன்னியலும் திருமேனி"** என்று மழபாடித் திருத்தாண்டகத்தில் பாடியருளினார்.

பொன்னார் மேனியன் திருமேனி

"பொன்னார் மேனியன்" என்ற தொடர் 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சேனாதிபதியின் மனத்தைக் கவர்ந்தது. அவர் **சேனாபதி அரையன் கடக்கங் கொண்ட சோழன் அணிமுரி நாடாழ்வான்** எனப் பெற்றார். அவர் 1051-1063 இல் அரசாண்ட இரண்டாம் இராசேந்திரன் என்ற சோழப் பேரரசரின் படைத் தலைவர்; முதல் இராசேந்திரனின் அணுக்கியர் ஐயாறன் செம்பொன் தங்கைக் கூத்தன் உத்தம சீலியார் என்பவரின் மகனார் ஆவர்; திருவையாற்றைச் சார்ந்தவர். அவர் திருமழபாடி கோயிலில் செம்பு தராவால் **"பொன்னார் மேனியன்"** என்று ஒரு திருமேனியை எழுந்தருளுவித்து, அதற்கு நாள் வழிபாட்டிற்கு நிபந்தம் அளித்ததோடு சில அணிகலன்களையும் அளித்தார்.[2]

நாள் வழிபாட்டிற்கு நாள் ஒன்றுக்கு நெல் தூணிப் பதக்காக நாள் 360 க்கு நெல் 180 கலம்; வேலி நூறு கலம் வீதம் வேண்டிய நிலம் 1¾ வேலி 1 மா. இதன் விலையாக 70 காசு கோயில் பண்டாரத்துக்குக் கொடுக்கப்பெற்றது; நாள் வழிபாட்டிற்கும் திட்டம் வகுக்கப்பெற்றது.

---

[2] S.I.I. Vol V No. 644.

தரப்பெற்ற அணிகலன்கள்

திருக்கழுத்துக்குச் சாத்த முத்துவடம், முத்தின் பூணுநூல், திருக்காதில் சாத்தும் கொள்கை, திருக்கைக் காறை, திருவடிக்காறை, முத்துக் குடை, செம்பில் பொன் பூசின மகுடம் முதலியன.

இங்ஙனம் இச்சேனாதிபதி அளித்ததிலிருந்து, இவர் சிவபெருமானிடத்தும் சைவசமய குரவரிடத்தும் பேரன்பு உடையவர் என்று அறிகிறோம்.

பொன்னார்மேனி பட்டர்

"பொன்னார் மேனி" என்ற தொடர் அக்காலத்து மக்களும் தம்பெயராகக் கொண்டிருந்தனர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுளது.[3] கோச்சடையபன்மரான திருபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவரது 3 ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று **பொன்னார் மேனி பட்டன்** என்ற ஒருவரைப் பற்றிக் கூறுகின்றது. திருமழபாடியுடையார் கோயில் ஆரியக் கண்காணி எதிரொப்பிலாதானான சுந்தரபட்டன் என்று ஒருவர் இருந்தார்; இவரையே முதுகண்ணாகவுடைய[4] இவர் அண்ணன், பெருமாள் பிள்ளையான அருளாளபட்டன் என்ற பெயருடையவர்; அவர் மகன் பெயர் **பொன்னார் மேனி பட்டன்** என்பது ஆகும். இவரது தாய் உமையாண்டாள் என்ற பெயருடையவள். இம்மூவரும் திருமழபாடியுடைய நாயனார்க்குத் திருமஞ்சனப் புறமாக எடுத்தபாத நல்லூரில் ஒரு கமுகந் தோட்டத்தை அளித்தனர்.

---

[3] S.I.I. Vol V No. 649.

[4] முதுகண்-உசாத்துணையாக இருந்து ஒழுக்க முறைகளைப் போதிப்பவர்.

இரண்டாங் குலோத்துங்க சோழனுடைய 15வது ஆட்சி யாண்டில்[5] திருமழுவாடி யுடையார்க்குச் சந்திராதித்தவல் இரவு பகல் நுந்தா விளக்கெரிக்க இருங்கோளப்பாடி திருவரங்கமுடையான் திருச்சிற்றம்பலமுடையான் இருங்கோளர் என்பார் சாவாமூவாச் செவ்வரியாடு 180 பொலிதகர் கிடாய் இரண்டுடன் அளித்தார். இத்தேவர்க்கு முன் திருநுந்தா விளக்குக் குடிகளாய் ஆடு கைக்கொண்டு நெய் அளந்து வருகிற மன்றாடிகளில் ஒருவர் **பொன்னார் மேனி வயிச்சிய நாதன்** என்ற பெயருடையவர்.

முதற் குலோத்துங்க சோழரது 45 ஆவது ஆட்சி யாண்டில்[6] திருமழுவாடி உடைய மஹா தேவர்க்கு இரவு பகல் சந்திராதித்தவல் திருநுந்தாவிளக்கு எரிப்பதற்குச் செவ்வரியாடு 90 விடப் பெற்றன. இங்ஙனம் அளித்தவர் சிற்றூர் உடையான் பெருமான் கற்பகமான களப்பாளராஜர் மகள், பூபாலசுந்தரனை சோழக் கோனார் தேவியார், கற்பகம் ராஜேந்திர சோழியார் என்பவராவர். இவரளித்த 90 ஆடுகளும் எண்மர்க்குப் பகிர்ந்தளிக்கப் பெற்றன; ஒவ்வொருவரும் நாள் ஒன்றுக்கு உழக்கு நெய் அளக்க வேண்டும். அவ்வெண்மருள் ஒருவன் **அரவணை பொன்னார் மேனி** என்ற பெயரினன்.

வயிரத்தூண்

ஒருவரால் 128 குழி நிலம் நான்கு பேரிடத்திலிருந்து விலைக்கு வாங்கப் பெற்றது.* அவர்களுள்

[5] S. I. I. Vol V No. 643 * Vol V No. 632
[6] do No. 640

ஒருவர் பெயர் ஆனைமங்கலமுடையார் பஞ்சநதி **வயிரத் தூண்** என்பதாம். இப்பெயர் "மழபாடி வயிரத்தூண்" என்ற திருநாவுக்கரசர் வாக்கை நமக்கு நினைவூட்டும்.

பொன்னூர் மேனி விளாகம்

திருபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டு வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் பண்ணியருளின ஸ்ரீ திரிபுவன வீரதேவரது[7] முப்பத்து நான்காம் ஆண்டுக் கல்வெட்டொன்றினால் "**பொன்னூர் மேனி விளாகம்**" என்று ஊரின் உட்பகுதியும் பெயரிடப் பெற்றதாக அறிகிறோம்.[8] திருமழபாடியுடையார் திருக்கோயிலில் ஸ்ரீ மாகேசுவரர்கள் சிலர் இருந்தனர். அவர்களுள் "**எயில் பாக்கிழான் விக்க விநாயகன் எம்பிரான் சம்பந்தன்**" என்ற பெயருடையவர் ஒருவர் இருந்தார். இவர் இத்திருக்கோவில் திருநாமத்துக்காணி[9] ஆகிய கலையமங்கலத்தில் 128 குழி நிலத்தில் "அழகிய பெருமாள்" என்னும் திருநாமத்தால் **திருநந்தவனம்** செய்தார்; இத் திருநந்தவனம் செய்கையில் இத்திருநந்தவனம் செய்யும் திருத்தொண்டர்களுக்குத் திருவமுதுக்கும் வேட்டிக்கும் உதவுவதற்குப் பல பகுதிகளில் உள்ள நிலத்தை விலைக்குக் கொண்டு அளித்தனன். இந்நிலத்துள் அரைமா பரப்புள்ள நிலப்பகுதி **பொன்னூர் மேனி விளாகத்தில்** இருந்தது எனப் பின்வரும் கல்லெழுத்துப் பகுதி விளக்கும் :—

---

7 குலோத்துங்கன் III (1178-1218)

8 S. I. I. Vol V No. 632.

9 திருநாமத்துக்காணி—சிவன் கோயில்களுக்கு அளிக்கப்பெறும் இறையிலி நிலம்.

"தஞ்சை திருவுடையான் கடிகை வேளான் பக்கல் விலை கொண்ட இந்நாயனார் தேவதானம் கண்டராதித்தச் சதுர்வேதி மங்கலத்துப் பிடாகை உலகுய்ய வந்த சோழநல்லூர்ப் பிறிந்த பொன்னார்மேனி விளாகத்துக் கண்டராதித்த வதிக்குக் கிழக்கு; குலமாணிக்க வாய்க்காலுக்கு வடக்கு; ஆறுங்கண்ணாற்று இரண்டாம் சதிரத்தும், ஏழாம் கண்ணாற்று இரண்டாம் சதிரத்தும் நிலம் அரைமா."

காவிரி ஆற்றிலிருந்து நாள் ஒன்றுக்கு ஒரு குடம் திருமஞ்சனம் கொணர்தற்காக இப் பொன்னார் மேனி விளாகத்தில் இருந்த அரைக்காணி நிலம், தானமாக ஹொய்சள வீரராமநாத தேவர் காலத்தில் விடப்பெற்றதென இன்னொரு கல்லெழுத்து அறிவிக்கிறது[10].

முடிப்புரை

இதுகாறும் கண்ட வாற்றால் பொன்னார் மேனி என்ற சுந்தரர் வாக்குப் பலராலும் பலபடித்தாக நினைவு கூர்ந்து போற்றப் பெற்றமை தெள்ளிதின் உணரப் பெறுகின்றது. இங்ஙனம் சமயகுரவர் வாக்குகளை நினைந்து போற்றுதல் கற்றறிந்தோரது கடமையாகும்.

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

(சுந்தரர்)

---

[10] S. I. I. Vol V No. 658.

6. திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்

ஆசிரியர்: இப்பிள்ளைத் தமிழின் ஆசிரியர் பகழிக் கூத்தர். இவர் தந்தை தர்ப்பாதனர். செம்பி நாட்டுச் சன்னுசிக் கிராமத்தவர். சன்னுசிக்கிராமம் என்பது சேது சமஸ்தானத்தைச் சார்ந்த ஓர் ஊர். இவர் வைணவ மரபினர். இதனை இந்நூல் சிறப்புப் பாயிரச் செய்யுளால் அறியலாம். அப்பாடல் வருமாறு :-

செந்தமிழ்க்கு வாய்த்ததிருச் செந்திற் பதிவாழும்
கந்தனுக்குப் பிள்ளைக் கவிசெய்தான்—அந்தேர்
திருமாது சேர்மார்பன் தேர்ப்பாகற் கன்பு
தருமால் பகழிக்கூத் தன்.

நூல்பாடிய வரலாறு : பகழிக் கூத்தர் ஒரு சமயம் வயிற்று நோயால் பெரிதும் வருந்தினர் ; மந்திரம் மருந்து ஆகிய எவற்றுலும் நோய் நீங்கவில்லை; திருச்செந்தூரை அடைந்தார்; செந்திப்பதிபுரக்கும் செவ்வேள்மேல் இப் பிள்ளைத் தமிழைப் பாடினர்; நோய் நீங்கியது.

நூல் அரங்கேற்றம்: இந்நூல் செந்தில் வேலவர் சந் நிதியில் அரங்கேற்றப் பெற்றது. அவையினர் இந் நூலைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி எய்தினர்; பிள்ளைத் தமிழின் சொல் நயம் பொருள் நயங்களைக் கேட்டு வியந்த னர்; பற்பல சந்தங்கள் கொண்ட பாடல்களைக் கேட்டு விம்மிதம் எய்தினர்; எனினும் இப்புலவர் பெருமான் மரியாதை செய்யப் பெறவில்லை! புலவர் இதனைப்

பொருட் படுத்துவாரா? நூல் அரங்கேற்றம் இனிதே முடிவுற்றமைக்கு மகிழ்ந்தார்; வீடு திரும்பினர். அடியவர் தம் அல்லல் தீர்க்கும் அருமருந்து—தமிழால் வைதாரையும் வாழவைக்கும் அலவாய்ப் பெருமான்—வாளா விருப்பாரா? பெருமானுக்குச் சாத்தப்பெற்றிருந்த மாணிக்க மாலை காணமற் போயிற்று! இரவில் வெகு நேரம் கழித்தே கோயிலார் அறிந்தனர்; ஊரெங்கும் தேடினர். என்ன வியப்பு! பகழிக் கூத்தர் கழுத்தில் அஃது அணியப்பட்டிருந்தது! புலவரை வணங்கினர். அவரைப் பல்லக்கில் வைத்து ஊர்வலம் செய்வித்துத் தக்க மரியாதைகள் செய்தனர்.

இவரியற்றிய வேறு நூல்: இவரியற்றிய வேறு நூல் சீவக சிந்தாமணிச் சுருக்கம் என்பது. 'இதன் முகப்பில் எழுதப்பட்டுள்ள குறிப்பில் செம்பி நாட்டுச் சன்னுசிக் கிராமத்துத் திருப்புல்லாணி மாலடியான் தர்ப்பாதனன் மகன் பகழிக் கூத்தன் வாக்கு' என எழுதப்பட்டுள்ளது. இந்நூலினுள்ளே முதற்கண் விநாயக சுப்பிரமணிய ஸ்துதிகள் கூறப்பட்டிருத்தலோடு, சில இலம்பகங்களின் தொடக்கத்தே முருகக்கடவுளின் தோத்திரங்கள் தனித்தும் வருகின்றன. இதனால் ஸ்ரீ சுப்பிரமணிய பத்தியிற் சிறந்து விளங்கிய இப்பகழிக் கூத்தரே இச் சிந்தாமணிச் சுருக்கமும் பாடினவராதல் வேண்டும் என்று கருதத் தடையில்லை - என்று திரு. மு. ராகவ ஐயங்கார் அவர்கள் தமிழாராய்ச்சித் தொகுதியில் எழுதியுள்ளார்.

"இவர் காலம் இன்னதென்று துணியக்கூடவில்லை யேனும் திருப்புகழ் பாடிய அருணகிரி நாதர் காலத்தவராகச் சங்கித்தற்கு இடமுண்டு" என்பர்.

சிற்றுராய்ச்சி

முருகப் பெருமான்: அயன் பிரணவத்தின் பொருளைப் புகலாததால் முருகன் அயனைச் சிறைப்படுத்தியது, ‘அஞ்சத் திருக்குமயன் அஞ்சச் சிறைக்குளிடு மப்பா’ (செ. 39) என்ற விடத்துக் கூறப்பட்டது. இன்னும் இப்பாடலில் முருகனைப் பொதிகை மலைக்குரியவன் என்பதைப் ‘பண்டைக் குடத்திலுறுமுண்டச் சிறுத்த முனி பற்றுசை யுற்று மிகவாழ் சந்தப் பொருப்பிறைவ’ என்றும், ‘சங்கத் தமிழ்ப் புலவன்’ என்றும் ஆசிரியர் குறித்துள்ளார்.

முருகன் திருவவதார வரலாறு செய்யுள் 43இல் கூறப்பெற்றது. அது வருமாறு:—

கலைப்பால் குறைத்த பிறைமுடிக்குங்
கடவு ளுடலின் விளைபோகம்
கனலி கரத்தி லளிக்கவந்தக்
கனலி பொறுக்க மாட்டாமல்

மலைப்பால் விளங்கும் சரவணத்தில்
வந்து புகுத வோராறு
மடவார் வயிறு சூலுளைந்து
மைந்த ரறுவர்ப் பயந்தெடுப்பக்

கொலைப்பால் விளங்கும் பரசுதரன்
குன்றி லவரைக் கொடுசெல்லக்
கூட்டி யணைத்துச் சேரவொரு
கோல மாக்கிக் கவுரிதிரு

முலைப்பால் குடித்த கனிவாயால்
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே.

செய்யுள் 37 இல் ‘சிவ மழ விடை’ யென்றும், செய்யுள் 44 இல் ‘சமய மனைத்தினுக்கும் முதல்வர்’ என்றும், செய்யுள் 47 இல் ‘குறுமுனிக்குத் தமிழுரைக்கும் குழவி’ என்றும், செய்யுள் 99 இல் ‘சடாக்ஷர’ என்றும் முருகப் பெருமான் பேசப்படுகிறார்.

முருகப் பெருமானது ஆறுபடை வீடுகளும் 80 ஆவது பாடலில் கூறப்பெற்றது :—

அறந்தரு புரந்தரா தியருலகி லரமகளி
ராடுமணி யூசல் சிற்றில்
அம்மனை கழங்குபல செறியுந் தடஞ்சாரல்
அருவிபாய் பரங்கிரியுமுட்

புறந்தரு புனிற்றுவெள் வளைகடற் றிரைதொறும்
பொருதசீ ரலைவாயு மென்
போதுகமழ் திருவாவி னன்குடியு மரியமறை
புகலுமே ரகமு மினிமைக்

குறந்தரு கொடிச்சியர் பெருங்குரவை முறைகுலவு
குன்றுதோ றாட லுந்தண்
கொண்மூ முழங்குவது கண்டின மெனக்காட
குஞ்சரம் பிளிறு மரவஞ்

சிறந்தபழ முதிர்சோலை மலையும் புரந்தநீ
சிறுபறை முழக்கி யருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கி யருளே.

முருகப்பெருமானைத் தமிழாற் பாடியவர் பலர் என்பது 'வழுவறு தமிழ்ப் பனுவல் முறை முறை யுரைத்து வெகு வரகவிஞர் உட்குழைய......சிறுபறை முழக்கி யருளே' என்ற 81 ஆம் பாடற் பகுதியால் அறியப்பெறும்.

'பாவாணர் மங்கலக் கவி வாழி பாடிப் பரிந்து திண்டிமம் முழக்க' (செ. 77) 'பண்டரு பெருங் கவிப் புலமைக்கு நீ சொன்னபடி திண்டிமம் கொட்ட' (செ. 32) என்ற பாடற் பகுதிகளில் திண்டிமம் என்ற ஒரு வாத்தியம் குறிக்கப் பெற்றுள்ளது. இவ்வடிகளி னின்று "பகழிக் கூத்தர் காலத்தே அக்கடவுளதருளாற் பெற்ற திண்டிம வாத்தியத்தைத் தம் பெருங் கவிப் புலமைக் கறிகுறியாக முழக்கிக் கொண்டு சீரிய கவிஞர் சிலர் திருச்செந்தூர்க் கடவுள் திருமுன்பு மங்கலக் கவி பாடி வந்தனர்" என்றறியலாம். அன்றியும் "இவற் ருல் திண்டிம வாத்தியம் ஆசுகவி பாடவல்ல புலவரால் தம் புலமைக் கறிகுறியாகக் கொள்ளப்பட்ட தொன்று என்றும், அதனை அக்கவி பாடா நின்றே ஒலிப்பிப்பது வழக்கம் என்பதும் அறியப்படும். 'பண்தரு பெருங் கவி' என்றதனுல் ஓசை யின்பமும் நீட்சியுமுடைய சந்தக் கவிகளாக அவற்றைக் கொள்ளுதல் பொருந்தும். அத்தகைய திண்டிம கவியாகப் பகழிக் கூத்தராற் சிறப் பிக்கப் பெற்ருேர் அருணகிரிநாதரே" என்று சாஸனத் தமிழ்க்கவி சரிதத்தில் (பக்கம் 129-130) மு. ரா. எழுதி யுள்ளார்.

முருகப் பெருமான் முத்தொழிலும் செய்பவர் என்பது, "அகலிடத்தை யடையவே படைத்தும் படைத்தபடி யளித்தும் துடைத்தும் முத்தொழிலும்

கூடும் பெருமை யுனக்குளது '' என்ற 87 ஆம் செய்யுட் பகுதியிற் காணலாம்.

உமையம்மையார் இழைத்த சிற்றில் இன்னது என் பதைப் பின்வரும் (88ஆம்) செய்யுளிற் கூறப் பெற்றது:-

புற்றி லரவந் தனைப்புனைந்த
புனிதருடனே வீற்றிருக்கப்
பொலியுந் திகிரி வாளகிரிப்
பொருப்பை வளர்த்துச் சுவராக்கிச்

சுற்றில் வளர்ந்த வரையனைத்துஞ்
சுவர்க்கா லாக்கிச், சுடரிரவி
தோன்றி மறையுஞ் சுருப்பைவெளி
தொறுந்தோ ரணக்கா லெனநாட்டி,

மற்றி லுவமை யெனுங்கனக
வரையைத் துளைத்து வழியாக்கி,
மாக முகிலை விதானமென
வகுத்து, மடவா ருடன்கூடிச்

சிற்றி லிழைத்த பெருமாட்டி
சிறுவா சிற்றில் சிதையேலே
திரைமுத் தெரியுஞ் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே.

முருகன் இன்ன தன்மையன் என்பது 98ஆம் பாட்டில் கூறப்பட்டது. அது வருமாறு:—

ஆதிநூன் மரபாகி, யதனுறும் பொருளாகி,
அல்லவை யனைத்து மாகி,
அளவினுக் களவாகி, அணுவினுக் கணுவாய்,
அனைத்துயிரு மாகி, அதனின்

சாதியின் பிரிவாகி, வெவ்வேறு சமயங்கள்
தானாகி, நானாகி, மெய்ச்
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
தன்னொளியி லீலை யாகி,

ஓதிய(து) அனைத்தினும் அடங்காமல் வேறாகி,
உள்ளும் புறம்பும் ஆகி;
ஒளியிலொளி யாகி,மற் றிரவுபக லற்றவிட
மொப்புவித் தெனையி ருத்தித்

தீதினை யகற்றிநின் றிருவருள் புரிந்தவா
சிறுதே ருருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதே ருருட்டி யருளே.

முருகனே திருஞான சம்பந்தராகத் திருவவதாரஞ் செய்தார் என்பது இவ்வாசிரியர் கருத்து. 'ஒரு வேடுவன் பறவைக்கு நிறை புகுந்த பார்த்திவன் பாவையும் இயற் குலச்சிறையும் பணிந்தருள மதுரைபுக்கு...சைவ நெறி ஈடேற வரு கவுணியக் குழவி' (செய்யுள் 33); 'கலை தெரி புகலி வளமுற மருவு கவுணிய வருக' (செய்யுள் 61); 'கன்றும் அமண் கழுவேறக் காழிப்பதியில் வந்துதித்துக் கள்ளப் பரசமயக் குறும்பர் கலக மொழித்துக் கட்டழித் தாய்' (செய்யுள் 90) என்பனவற்றுள் காண்க.

வறலாறுகள்

சிபியின் வரலாறு, "ஒரு வேடுவன் பறவைக்கு நிறை புகுந்த பார்த்திவன்" என்று செய்யுள் 33 இல் குறிக்கப் பெற்றது.

திருஞானசம்பந்தர் மங்கையர்க்கரசியார் குலச் சிறையார் ஆகிய இருவர் வேண்டுகோளின்படி மது

ரைக்குச் சென்றது; சம்பந்தர் எழுந்தருளி யிருந்த திரு மடம் எரி கொளுவப் பெற்றது; அத்தீ பையவே சென்று பாண்டியற் காயது; பாண்டியனது வெப்புத் தீர்த்தது; கூன் நிமிர்ந்தது; சமணரை வாதில் வென்றது; தீயில் சம்பந்தர் இட்ட பதிகம் வேகாதிருந்தது; சம்பந்தர் இட்ட ஏடு எதிரேறிச் சென்றது; கழுவில் சமணர் ஏறியது—ஆகிய இவற்றை யெல்லாம் செய்யுள் 33-இல் காணலாம்.

அகத்தியரைக் குறித்துப் ''பண்டைக் குடத்திலுறு முண்டச் சிறுத்த முனி பற்ருசை யுற்று மிக வாழ் சந்தப் பொருப்பு'' என்றதினின்று அறியப்படும் (செய்யுள் 39.)

நக்கீரர் பூதத்தால் சிறைப்படுத்தப் பெற்றதும், முருகப் பெருமான் திருவருளால் சிறை வீடு செய்யப் பெற்றதும், செய்யுள் 13-இல் காணலாம். அப்பாடலிற் கண்ட வரலாறு: ஒரு பொய்கைக் கரையில் ஒரு பெரிய அரசமரம்; அதன் இலையொன்று நீரிலும் நிலத்திலும் பொருந்த விழுந்தது; நீரில் விழுந்த பகுதி மீனுயிற்று; நிலத்தில் விழுந்தது பறவையாயிற்று; அவை யொன்றை யொன்று கவ்வி ஈர்த்தன. இவ்வதிசயத்தை நக்கீரர் பார்த்து நின்ருர். அப்பொழுது ஒரு பூதம் இவரை எடுத்துச் சென்று ஒரு குகையில் அடைத்தது. (அக்குகையில் 999 பேர் இருந்தனர்.) எல்லோரும் அச் சிறையினின்று நீங்க நீதிநூல் (திருமுருகாற்றுப்படை) பாடினுர். அறுமுகப் பெருமான் மயில்மிசை இவர்ந்து தோன்றி அனைவர்க்குஞ் சிறைவீடு செய்தருளினுர் —என்பதாம்.

இறையனார் களவியல் யாத்தமையும், பரணர் முதலிய பல புலவர் அந்நூலுக்குரை கண்டமையும், முருகப் பெருமான் சிறந்த பொருள் விரித்தமையும் 46ஆம் பாடலில் விவரிக்கப் பெற்றுள்ளது. முருகப்பெருமான் களவியற்குரை வகுத்தமை குறித்துப் பின் வரும் இறையனார் களவியலுரைப் பாயிரப் பகுதிகளால் தெரியலாம்:—

'இவ்வூர் உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திர சன்மன் என்பான்...... ஐயாட்டைப் பிராயத்தான் ஒரு மூங்கைப் பிள்ளையுளன்; அவனைக் கொண்டுபோந்து ஆசனமேலிரீஇக் கீழிருந்து சூத்திரப்பொருளுரைத்தால், கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிக்கும் மெய்யாயின உரைகேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளாவிருக்கும்; அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தினால் தோன்றினான்.........' உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திர சன்மன் செய்தது இந்நூற்குரை என்பாருமுளர்; அவர் செய்திலர், மெய்யுரை கேட்டார் என்க.'

தக்கன் வேள்வி தகர்த்தது 66 ஆம் செய்யுளில் விரிவாயுள்ளது, சூரியன் பல்லை உகுத்தது, வெள்ளி விழியைக் கெடுத்தது, இந்திரன் பறந்து சென்றது, நான்முகன் சென்னியைத் திருகியது, தக்கன் சிரத்தை யறுத்தது, அழற்கடவுள் கைத்தல மறுத்தது—ஆகியவை இப்பாடலுள் கூறப்பெற்றுள்ளன.

அடிமுடி தேடிய வரலாறு 71 ஆம் செய்யுளிலும், பாரதப் போர் 74ஆம் செய்யுளிலும் கூறப்பெற்றுள்ளன.

பிள்ளைத் தமிழ்ப் பருவப் பெயர்களுள் சில ஒரு பாட்டில் (89) கூறப் பெற்றுள்ளன. அப்பாடற் பகுதி வருமாறு:—

மிஞ்சுங் கனக மணித்தொட்டின்
மீதே யிருத்தித் தால்உரைத்து
வேண்டும் படிசப் பாணிகொட்டி
விருப்பாய் முத்தந் தனைக்கேட்டு

நெஞ்சு மகிழ வரவழைத்து
நிலவை வருவாய் எனப்புகன்று
நித்த லுனது பணிவிடையி
னிலைமை குலையே நீயறிவாய்.

இனி இப்பாடலில் எஞ்சியுள்ள அடிகளில் எண்ணலங்காரம் பயின்றமை காண்க:—

பிஞ்சு மதியின் ஒருமருப்புப்
பிறங்கும் இருதாள் கவுட்சுவடு
பிழியுங் கரட மும்மதத்துப்
பெருத்த நால்வாய்த் திருத்த மிகு
அஞ்சு கரக்குஞ் சரத்துணையே.

திருமால்பற்றிய செய்திகள் பல இந்நூலிற் கூறப் பெற்றுள்ளன: ஏறு தழுவியது; குருந்தொசித்தது; குழலூதிப் பசுக் கூட்டங்களை மேய்த்தது; கஜேந்திரனுக்கு முத்தியளித்தது (செ. 71); பார்த்தனுக்குச் சாரதியானது (செ. 74); இடையர் மனையில் தயிர் வெண்ணெய் திருடியுண்டது; சகடுருட்டியது (செ. 95) என்பனவாம்.

வடசொல்லாட்சி: மந்த்ரசாலை (செ. 35), ப்ரசண்டம் (செ. 3) முதலிய வடமொழிக் கூட்டெழுத்துக்களை ஆளும் முறை இந்நூலிற் காணலாம்.

ஆசிரியர்க்கு முருகன் மாட்டுள்ள மீளா அன்பை "ஆவித் துணையே வழியடிமை" (செ. 92), "காப்பான் அழிக்கத் தொடங்கில் எங்கள் கவலை எவரோடினி யுரைப்போம் ஐயா உனது வழியடிமை" (செ. 93) என்ற பாடற் பகுதிகள் வலியுறுத்தும்.

"பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால் வாராதிருக்க வழக்குண்டோ" என்பது படித்து மகிழத் தக்கது.

எங்கும் செந்தமிழ் மணக்கும் என்பது பின்வருஞ் (96 ஆம்) செய்யுளால் அறியலாம்:

கொந்தவிழ் தடஞ்சாரல் மலயமால் வரைநெடுங்
குடுமியில் வளர்ந்த தெய்வக்
கொழுந்தென்ற லங்கன்றும், ஆடகப் பசுநிறங்
கொண்டுவிளை யும்பரு வரைச்

சந்தன நெடுந்தரு மலர்ப்பொதும் பரும்,இயல்
தண்பொருநை மாநதி யும்,அத்
தண்பொருநை பாயவிளை சாலிநெற் குலையும், அச்
சாலிநெற் குலைப டர்ந்து

முந்தவிளை யும்பரு முளிக்கரும் பும்,பரு
முளிக்கரும் பைக்க றித்து
முலைநெறிக் கும்புனிற் றெருமைவா யும்,சிறுவர்
மொழியும், பரந்த வழியும்,

செந்தமிழ் மணக்கும் திருச்செந்தில் வேலனே
சிறுதே ருருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதே ருருட்டி யருளே.

7. ஆணை நமதே

தோற்றுவாய்

இறைவனுடைய திருவருள் பெற்ற பெரியோர்கள், "இகலொடு செற்றம் நீக்கிய மனத்தினர்; யாவதும் கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்; காமமொடு கடுஞ்சினம் கடிந்த காட்சியர்; இடும்பை யாவதும் அறியா இயல்பினர்" என்று திருமுருகாற்றுப் படையில் கூறியவண்ணம் திகழ்பவர் ஆவர். அன்னோர்தம் செயல்கள் எல்லாம் இறைவனுடைய செயல்களாகவே கருதப்படும். அவர்களும் ஆணையிடும் நிலைகள் ஏற்படக்கூடும்! மன்பதைகளிடத்து அவர்களுக்குள்ள எல்லையற்ற கருணை காரணமாகவே அவர்கள் ஆணையிட வேண்டிவருகின்றது. அப்பொழுது அவர்கள் யார் பேரில் ஆணையிடுவது? இறைவன் பேரில் ஆணையிடலாம்! ஆனால் அவர்கள் வேறு இறைவன் வேறு அல்லவே! அவர்கள் சொல்லும் செயலும் எல்லாம் இறைவனது செயலாகுமே! ஆகவே இறைவன் பேரில் அவர்கள் ஆணையிடார். அவர்கள் இடும் ஆணையும் உறுதி கூறும்பொருட்டே நிகழ்வதாகலின் அவர்கள் "ஆணை நமதே" என்று கூறுவராவர். இங்ஙனம் "ஆணை நமதே" என்று திருஞான சம்பந்தர் நான்கிடங்களில் கூறியுள்ளார்.

திருநனிபள்ளியில்

திருஞானசம்பந்தர் சைவ சமய குரவர் நால்வருள் ஒருவர்; சீகாழிப் பதியில் திருவவதாரம் செய்தார்;

மூன்ருவது வயதிலேயே சீகாழிப் பிரமதீர்த்தக் கரையில் உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப்பெற்றுச் சிவ ஞான சம்பந்தர் ஆயினர். இவரது முதலாவது தலயாத்திரை திருக்கோலக்காவிற்குச் சென்றமையாகும். அங்குச் சிவபெருமான் திருவருளால் திருவைந்தெழுத்து எழுதப் பெற்ற செம்பொற்ருளங்களைப் பெற்ருர். இனி இவரது இரண்டாவது தலயாத்திரை திருநனிபள்ளிக்குச் சென்றமையாகும். திருநனிபள்ளி இவரது தாயாகிய பகவதியாரின் பிறந்தகமாகும். திருநனிபள்ளி மறையவர்கள் சம்பந்தரைத் தம் திருப்பதிக்கு எழுந்தருளுமாறு வேண்டிக்கொண்டனர். சம்பந்தரும் தம் தந்தையாராகிய சிவபாதவிருதயரின் தோள்மீது அமர்ந்து திருநனிபள்ளிக்கு எழுந்தருளினர்; அங்குக் "**காரைகள் கூகை முல்லை**" என்ற திருப்பதிகம் பாடினர்; அத் திருப்பதிகத்தின் இறுதிப் பாடலில் தாம் தந்தையாரின் திருப்புயங்களில் அமர்ந்து திருப்பதிகம் பாடியதையும், 'திருநனிபள்ளியை நினைப்பவருடைய வினைகள் கெடுவதற்கு **ஆணை நமதே**' என்றும் குறித்தருளினர். இதோ அப்பாடல்:—

கடல்வரை ஓதம்மல்கு காழிகானல் பானல்
கமழ்காழி என்று கருதப்
படுபொரு ளாறுநாலும் உளதாக வைத்த
பதியான ஞான முனிவன்
இடுபறை யொன்றஅத்தர் பியன்மேல் இருந்(து)இன்
இசையால் உரைத்த பனுவல்
நடுவிரு ளாடும்எந்தை நனிபள்ளி உள்க
வினைகெடுதல் ஆணை நமதே.

[பொருளாறு நாலும்-ஆறு அங்கங்களும், நான்கு வேதங்களும் ; பதியான-பதியில் உதித்த ; ஞான முனிவன்-திருஞான சம்பந்தர் : அத்தர்-தந்தை ; பியல்-தோள் ; பனுவல்-பதிகம் ; நடுவிருள் ஆடும் எந்தை-சிவபெருமான் ; உள்க-நினைத்தால்.]

திருவேதிகுடியில்

திருஞானசம்பந்தர் (ஐந்தாவது தலயாத்திரையில்) காவிரி யாற்றின் வடகரையிலே மேற்கு நோக்கிச் சென்றார் : திருவையாறு முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டே திருநணு*வரையில் சென்று, பின்னர்க் காவிரியின் தென் கரையிலுள்ள தலங்களைத் தரிசித்துக் கொண்டே திரும்பித் திருக்கண்டியூர் திருச்சோற்றுத் துறை முதலிய தலங்களைத் தரிசித்துப் பாடிப் பரவி, வேதியர் வாழும் திருவேதிகுடியை அடைந்தார்; அங்குப் பாடிய பதிகத்தில் பதினோராவது பாடலில் "திருவேதி குடியிலுள்ள சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தை செய்ய வல்லவர்கள் நல்லவர்கள் என்று கருதப் பெறுவார்கள்; அம்மையில் தேவருலகெய்தி அரசாள்வர்; அது உண்மை: **"ஆணை நமது"** என்று குறித்தார். அப்பாடல் வருமாறு:—

கந்தமலி தண்பொழில்நல் மாட மிடை
    காழிவளர் ஞானமுணர்சம்
பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு
    வேதிகுடி ஆதிகழலே

---

* பவானி என்ற தலம்.

சிந்தைசெய வல்லவர்கள் நல்லவர்கள்
என்னநிகழ் வெய்திஇமையோர்
அந்தவுல கெய்தியர சாளும்அது
வேசரதம் ஆணைநமதே.

[கந்தம்மலி-வாசனைமிகுந்த; ஆதிகழல்-சிவபெருமானுடைய திருவடிகள்; நிகழ்வு எய்தி-இம்மையில் அடைந்து; இமையோர்-தேவர்; சரதம்-உண்மை.]

திருமறைக்காட்டில்

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருமறைக் காட்டிற்குச் சென்று மறைகளால் மூடப்பெற்றிருந்த திருக்கோயில் திருக்கதவினைப் பாட்டுப்பாடித் திறந்தும் மூடியும் அற்புதம் நிகழ்த்தினர்; நாளும் இன்னிசைப் பாமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி இறைவனைப் போற்றித் திருமறைக் காட்டில் தங்கியிருந்தனர். இங்ஙனம் நிகழும் நாளில், பாண்டி நாட்டில் பாண்டிய அரசனாக இருந்தவன் நெடுமாறன் என்ற பெயரினன்; சமணசமயச் சார்பினன்; அவன் மனைவி மங்கையர்க் கரசியார், மந்திரி குலச்சிறையார்; இவ்விருவர் மட்டும் சைவ சமயத்தைச் சார்ந்தவராய் இருந்தனர். 'சமண சமயத்தைப் போக்கிச் சைவத்தை நிலைநாட்டக் கூடியவர் திருஞானசம்பந்தரே' என்று உணர்ந்து இவ் விருவரும் சிலரைச் சம்பந்தரிடம் அனுப்பினர்; அவர்கள் வேண்டுகோட்படி சம்பந்தரும் மதுரைக்குப் போக இசைவு தந்தார். சம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளும் செய்தியை அறிந்த திருநாவுக்கரசர் சம்பந்தரை நோக்கி, "பிள்ளாய்! சமணர்கள் மிக்க வன்மை மிக்கவர்கள்; இப்பொழுது கோள்களும் தீமை பயக்கும் நிலையில் உள்ளன; ஆகவே தாங்கள் மதுரைக்கு ஏகுவது

தகாது " என்று கூறினர். உடனே திருஞான சம்பந்தர், "நாம் சிவபெருமானின் திருவடிகளைத் துதிக்கிறோம்; ஆதலான் அடியார்களாகிய நம்மைக் கோள்களும் நாளும் துன்புறுத்த மாட்டா; இதற்கு ஆணை நமதே " என்ற பொருள் பொதிந்த ஒரு பதிகம் பாடினர். இது **கோளறு பதிகம்** எனப்பெறும். இப் பதிகத்தின் பதினோராவது பாடல் பின்வருமாறு :—

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொன் மாலைஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

சீர்காழியில்

திருஞானசம்பந்தர் சீர்காழியில் வீற்றிருந்த பொழுதெல்லாம் பல திருப்பதிகங்கள் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று 'மடல்மலி கொன்றை' என்பது; இதன் இறுதிப் பாடலில் '**ஆணையும் நமதே**' என்று கூறப்பெற்றுள்ளது. அப்பாடல் வருமாறு :—

கானலங் கழனி ஓதம்வந் துலவுங்
கழுமல நகருறை வார்மேல்
ஞானசம் பந்தன் நற்றமிழ் மாலை
நன்மையால் உரைசெய்து நவில்வார்
ஊனசம் பந்தத் துறுபிணி நீங்கி
உள்ளமும் ஒருவழிக் கொண்டு
வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார்
மற்றிதற்(கு) ஆணையும் நமதே.

ஆணை நமதென்ன வல்லான்

இங்ஙனம் நான்கு இடங்களில் திருஞான சம்பந்தர் "ஆணை நமதே" என்று கூறியுள்ளமை இதுகாறும் கண்ட பாடல்களால் அறியப் பெறும். திருநாரையூர்ச் சைவ அந்தணரும், சிவபாத சேகரனுகிய முதலாம் இராச ராச சோழன் திருமுறைகளை வகுத்ததற்கு உதவி புரிந்தவரும் ஆகிய நம்பியாண்டார் நம்பிகள் இச் சிறப்பினை நன்குணர்ந்தவர்; ஆகவே அவர் தாம் பாடிய ஆளுடைய பிள்ளையார் திருத்தொகையில் திருஞான சம்பந்தரை 'ஆணை நமதென்னவலான்' என்று குறித் தருளினர். அந் நூற்பகுதி பின் வருமாறு:—

"முத்திப் பகவ முதல்வன் திருவடியை
அத்திக்கும் பத்தர்எதிர் ஆணைநம தென்னவலான்"
(வரி 44—5)

ஆணைநம தென்ற பெருமாள்

"ஆணை நமது" என்றவர் திருஞான சம்பந்தர் என்பது உறுதியாகலின் திருஞான சம்பந்தரைத் தமிழ் நாட்டுச் சைவப்பெரு மக்கள், "ஆணை நமதென்ற பெருமாள்" என்றும் குறிப்பிடலாயினர். அப் பெயரைத் தாமும் பூண்டனர் என்பதைக் கல்வெட்டு ஒன்றிலிருந்து அறியலாம்.

கல்லெழுத்தில்

"ஆணை நமதென்ற பெருமாள்" என்ற பெயர் பிரான்மலைக் கல்வெட்டு ஒன்றில் காணப் பெறுகின்றது. பிரான்மலை, இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்திலுள்ளது. இவ்வூர்ச் சொக்கநாதர் கோயிலில்

அரசன் பெயர் குறிக்கப்படாத கல்வெட்டொன்றுண்டு. இக் கல்வெட்டு 1903 ஆம் ஆண்டுக்குரிய 152 எண் கொண்ட சாசனமாகத் தென்னிந்திய சாசனங்கள் VIII வது பகுதியில் 440 எண் கொண்ட சாசனமாக வெளியிடப் பெற்றுள்ளது. இவ்வூர், திருமலை நாட்டுத் திருக்கொடுங்குன்றம் என்று குறிக்கப் பெற்றுள்ளது. இவ்வூர் அழகிய சிற்றம்பலமுடைய நாயனார் திருக் கோயிலும், திருக்குளமும், மடமும், திருமடைவிளாக மும் பதினெண் விஷையத்தார் ரக்ஷையாக இருந்தது. இக்கோயில் பெருமானுக்குத் திருப்படி மாற்றுக்கும், திருப்பணிக்கும், திருப்பரிவட்டம் திருமேற்பூச்சு மற்று முள்ள நிபந்தனைகளுக்கும் ஆகச் சில வரிகளைக் கோயி லாரே வசூலித்துக் கொள்ளுமாறு திசை ஆயிரத்தைஞ் ஞூற்றுவரும் பதினெண் விஷையத்தாரும் உத்தரவு கொடுத்தார்கள். இத்தன்ம சாசனத்தில் கையெழுத்திட்ட பதினெண் விஷையத்தாருள் ஒருவர் பட்டமுடையார் ஆணை நமதென்ற பெருமாள் எனப்பெற்றார்.

கல்லெழுத்தில் கண்ட பிற பெயர்கள்

கையெழுத்திட்டவர்களுள் இன்னொருவர் கோவி லூர் உடையார் சிவபத்தர்; மற்றொருவர் உறத்தூருடை யார் திருத்தொண்டத் தொகையுடையார்; பின்னும் ஒருவர் அழிசிற் பாக்கமுடையார் பத்தர்க்கருள்செய்வார்; இன்னும் ஒருவர் நாட்டார் பள்ளி யுடையார் திருநீறு பரப்பினார் என்பவர்.

பெயர் விளக்கம்

ஆணை நமதென்ற பெருமாள் என்பது திருஞான சம்பந்தரைக் குறிக்கும். சிவபக்தி மிக்குள்ளமையைக்

குறிப்பதாய் அமைந்தது **சிவபக்தர்** என்ற பெயர். **திருத்தொண்டத்தொகை** என்பது சுந்தரர் பாடிய திருப்பதிகங்களுள் ஒன்று ; சேக்கிழார் பெரியபுராணம் பாடுவதற்கு அடிப்படை நூலாயமைந்தது. அப் பதிகம் சிவனடியார்களைத் துதிக்கு முகத்தான் சிவபெருமானைப் பாடியதாகலின் **"திருத்தொண்டத் தொகையான்"** என்பது சிவபெருமானைக் குறிக்கும். திருத்தொண்டத் தொகையைப் பாடிய காரணத்தான் சுந்தரரைக் குறிப்பதாகக் கொண்டாலும் அமையும். திருத்தொண்டத் **தொகையின் பெயரால் குகை, திருமடம், கோயில்** முதலியன பண்டைக் காலத்தில் அமைக்கப் பெற்றிருந்தன என்பதை இந்நூல் 3ஆம் கட்டுரையுட் காண்க.

முடிவுரை

இதுகாறும் கூறியவாற்ருன் **'ஆணை நமது'** என்று கூறியவர் சம்பந்தர் என்பதும், அதனுனே **'ஆணைநமதென்ற பெருமாள்'** என்று சம்பந்தர் அழைக்கப் பெற்ருர் என்பதும் அறிகின்ருேம். பிற்காலச் சோழப் பேரரசு சிறப்புற்ற காலத்தில்—சமய மறுமலர்ச்சி ஏற்பட்ட காலத்தில்—மக்கள் சமயச் சார்பான பெயர்கள் பூண்டனர்; அப் பெயர்கள் தாமும் சமய குரவர் வரலாறுகளை நினைவூட்டுவனவாய் அமைந்தன. இச் செய்திகள் சமய அறிவு படைத்த தமிழ்ப்பெரு மக்களுக்கு இன்பம் பயக்கும் என்பது உறுதி.

8. பரிப் பெருமாள்

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னேடு பகர்ந்ததற்பின்–போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

—நத்தத்தனார்.

பலவுரை யுடையன

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து' நல்லிசைப் புலவர்கள் அருளிய பல திறத்த நூல்களுள் மறைந்தனபோக எஞ்சியிருக்கும் நூல்கள் பல. அவற்றுள் தொன்மைச் சிறப்போடு ஈடும் எடுப்புமின்றித் திகழ்வது, பேரிலக்கண நூலாகிய தொல்காப்பியம். இந்நூல் முழுமைக்கும் இளம் பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர் உரை எழுதியுள்ளனர்; சொல்லதிகாரத்திற்குச் சேனவரையர் தெய்வச் சிலையார் உரைகளும் உண்டு; பேராசிரியருரை பொருளதிகாரம் பிற்பகுதிக்கு மட்டும் கிடைத்துள்ளது. திருமுருகாற்றுப்படை சங்ககாலத்து எழுதப் பெற்ற சமய இலக்கியம். இதற்கு நச்சினார்க்கினியர், உரையாசிரியர், பரிமேலழகர், பரிப்பெருமாள், பரிதியார் என்பவருடைய உரைகள் உள்ளன; பழைய உரை என்றும் ஒன்றுள்ளது. வைணவ சமயத்து ஆழ்வார்களுள் நம்மாழ்வார் ஒருவர். அவர் பாடியது திருவாய்மொழி. அதற்கு ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி என்று பலவுரைகள்

உள்ளன. இனிச் சைவ சித்தாந்த சாத்திர நூல்களுட் சிறந்ததாகிய **சிவஞான சித்தியார்** என்பது ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியாரால் இயற்றப்பட்டது. இச் சாத்திரம் மறைஞான தேசிகர், ஞானப்பிரகாச முனிவர், சிவாக்கிர யோகிகள், சிவஞான முனிவர், நிரம்ப வழகியார், சுப்பிரமணிய தேசிகர் ஆகிய அறுவருடைய உரைகளைக் கொண்டு மிளர்கிறது. இந்நூல்கள்போலப் பலவுரைகளுடன் திகழும் மாட்சிமை பொருந்திய நூல்களுள் **திருக்குறளும்** ஒன்று.

முதுமொழி

இத் திருக்குறளை நம் முன்னோர் **முதுமொழி** என்று குறித்தனர். நரிவெரூஉத்தலையாரும், "இன்பம் பொருளறம் வீடென்னும் இந்நான்கின், முன்பறியச் சொன்ன **முதுமொழி** நூல்" என்றார். திருக்குறளைப் பின்னிரண்டடிகளிற் பெய்து, முன்னிரண்டடிகளில் அக்குறட் கருத்தை விளக்குதற் குரிய கதைக் குறிப்புக்களையமைத்து **முதுமொழி வெண்பாக்களைப்** பாடித் திருக் குறளைப் பரப்ப முயன்றனர், தமிழ்ப் புலமை சான்ற பெரியோர்கள். இத்தகைய முதுமொழி வெண்பாக்கள் பல; அவை சோமேசர் முதுமொழி வெண்பா, தினகர வெண்பா, இரங்கேச வெண்பா, முருகேசர் முதுநெறி வெண்பா, திருமலை வெண்பா, திருத்தொண்டர் வெண்பா, முதுமொழி மேல்வைப்பு முதலியன.

புலவர் சிறப்புரை

"திருக்குறளைக் கற்றாலே போதும், வேறு நூல்களைக் கற்கவேண்டா" வென்றனர் தமிழ்ப் புலவர்கள்.

புலவர் திருவள்ளுவரன்றிப் பூமேல் சிலரைப் புலவரெனச் செப்புதல் வீண் எனக் கருதினர்; அவருடைய குறளை யும் குறட் கருத்துக்களையும் ஒல்லும் வாயெல்லாம் தம் நூலுட் சேர்த்துக் கொண்டனர்; "பொய்யில் புலவன்" என்று புகழ்ந்தனர்; "பொருளுரை" என்றும், "அறம்" என்றும் திருக்குறளுக்குப் புதிய பெயர் களைச் சூட்டினர்; "பாவிற்கு வள்ளுவர் வெண்பா" என்று பாடினர்; "வள்ளுவர் முப்பால் மதிப்புல வோர்க்கு ஆய்தொறும் ஊறும் அறிவு" என்று புகன்ற னர்; "எல்லாப் பொருளும் இதன்பாலுள" என மதிப் பிட்டனர்; "வந்திக்க சென்னி, வாய் வாழ்த்துக, நன்னெஞ்சம் சிந்திக்க, கேட்க செவி" என்று வழுத்தி னர்; "சிந்தைக்கு இனிய, செவிக்கு இனிய, வாய்க்கு இனிய, வந்த இருவினைக்கு மாமருந்து" என்று பாராட் டினர். உரையாசிரியர்களின் மேற்கோளாட்சியில் வள்ளுவருக்குத்தான் பெரும் பங்கு! வள்ளுவர் வாக்குப் பயிலாத இடம் எங்கும் இல்லை; என்றும் இல்லை. கடந்த ஒரு நூற்றுண்டாகப் பல்வேறு மொழிகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப் பெற்றது. தமிழ்நாடு முழுவதும் களி நடம் புரிந்த வள்ளுவர் வாய்மொழி இப்பொழுது உலக அரங்கில் ஒவ்வொருவருடைய மனத் திலும் கொலுவீற்றிருக்கிறது என்றுல் மிகையாகாது.

பதின்மர்

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குறளுக்கு உரை யெழுதிய ஆசிரியர் பதின்மர் என்பதைத் தொண்டை மண்டல சதக மேற்கோட் பாடலால் அறியலாம்.

அப்பாடல் ;—

“தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பருதி பரிமேலழகர்–திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்நூற்(கு)
எல்லையுரை செய்தார் இவர்” என்பதாம்.

இப்பாடலகத்துக் குறிக்கப் பெற்ற “கவிப்பெருமாள்” என்பவர் பரிப்பெருமாளேயாவர்.

ஊர்: பரிப்பெருமாள் “செழுவை” என்ற ஊரினர். இதனைக் காமத்துப்பால் இவருரை இறுதியிற் காணும் செய்யுளால் அறியலாம்.

அப்பாடல் வருமாறு:—

தெள்ளி மொழியியலைத் தேர்ந்துரைத்துத் தேமொழியார்
ஒள்ளிய காமநூல் ஓர்ந்துரைத்து—வள்ளுவனூர்
பொய்யற்ற முப்பாற் பொருளுரைத்தான் தென்செழுவைத்
தெய்வப் பரிப்பெருமாள் தேர்ந்து.

இதிற்காணும் **தென்செழுவை**, பாண்டி மண்டலத்துச் சேது நாட்டின் கண்ணது. “கி.பி. 1268-இல் பட்ட மேற்ற மாறவர்மன் குலசேகர பாண்டியன், ‘**பழுதறு சிறப்பின் செழுவைக் காவலன்**’ என்று கூறப்படுகின் றான். இதனானும் செழுவை பாண்டியராட்சிக் குட்பட்ட தோரூர் என்று அறியலாம்.

இவர் நூல்கள்: மேற்காட்டிய “தெள்ளிமொழியியலை” என்ற பாடலால், இவர் “**மொழியியல்**” நூல் (சொல்லிலக்கணம் கூறும் நூல்) உரைத்தார் என்றும், ‘**காமநூல்**’ ஒன்றையும் செய்தார் என்றும் அறியப்

பெறுகிறது. "வசையில் வள்ளுவன் வாய்மொழிப் பொருளை இசைபட நுவல்வோர் இறந்த பின்னர்" இவர் இவ்வுரை செய்தார் என்று "மாயிருஞாலத்து" என்ற உரைச் சிறப்புப் பாயிரம் (பெருந்தொகை–1539) நூவலாநிற்கும். இவரெழுதியதாகத் திருமுருகாற்றுப் படை யுரையொன்றும் வெளிவந்துள்ளது.

இவருரை : பரிமேலழகருரை எழுதப்பட்ட பிறகு, பரிமேலழகருரையே சிறப்புடையதெனக் கருதப்பெற்ற வாறு போலப் பரிப்பெருமாள் காலத்தில் பரிப்பெருமாள் உரை சிறந்து விளங்கியதாதல் வேண்டும். இவருரை "தலையாய பரிமேலழகர் உரைப் பின்சார நன்று" என்று பாராட்டப் பெறுவது; திருக்குறளின் உட் பொருளை நன்கு விளக்குவது; மணக்குடவருரையைத் திருத்தியமைத்த புத்தம் புத்துரையாக விளங்குவது; மணக்குடவர் கொண்ட பாடங்களின் வேறுபட்ட பாடங்கள் கொண்டு அவற்றிற்கேற்ப உரைகொண்டியங் குவது.

"கூன்கை" என்று பாடம் ஓதுவாருமுளர் (1077); "பதியிற் கலங்கிய மீன்" என்று பாட மோதி (1116); "ஒப்புரவாண்மை" என்று ஒப்புர விற்கே போக்குவாருமுளர் (480) என்று பிறர் பாடங் களையும், கருத்துக்களையும், இவர் குறித்துள்ளார்,

தொல்காப்பிய நூற்பாக்களை (1126, 1127, 1128, 1129) குறளுரைகளிலும், காமத்துப்பால் உரைத் தொடக்கத்திலும், இறையனர் களவியல் சூத்திரம் காமத்துப்பால் 8–பிரிவாற்ருமை என்ற அதிகாரத் தலைப்பு

விளக்கத்திலும், உரைத் தொடக்கத்திலும் எடுத்தாண்டுள்ளார்.

வடநூற்புலமை

காமத்துப்பால் முன்னுரையில் "இக் காமப்புணர்ச்சியை வடநூலாசிரியர் அராகத்தால் கூட்டும் கூட்டம் என்ப......இதற்கு இலக்கணம் வாற்சானியம் என்னும் காமதந்திரத்துச் சுரத விகற்பம் என்னும் அதிகரணத்துட் கண்டு கொள்க" என்றமையாலும், "விருப்பறுச் சுற்றம்" என்ற குறளுரையில் (522) "பிள்ளைகளை வேறுவேறு இடத்து நிறுத்தவேண்டு மென்பது சில ஆசிரியர் மதம்" என்றும், "குற்றம் கடிதல்" என்ற அதிகாரத்தில் வெகுளியாற் கெட்டமைக்குச் சனமேசயனையும், பிறர்மனை நயத்தலாற் கெட்டமைக்கு இராவணனையும், நுகர்ச்சியாற் கெட்டமைக்கு சச்சந்தனையும், மாண்பிறந்த மானத்தாற் கெட்டமைக்குத் துரியோதனனையும், மாணு உவகையாற் கெட்டமைக்கு வாதாபியையும், இவறுதலாற் கெட்டமைக்குப் புரூரவாவையும், காதல காதல் அறியாமல் செலுத்தியதாற் கெட்டமைக்கு வத்தராயனையும், தன்னை வியந்தமையான் கெட்டமைக்குக் கார்த்த வீரியார்ச்சுனனையும், எடுத்துக் காட்டாகக் கூறினமையானும், "தெரிந்து தெளிதல்" என்ற அதிகாரத்தில் வியாசர், மகேச்சுவரர், நாரதர், பராசரர், கௌடில்யர், துரோணுசாரியர், உத்தவாசாரியார், சுக்கிரன் ஆகியோர் மதங்களை யெடுத்துக் காட்டியவுரைகளானும், "ஆற்றின் அளவறிந்து கற்க" என்ற குறளுரையில் கௌடல்ய மதம் என்று கூறியிருத்தலானும், இவரது வடநூற் புலமை மாட்சி நன்கு விளங்கும்.

உலகியலறிவு

"சுற்றந்தழால்" என்ற அதிகாரத்தில், "விருப்பறுச் சுற்றம்" என்ற குறளுரையில் "மக்களை ஓரிடத்தே கொண்டிருக்க வேண்டும், அதனானே குலம் வளரும்"; "உழைப்பிரிந்து" என்ற குறளுரையில் "இது மீண்டு வந்த இராஜபுத்திரனோடு செய்யும் திறன் கூறிற்று"; "தமராகி" என்ற குறளுரையில் "இது விட்டுப் போன புத்திரனைக் கூட்டிக்கொள்ளுமாறு கூறிற்று"; "காக்கை கரவா" என்ற குறளுரையில் "இது மக்கள் பலர் உண்டானால் எல்லார்க்கும் பகுத்து உண்ணக் கொடுக்கவேண்டும் என்றது; இவை மூன்று பாட்டானும் அன்பு அறாத மக்கட்குச் செய்யுந் திறன் கூறிற்று"; "பொது நோக்கான்" என்ற குறளுரையில் "மக்கள் பலருண்டானால் எல்லாரையும் ஒக்கப் பாராது நீதிமான் ஒருவனை இளவரசாக்க வேண்டும் என்றது"; "குடி செயல் வகை" என்ற அதிகாரம் "அமரகத்து" என்ற குறளுரையில் குடியாகிய பாரத்தைப் பொறுப்பது, "ஒரு குடிப்பிறந்தார் பலருளராயினால் அவருள் மூத்தவர்க்குக் கடனே எல்லார்க்கும் கடனே என்றார்க்குக் கூறப்பட்டது"—என்ற கூற்றுக்கள் இவர்க்கேயுரியனவாய் அமைந்துள்ளன. இவை இவருடைய உலகியலறிவை நன்கு விளக்குவனவாம்.

பரந்த நூலறிவு

"நாநலன்" என்ற குறளுரையில் "சொல்வலை வேட்டுவன்" என்ற புறநானூற்றுச் செய்யுட் பகுதியும், "அரங்கின்றி" என்ற குறளுரையில் "புல்லாவெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி" என்ற நாலடிப் பாடற் பகுதியும், தலை இடைகடையான தூதர் இலக்கணம் கூறுமிடத்துப் பாரத வெண்பாப் பாடற் கருத்தும்,

"பிணியின்மை" என்ற குறளுரையில் "கண்டுகேட்டு" என்ற குறளும் "உயர்வகலம்" என்ற குறளுரையில் "அடியொட்டி" என்ற அரிய சொல்லும், "கவறும் கழகமும்" என்ற குறளுரையில் கலித்தொகையில் காணும் "நெத்தம்" என்ற சொல்லும், "மணிநீரும்" என்ற குறளுரையில் சேற்று அரண் என்ற அரணும் குறித்துள்ளார். இவை, இவருடைய பரந்த நூலறிவைப் புலப்படுத்தா நிற்கும்.

இவர் காலம்: இவர் காலம் குறித்துத் திரு. பழனியப்பப் பிள்ளை அவர்கள் எழுதியது பின்வருமாறு:- பரிப்பெருமாள் காமத்துப்பால் உரைத் தொடக்கத்தில் "வாற்சானியம்" என்ற காம தந்திர நூலைக் குறித்துள்ளார். இவ் வடநூற் காலமுதல் "சுவையலங்காரங்களின் இலக்கணங்களை யாய்ந்த வடநூற் புலவர் இன்ப ஒழுக்கத்தைச் சம்போக சிருங்காரம் என்றும் விப்ரலம்ப சிருங்காரம் என்றும் இரு பகுதியினதாகவே வகைப்படுத்து இலக்கணமுரைத்துச் செல்லத் தசரூபகம் என்ற வடநூலாசிரியராகிய தனஞ்சய கவி என்பார் தம் நூலின்கண் இரசங்களின் இலக்கணம் உரைக்கும் நான்காம் பிரிவின்கண் சிருங்காரபாகங்களைக் கூறுங்கால், "அயோகோ விப்ரயோகஸ்ச சம்போகஸ் சேதிச த்ரிதா" என்று சூத்திரித்துள்ளார். இதன் கருத்து: சிருங்காரம் என்பது அயோகம் என்றும் விப்ரயோகம் என்றும் சம்யோகம் என்றும் மூன்று பாகுபாடுறும் என்பது. இவர் வகுத்துக் காட்டிய இவ்வியல்பினைப் பரிப்பெருமாள் தழுவிக் கூறுகின்றாராதலின், அந்நூற் காலத்திற்குப் பிற்காலத்தவர் பரிப்பெருமாள் எனத் தெளியலாம். இத்தனஞ்சய கவி கி.பி. 974 முதல் 995 வரை ஆண்ட மாளவ நாட்டுப் பரமார குலத்து

மன்னனாகிய இரண்டாம் வாக்பதிராசன் காலத்தவர் என்று வடநூற் புலவர் முடிவு செய்துள்ளனர். ஆதலின் 11 ஆம் நூற்றாண்டில் அந்நூல் விளக்கம் எய்தியது என அறியலாம். ஆகவே பரிப்பெருமாளின் காலத்தின் மேலெல்லை இப் பதினொன்றாம் நூற்றாண்டெனக் கோடல் பொருந்தும்.

எனைவகை (514) கொலைமேல் (551) துளியின்மை (557) இடை தெரிந்து (712) என்ற குறள்களுக்குப் பரிப்பெருமாள் உரை கிடைக்க வில்லை.

பரிப்பெருமாள் கொண்ட முறைவைப்பு

மணக்குடவர் கொண்ட முறைவைப்பைப் பெரும் பாலும் ஒட்டியேயுள்ளது. ஒரோவழி சிறிது மாறு மட்டும் உள்ளமை உரைக்கிடையிற் கண்டுகொள்க. ஒரோவழி மணக்குடவர் கொண்ட மூலபாடங்களிலும் வேறு பாடங்களும் பரிப்பெருமாள் கொண்டுள்ளார்.

பரிப்பெருமாளுரைப் பதிப்புக்கள்

பரிப்பெருமாளுரையும் காலிங்கருரையுமாகத் திருப்பதி வேங்கடேசுவர பல்கலைக் கழகத்து வெளியீடாகத் திரு T.P. பழனியப்பப் பிள்ளை அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். அறத்துப் பாலுக்குப் பரிப்பெருமாள் உரை கிடைத்திலது. பின்னர்த் தருமபுர ஆதீனத்திலிருந்து **திருக்குறள் உரைவளம்** வெளியிடப் பெற்றது. மடக்குடவருரையிற் காணாது அதிகமாயுள்ள பரிப்பெருமாளுரைப் பகுதிகள் மட்டும் அதில் தரப்பெற்றன. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தினின்று வெளி வந்த **திருக்குறள் உரைக் கொத்தில்** பரிப்பெருமாள் உரைப் பகுதி முழுதும் தரப்பெற்றுள்ளது.

திருமுருகாற்றுப்படை யுரை

திருமுருகாற்றுப் படைக்குள்ள பல உரைகளில் நச்சினுர்க்கினியருரையே எல்லாரும் அறிந்ததோருரை யாகும். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தினின்று வெளி யிடப்பெற்ற திருமுருகாற்றுப்படை உரைக் கொத்தில் பரிப்பெருமாளுரையும் காணப்பெறுகின்றது. அதில் கவிப் பெருமாள் என்று குறிக்கப் பெற்றுள்ளார். இவருடைய உரை எளியநடையில் அமைந்துள்ளது; ஆற்றெழுக் காகவும் உள்ளது. இவ்வுரை சிலவிடங்களில் பிறருரையினும் சிறந்துள்ளது. "சின்னுள் ஆவினன் குடி அசைதலும் உரியன்" என்புழிச் "சின்னுள்" என்பதற்குப் பிறரெல்லாம் 'சிலநாள்' என்று உரைவகுத் திருக்கப் பரிப்பெருமாள் 'சின்—அசைநிலை' என்று கூறி 'நாள்' என்பதற்கு 'எந்நாளும்' என்று உரை தந்துள் ளார். 'முருகப் பெருமான் ஆவினன்குடியில் சின்னுள் தங்கியிருத்தலுமுரியன்' என்னும் உரையினும் 'எந்நாளும் இருப்பன்' என்ற பரிப்பெருமாளுரை சிறந்திருத்தல் காண்க. இனிப் "பழமுதிர் சோலைமலை கிழவோனே" என்ற வரிக்குப் "பழங்கள் உதிரும் சோலைகளையுடைய மலைக்குரியவன்" என்று பிறரெல்லாம் பொருள்தந் துள்ளனர், ஆனுல் பரிப்பெருமாள், "பழங்கள் முற்றப் பெற்ற **சோலைமலை**க்குரியவன்" என்று பொருள் கூறி யுள்ளார். இதனுல் முருகனுக்குரியமலை "சோலைமலை" என்று பரிப்பெருமாள் கருதினுர் என அறியலாம். இதனுனும் திருமுருகாற்றுப்படைக்கு இவருரைத்த உரை சிறந்து நிற்றல் அறியத்தகும்.

---

9. பரங்குன்றின் அணி

ஆசிரியர்

செவ்வேளுக்குரியதாகிய 17 ஆம் பரிபாடல் இயற்றியவர் நல்லழிசியார் என்ற புலவர். நல்லழுசியார் என்றும் இப் பெயர்க்குப் பிரதிபேதம் உண்டு. இவர் வையைக்குரியதாகிய 16 ஆம் பரிபாடலையும் இயற்றியுள்ளார்.

பொது

இப்பாடலில் மதுரை 'பாடல் சான்று பல்புகழ் முற்றிய கூடல்' (வரி 22)' 'கொய்யுளை மான் தேர்க் கொடித் தேரான் கூடல்' (வரி 45) என்றும், சூரிய மண்டிலம் 'தேயா மண்டிலம்' (வரி 32) என்றும், வையையாறு 'தொய்யா விழுச்சீர் வளங்கெழு வையை' (வரி 49) என்றும் குறிக்கப் பெற்றுள்ளன.

கடம்ப மர வழிபாடு (1-8)

பல அன்பர்கள் நாடோறும் மாலையில் செவ்வேள் எழுந்தருளியிருக்கும் கடம்பினை வழிபட வருவர். அவர்கள் மலர்களையும், குழைகளையும், பூந்துகில்களையும், மணியினையும், வேலினையும் சுமந்து வருவர். உடன் வருவார் தீபத்தையும், இசைக்கருவிகளையும், சந்தனம் முதலிய வாசனைப் பொருள்களையும், அகிற்புகையையும், கொடிகளையும் கொண்டு வருவர். வழிபடுவோர்

சந்தனத்தைத் தெளித்து, (வேலன் அரைக்கண்ணே விடையைக் கட்டின பூசையையுடைய கடிமரமாகிய) கடம்ப மரத்தை உரையாலே ஏத்துவர்; ஆலாபனம் செய்து பாடுவர். இங்ஙனம் நாடோறும் வழிபடுவோர் திருப்பரங்குன்றத்து அடியின்கண் உறைவர். இவ்வன்பர்கள் தேவர் உலகத்து உறைதலையும் வேண்டார்.

திருப்பரங்குன்றத்தின் சிறப்பு (9-21)

திருப்பரங்குன்றத்தின் ஒருசார் பாணர்களது யாழ் இன் தீங்குரல் எழ, அதன் எதிர் யாணர் வண்டின் இன்னிசை எழும்.

ஒரு பால் வேய்ங்குழலின் ஒலியெழ, அதன் எதிர் பண்ணார் தும்பி முரலும்.

ஒரு புறம் மண்ணார் முழவின் இசை எழ, அதன் எதிர் அண்ணல் நெடுவரை அருவி நீர் ஒலிக்கும்.

ஒரு பக்கம் பாடல் நல் விறலியர் அசைய, அவர் எதிர் வாடையினால் பூங்கொடிகள் அசையும்.

ஒரு திறம் பாடினி முரலும் பாலைப் பண் நிறை குறையோடு ஒலிக்க, அதன் எதிர் ஆடுசீர் மஞ்ஞையின் அரித்தெழும் குரல் எழும்.

இங்ஙனம் கல்விகளால் வென்றி பெற எண்ணியவர்கள் மாறுமாறாக எழுந்தாற் போன்ற தன்மையைச் செவ்வேளின் திருப்பரங்குன்றம் உடையது.

மாறுமா(று) உற்றனபோல் மாறெதிர் கோடல்
மாறட்டான் குன்றம் உடைத்து.

நணித்தாயினும் சேய்த்து! (22-27)

'பாடல் சான்று பல்புகழ் முற்றிய' கூடலுக்கும் திருப்பரங் குன்றத்திற்கும் இடைநின்ற இடம் மிகவும் அணித்து; ஆயினும் மகளிரும் மைந்தரும் நெருங்கி விளையாடுதலால் மிகச் சேய்த்து ஆகாநின்றது; மகிழ்ச்சி மிக்க அம்மகளிரது கூந்தலினின்றும் மைந்தரின் குஞ்சியி னின்றும் வீழ்ந்து அவிழ்ந்த மாலைகளால் தடுக்கப்பெற்று இயங்கு நெறி இல்லையாயிற்று.

இமையாரும் இமைப்பர்! (29–32)

புகழால் திசையெங்கும் பரவிய திருப்பரங்குன்றின் கண் மேவி, உலகத்தார் பலவிடத்தும் செய்கின்ற பூசை யில், செவ்வேள் ஆவியாக ஏற்றுக்கொள்ளும் அகிற்புகை மேலே போதலால் தேவர்களும் இமைப்பர்! சூரிய மண் டிலமும் தோன்றாமல் மறையும்.

அனைய பரங்குன்றின் அணி (33-41)

ஈர மாலை இயல் அணியார்-வளை முன்கை வணங் கிறையார் ஆகிய மகளிரும், அவர் அணைமென் தோளின் கண் தங்கி அன்பு ஒத்தார்-தார் மார்பின் தகையியலார் ஆகிய மைந்தரும் மனம் மகிழ்தூங்கிப் பாய்ந்தாடுத லால் வண்டுகள் வெருவிச் சுனைமலர்த்தாதினை ஊதப் பெறா. திருப்பரங்குன்றினது அலங்காரம் அத்தன்மைய!

மலைக்கண் வார் வெள்ளருவி ஆறாது பரந்து உழவ ரது வயலின்கண் பரக்கும். அவ்வருவியில் விளையாடு மகளிர் இயங்குதலால் அவர் பூணினின்றும் விழுந்த நீல மணி உழுநிலத்தைச் சிதைக்கும்.

தடுமாற்றம் நன்று (42-46)

பிரிந்த தலைவர் வினைமுடித்துக் கடிதின் வந்து கூடுதற்கு வெள்ளருவி யணிந்த திருப்பரங்குன்றின்கண் தலைவியர் தெய்வ விழாச் செய்வர். அங்ஙனம் கூடியவழிச் சிலர் (கெடாத விழுப்புகழ் உடைய வளங்கெழு) வையையின்கண் விருந்தயர்வர்; அதாவது அத்தலைவரோடு புதுப்புனல் ஆடுவர். ஏனையோர் கூடற்கண் விருந்தயர்வர். இங்ஙனம் தெய்வ விழாவும் விருந்தயர்தலுமாகிய இவை திருப்பரங்குன்றிற்கும், வையைக்கும், மதுரைக்கும் தடுமாறி வருதல் இல்லற நெறியாதலின் நல்லொழுக்கம் ஆயிற்று.

வாழ்த்து (48-53)

"மணி நிற மஞ்ஞையினையும், உயர்ந்த கோழிக் கொடியினையும், பிணிமுகத்தை யூர்ந்து செய்யப்பெற்ற வெல் போரினையும் உடைய தலைவ! மக்கள் மாட்டுப் பணி மொழியை யொழித்து, நின் புகழையே ஏத்தி நின் அணி நெடுங்குன்றத்தைப் பாடித் தொழுகிறோம்; 'பிறவித் துன்பம் நீங்கிய இன்பம் மலிந்த நாட்களை யாம் பெறுக' என்று யாமும் எம் சுற்றத்தாரும் வேண்டிக் கொள்கிறோம்; அருள் புரிக!"

மணிநிற மஞ்ஞை ஓங்கிய புட்கொடிப்
பிணிமுகம் ஊர்ந்த வெல்போர் இறைவ!
பணி யொரீஇ நின்புகழ் ஏத்தி
அணிநெடுங் குன்றம் பாடுதும்! தொழுதும்!
அவை, யாமும்எம் சுற்றமும் பரவுதும்!
ஏம வைகல் பெறுகயாம் எனவே.

---

10. பிரியாதிருக்க

ஆசிரியர்

செவ்வேளுக்குரியதாகிய 18ஆம் பரிபாடலின் ஆசிரியர் குன்றம்பூதனார். "குறிஞ்சித்திணைக்குரிய முதல், கரு, உரியென்ற முப்பொருள்களையும் செவ்வனே அமைத்து நயமுறக் கூறியிருத்தலை உற்றுநோக்கும்பொழுது, இவர் அகத்திணையைப் பாடுதலில் வல்லவர் என்று தெரிகிறது.........குன்றத்தை அழகுறப் பாடியிருத்தலால் இவர் இப்பெயர் பெற்றார் போலும்" (டாடர் ஐயர் அவர்கள்).

மஞ்ஞை நோக்கிய கானவன்

திருப்பரங்குன்றத்தில் ஒரு கானவன் ஒரு மயிலை நோக்கினான்; அதன் அழகையும் களிப்பினையும் தன் உள்ளத்தே கொண்டு நின்றான். அவன் காதலி அவனை நோக்கினாள்; "நீ என்னை நோக்காமல் மயிலைப் பார்ப்பதின் காரணம் என்ன ? இச் செயலால் நீ என்னை இகழ்கின்றாய் !" என்று கூறி ஊடினாள். அவன் அவளுடைய ஊடலை மாற்றினான் ; "என் அன்பே ! அந்த மயில் உன் சாயலைக் களவு கொள்ள எண்ணியது ; ஆனால் உன் சாயலைப் பெற முடியாமல் வருத்த முற்றது; இங்ஙனம் வருந்தும் இம்மயிலைக்கண்டு, நின் சாயலின் அருமையை நினைத்து நின்றேன்; ஆனால் நீயோ உன்னை நான் இகழ்ந்ததாக எண்ணுகிறாய்" என்று தெளிவித்தான்.

திருப்பரங்குன்றில் கண்ட காட்சிகளுள் ஒன்று இது. இன்னும் ஒரு காட்சி:

பொய் வளம் பூத்தன பாணன் பாட்டு

பரத்தையிற் பிரிந்து சென்ற தலைவன் ஒரு பாணனைத் தலைவியினிடம் அனுப்பினன். அப்பாணன் தலைவியிடம் வந்து பாடினன். அதுகேட்ட தலைவி, "பொன் அணியினையுடைய பாண! தலைவன் பரத்தையரோடு முயங்கினன் என்பதை அவனுடைய உடம்பிலுள்ள வடுக்கள் புலப்படுத்துகின்றன; ஆகையால் நட்டபாடை என்னும் பண்ணைத்தருகின்ற யாழ்நரம்பிற்கு இயைந்த நின்பாட்டுப் பொய் மிகுதியையுடையது" என்று கூறினள்.

> நைவளம் பூத்த நரம்பியைசீர்ப் பொய்வளம்
> பூத்தன பாணநின் பாட்டு.

பரங்குன்றின் சிறப்பு

செவ்வேள் விரும்புதலால் பரங்குன்று செவ்வேளைப் பயந்த இமயம் போலப் புகழ்பெற்றது (5-6).

மலைவளம் ஐந்து பொலிந்தது (15). (மலைவளம் ஐந்தாவன: "அரக்கு இறலி செந்தேன் அணிமயிலின் பீலி, திருத்தகு நாவியோ டைந்து" என்பதனாலறியப் படும்.)

பரங்குன்றில் மழை முழங்கிய சிகரமும், அதன் கண் உள்ள கொடிமின்னும் செவ்வேளின் களிறுருக்கும் (23-27).

குன்றின் கண் எழுதிய அழகையுடைய அம்பலம், காமவேள் அம்பின் தொழில் நிலைபெற்ற சிரமச்சாலை (படைக்கலக் கொட்டிலை) ஒக்கும். (28-29)

சோலைகளும் சுனைகளும், மலர்களின் செறிவால், காமவேளது அம்பறுத்தூணியை ஒக்கும். (30-33)

கார் காலத்தில் தோன்றும் காந்தட்குலைகள், போரில் தோற்றுக் கட்டுண்டார் கையை ஒக்கும். (34–35)

தும்பியினுல் கட்டவிழ்ப்பனவாகிய காந்தளின் முகைகள், யாழ்நரம்பினது கட்டை நெகிழ்ப்பவர் கையை ஒக்கும். (36-37)

பரங்குன்றிலுள்ள மரங்கள், இந்திரவில்லாற் சொறியப்படும் கணைகளைப் போல மெல்லிய மலரைப் பரப்பின. (40-41)

தாளம் ஒலிக்கும் ஒலியும், சிறந்த இயங்களின் ஒலியும், மேகத் தொகுதியின் ஒலியும், போர் முழக்கத்தைப் போல எழுந்தன. (42–45)

அருவிகள் ஒலித்து இழிவதால் மலைச்சிகரங்கள் முத்து மாலையை அணிந்தாற் போன்றன. (46)

குருவிகள் ஆர்க்குமாறு தினைக் கதிர்கள் விளைந்தன. (47)

பலநிற மலர்கள் நிறைந்த சுனை, வானவில்லை வளைத்த வானை யொத்தது. (48-50)

வாழ்த்து : வேண்டுகோள்

வேற் படையை யுடைய செல்வ ! யாழோசையும் இயற்பாட்டுக்களும் பொருந்தியது உன் திருவடி. வேத வொலியும், பூவும், தீபமும் ஏற்றருளியது உன் திருவடி. அகிலும், சந்தனமும், தூபமும் கமழ்வது உன் திருவடி. உன் திருவடியின் கண் உறைதலே வேண்டுகிறேன். உன் திருவடியின் கண் என் சுற்றத்தோடு கூடி உறை வேன்; அங்கு எனக்குரிய இருப்பிடத்தைச் சேர்ந்தாற் போலப் பிரியாது இருப்பேனுக !

குன்றம்பூதனார் வாக்குப் பின் வருமாறு:—

புரியுறு நரம்பும் இயலும் புணர்ந்து
சுருதியும் பூவும் சுடரொடு கூடி
எரியுரு(கு) அகிலோ(டு) ஆரமும் கமழும்
செருவேல் தானைச் செல்வ ! நின் அடியுறை
உரிதினின் உறைபதிச் சேர்ந்தாங்குப்
பிரியா திருக்களம் சுற்றமோ டுடனே. (51-56)

11. வீணை

வீணை அமைப்பு

தோற்கருவி, நரம்புக்கருவி, துளைக்கருவி, கஞ்சக் கருவி எனப் பெறும் நான்கு வகைகளுள், வீணை என்பது நரம்புக் கருவிகளுள் ஒன்ருகும். இது ஏழு தந்திகளை யுடையது. தண்டின் மேற்புறத்தில் நான்கு தந்திகளும், பக்கத்தில் மூன்று தந்திகளும் உண்டு; தண்டின் மேற்புறத்தில் சுரஸ்தானங்களைக் குறிக்க இருபத்து நான்கு மெட்டுக்கள் உள்ளன. மேற்புறத்துத் தந்திகள் வாசிப்பதற்கும் பக்கத்துள்ள தந்திகள் தாளம் போடுவதற்கும் பயன்படும். வீணையில் குடம் ஒன்று உண்டு. வீணையின் குடம் ஒரேமரக்கட்டையிலிருந்து குடைந்தெடுக்கப் பெறும். இதற்குத் தஞ்சையில் பலாமரத்தையும் மைசூரில் கருங்காலியையும் உபயோகிப்பர். வீணையின் தண்டும் இம்மரங்களாலேயே செய்யப்பெறும். தண்டின் கீழ் சுரைக்காய் ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது. இதுவும் ஒலியைப் பெருக்கப் பயன்படும். அதற்கு மேல், தண்டில் வளைவாகக் கழுத்து அமைத்து அதன் நுனியில் யாளியின் உருவம் அமைக்கப் பெற்றுள்ளது.

"வீணையின் குடத்தின் மேல் பலகையின் மத்தியில் வைக்கப் பட்டிருக்கும் மெட்டினுலேயே இனிமையான நாதத்தைக் கொடுக்கும் சக்தி ஏற்படுகிறது .....இவ்வாத்தியத்தில் எளிதாக வாசிக்கக் கூடியது தானமாகும். சங்கீதத்

தில் தேர்ச்சி பெற்ற ஒருவர் கமக வேறுபாடுகளையும் நுட்ப சுருதிகளையும் சோதித்தறிவதற்கு வீணையைத் தவிர மற்றெந்த வாத்தியமும் ஒவ்வாதென்பது அனுபவமான உண்மையாகும்''* இதுவே இசைக் கருவிகளுக் கெல்லாம் அரசியாக வீற்றிருப்பது.†

யாழ்–வீணை

வீணை திருக்குறளில் கூறப்பெறவில்லை. பழந்தமிழ் நூல்களில் யாழ் என்பதே எங்கும் பயில்வது. மாணிக்க வாசகர், "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்" என்றமையால் வீணைவேறு யாழ்வேறு என்று கருதுவதற்கும் இடம் தருகிறது.

"முற்காலத்தில் தமிழ் நாட்டில் யாழ் ஒரு சிறந்த கச்சேரி வாத்தியமாக இருந்தது. தேவார காலத்திற்குப் பின் யாழ் மறையத் தொடங்கியது. வீணை வாத்தியம் வந்தும் அதில் பல கமகங்களையும் இசை நுட்பங்களையும் தெளிவுற வாசிப்பதற்கு வசதிகள் இருந்தமையால் வீணையைக் கைப்பற்றலானார்கள்; யாழை நழுவ விட்டார்கள்......மேலும் யாழில் பல நரம்புகள் இருந்தன. அவைகளைச் சுருதி கூட்டுவதற்கு வெகு நேரம் பிடித்திருக்கும்......பிற்காலத்தில் எல்லாப் பண்களையும் ஒரே சுருதியில் பாடும் சம்பிரதாயம் ஏற்பட்டவுடன், பண் மாறும் பொழுதெல்லாம் யாழில் சில நரம்புகளையும் திருப்பிச் சுருதி கூட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மெட்டுகளுடன் கூடிய வீணையில் இந்தச் சிரமங்கள் இல்லை......; சுருதி கூட்டுவதும் சுலபம். கமகங்களையும் நுட்ப சுருதிகளையும் வாசிப்பதும் எளிது.....யாழில் ஒவ்வொரு நரம்பிலும் ஒவ்வொரு ஸ்வரம்தான் வாசிக்க இய

* இசையியல் - 5-ம் தொகுதி - முதற்பகுதி - பக்கம் 97
† ஷை ஷை ஷை ஷை 34

லும். அந்த ஸ்வரங்களும் சுத்த ஸ்வரங்களாகவேதான் பேசும்......யாழில் துரிதகால இசை வாசிப்பதும் மிகக்கடினம்......யாழில் பேசாத இசை நுட்பங்கள் வீணையில் வாசிக்கப்படும். யாழிற்கு நல்ல நாதம் இருந்தமையால் அதை விட்டு விட இசை வல்லுநர்க்கு மனம் வரவில்லை; வீணையுடன் கூடச் சில நூற்றுண்டுகள் வாசித்தார்கள்; நாளடைவில் யாழைக் கைவிட்டார்கள்''* என்று இசை வல்லுநர் எழுதியுள்ளார்கள்.

சிலப்பதிகாரத்தில்

சிலப்பதிகாரத்தில் (6) கடலாடுகாதையில் வீணை குறிக்கப்பெற்றுள்ளது:—

> '' நாரதன் வீணை நயந்தெரி பாடலும்
> தோரிய மடந்தை வாரம் பாடலும்
> ஆயிரங் கண்ணோன் செவியக நிறைய
> நாடக முருப்பசி நல்கா ளாகி
> மங்கல மிழப்ப வீணை மண்மிசைத்
> தங்குக இவள்எனச் சாபம் பெற்ற
> மங்கை மாதவி வழிமுதல் தோன்றிய
> அங்கர வல்குல் ஆடலும் காண்குதும்''(வரி 18-25)

சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் ''நாரதன் வீணை'' என்ற விடத்து ''நாரத முனிவன் யாழ்'' என்றும், '' உருப்பசி வீணை '' என்ற விடத்து '' வீணை '' என்றும் பொருள் தந்தார். இதனுன் நாரதனுக்குரியது யாழ் என்றும், உருப்பசிக்குரியது வீணை என்றும் அறியலாம். இனி வீணை என்ற விடத்துச்

---

* தமிழிசை மலர்-4, பக்கம் 54-55.

"சாரீர வீணை" என்று பொருள் தரலாம் என்றும் பொருள் கூறுவர். சிலப்பதிகாரம் (3) அரங்கேற்று காதை வரி 26– "மிடறு" என்பதற்குச் "சாரீரவீணை" என்றே பொருள் தந்தார். "சாரீரவீணை" என்பது இன்குரலைக் குறிக்கும்.

பெருங்கதையில் வீணையும் யாழும்

பெருங்கதை என்பது 'கொங்கு வேளிர்' என்பவரால் இயற்றப்பட்டது; உதயணன் என்பானின் வரலாற்றைக் கூறுவது. இதில் உதயணன்–யாழின் கிழவன் (5-4: 104); யாழறிவித்தகன் (3-14: 241; 1-38: 289); வீணைவித்தகன் (2-10: 174; 3-1: 139); வீணை வேந்தன் (4-2: 79) என்று யாழிலும் வீணையிலும் வல்லவனுயிருந்தமை தெரிகிறது. வாசவதத்தை - வீணைக்கிழத்தி (2-18: 82) என்று குறிக்கப் பெறுகிருள். "நல்யாழ் நவிற்றிய......உதயண குமரன்" (1-47: 219-221) என்பதால் உதயணனே வாசவதத்தைக்கு யாழ்பயிற்றியவன் என்றறிகிரோம். யாழைப் பயிற்றுவிக்குமாறு வாசவதத்தையின் தந்தை பணித்தலும்,

"அரும்பெறல் தத்தைக்(கு) ஆசா னுகிப்
போக வீணை புணர்க்கப் பெற்ற
தேசிக குமரன் திருவுடையன்"

என்று அடியவரும் ஆயத்தாரும் வியந்தனர்.

"வத்தவர் பெருமகன் வல்ல வீணை
தத்தை தனக்கே தக்கதால்"

என்று முற்றத்தில் இருப்பவர் தம்முள் பேசிக்கொண்டனர். யாழ் பயிற்றுவிக்க நல்ல நேரம் வந்தது. வாசவ

தத்தை கீத சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். “பண்ணமை நல்யாழ் பலிக்கடன் வகுத்தற்குரிய நேரம் வந்தது” என்று உதயணற்குத் தெரிவித்தனர். அவனும் போந்தனன். அவன் யாழைக் கொடுக்க யாழைக் கைவைத்தனள் வாசவதத்தை:

“தெய்வத் தன்ன திறலோன் காட்டக்
கைவைத் தனளால் கனங்குழை யாழென்” (1-34:246-7).

உதயணன், “தவாஅக் காதலொடு தகையாழ் காட்டும் உவாத்தி” (1-44: 130) என்றும் பிறிதோ ரிடத்தும் கூறப்பெற்றுள்ளான். இங்ஙனம் உதயணன் யாழைக் கொடுத்தனன் என்று கூறப்பெற்ற போதிலும் பின்னர்ச் சாங்கியத்தாய் கூறும் பொழுது,

“மாசில் வீணை மடமொழிக் கீந்தோன்
ஆசான் என்னும் சொற்பிறி தாமென” (1-36: 308-9)

என்று கூறியுள்ளமையின், ‘உதயணன் வாசவதத்தை யிடம் கொடுத்தது யாழா அல்லது வீணையா?’ என்ற வினா எழத்தான் செய்கிறது.

ஒருநாள் சாங்கியத்தாயும் வாசவதத்தையும் பேசிக் கொண்டே இருந்தமையின் கீதசாலைக்குப் போக வேண்டிய காலம் கடந்தது; சாங்கியத் தாய் காஞ்சனமாலையிடம் தோழியை நோக்கித், “தத்தை கற்றற்குரிய நேரம் கடந்து விட்டது; ஆகலின் உதய ணன் தன் இருப்பிடத்துக்குச் செல்லலாம்” என்று சொல்லியனுப்பினாள். அவள் அங்ஙனம் சென்றுகூற உதயணன்,

"ஒண்ணுதல் கண்ட
தைவரற் கியைந்த தான்பயில் வீணையைக்
கையினும் செவியினும் செவ்விதின் போற்றி
ஆராய்க என்பது நேரிழைக்(கு)உரை" (1-36:364-7)

என்று சொல்லிச் சென்றனன்.

பின் வாசவதத்தையின் கல்வியை அரங்கேற்றுவிக்க நினைத்தனன், அரசன். இசை வல்லுநர் பலரும் வந்திருந்தனர். வாசவதத்தையும் பலிகெழு நல்யாழ் பாங்குறத் தழீஇ" (1-37: 107) நலமிகு சிறப்பொடு நல்லவை புகழ யாழ் வாசித்தனள். கேட்டவர் உதயணனைப் புகழ்ந்து,

"வத்தவ நாடன் வாய்மையில் தருக்கும்
கொற்ற வீணையும் கொடுங்குழை கொண்டனள்"

(1-37: 137-8) என்று கொண்டாடினுர்கள்.

இதுகாறும் கண்டவற்ருல் யாழ் - வீணை என்பவற்றை ஒன்ருகவே கருதினுர் பெருங்கதை ஆசிரியர் என்று கருத இடந் தருகின்றது.

யானையை இசையால் வணக்குதல்

மதம் பிடித்த யானையையும் இசையால் அடக்கலாம் என்று இலக்கியங்கள் பகர்கின்றன. "மகரயாழ் வல்ல மைந்தன் ஒருவனைக் கண்ட மத்தப் புகர்முகக் களிற்றின்" என்று மேருமந்தர புராணத்திலும், "காழ் வரை நில்லாக் கடுங்களிற்றெருத்தல் யாழ் வரைத் தங்கி யாங்கு" என்று கலித்தொகையிலும் யாழால் யானையை அடக்குதல் சொல்லப்பட்டுள்ளது. இனிப் பெருங்கதையில் கூறுவதைப் பார்ப்போம்:

“வேழம் விலக்கிய யாழொடு செல்கென” (1–33-139) என்ற பகுதியில் யாழால் வேழத்தை யடக்குதல் கூறிய பெருங்கதை ஆசிரியர்,

“அணியிழை மகளிரும் யானையும் வணக்கும்
மணியொலி வீணை” (1-35: 100, 101)

என்றும்,

“வார்கவுள் யானை வணக்குதற் கியைந்த
வீணைவிச்சை” (3-6: 114, 115)

என்றும் வீணையால் வேழத்தை யடக்குதல் கூறினுர். இதனுனும் வீணையும் யாழும் ஒன்றே என்ற கருத்துடையவர் பெருங்கதை யாசிரியர் என்பது உறுதி எய்தும்.

சீவக சிந்தாமணியில் யாழும் வீணையும்

சிவகனை (1002, 2335ஆம் செய்யுளில்) **வீணை வித்தகன்** என்றும், (செ. 28இல்) **வீணைக்கிழவன்** என்றும், (செ.2598இல்) **வீணைவேந்து** என்றும் கூறிய திருத்தக்க தேவர், (செ. 1021 இல்) **யாழறிவித்தகன்** என்றும் கூறினுர்; (செ. 620இல்) **“வீணைவாட்போர்”** என்றவர், (செ. 628 இல்) **“யாழ்ப்படை பொருது”** என்றும் கூறியுள்ளார். இவற்றுல் **யாழும் வீணையும் ஒன்றே என்ற கருத்துடையவர் திருத்தக்கதேவர்** என்று கருத இடம் தருகிறது.

வீணைபொருது (செ. 1796)—யாழாலே வென்று; **வீணை** நூல் பொர (செ. 663)-யாழை இசை நூலோடே வாசிக்க; வீணைப்போர் (செ. 666)-யாழ்ப்போர்; வீணை **வித்தகன்** (1002)–யாழ்வென்று கொண்ட தத்தையை **விரும்பினவன் என்று இங்ஙனம் வீணை என்றதற்கு யாழ் என்றே உரை வகுத்தார் நச்சினுர்க்கினியர்,**

மகரவீணை: (செ. 664 இல்) மகரவீணை* என்பதற்கு மகரயாழ் என்றார் உரைகாரர்; மகரவீணை நரம்புரீஇ (செ. 1984) என்ற விடத்து "யாழ்வாசித்துப்பாட" எனப் பெற்றது: "தீந்தொடை மகரவீணை தெள்விளி யெடுப்பித் தேற்றி" (செ. 608) என்பதற்கு உரை கூறும்பொழுது, "பத்தொன்பது நரம்புகட்டின மகர யாழ் இவன் வாசிக்கிறதென்பது தோன்ற மகரவீணை யென்றார்" என்று எழுதினார்; (செ. 619 இல்) "திருமணி வீணைக்குன்றம்" என்றதற்கு "மகரயாழாகியமலை" என்று பொருள் தந்தார்.

சாரீர வீணை: "நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ என்று நைந்தார்" என்பது செ. 658. இதற்கு, "யாழ்தான் தனக்குரிய நரம்போடே சாரீர வீணைக்குரிய நாவாலும் பாடிற்று என்று வருந்தினர்" என்பது நச்சினார்க்கினியர் உரை; இனிச் (செ. 2047இல்) "வீணைச் செவிச்சுவை யமிர்தம்" என்ற விடத்தும், "சாரீர வீணையால் ஆகிய செவிக்கு இனிமைதரும் அமிர் தம்" என்றார். இவற்றான் வீணை என்பது சாரீரம் (மிடறு) என்ற பொருளில் வந்தது எனக்கொள்ளத் தோன்றுகிறது. சிலப்பதிகார உரையாசிரியரும் "மிடறு" என்பதற்குச் "சாரீர வீணை" என்றே பொருள் தந்தார்.

இனி, (செ. 730 இல்) "விருந்தாக யாழ்பண்ணி வீணை தான் தோற்பான்" என்ற விடத்து, "வீணை என்பது யாழையும் பாட்டையும்" என்றும்; (செ. 411இல்) வீணைச் செல்வம்" என்ற விடத்து, "வீணை - தாளத்தோடே

---

* இக்கட்டுரை 'கம்பரும் வீணையும்' என்ற பகுதி பார்க்க.

6

கண்டத்திலும் கருவியிலும் பிறக்கும் பாட்டு" என்றும், (செ. 741 இல்) "சீவகன் வீணை வென்றான்" என்ற விடத்து, "யாழும் பாட்டும் வென்றான்" என்றும் பொருள் தரப்பெற்றுள்ளது. எனவே "யாழும் மிடறும் உடன் நிகழ்ந்த இசைக்கே **வீணை** என்று பெயர்" என்று தோன்றுகிறது.*

காரைக்கால் அம்மையார்

திருஞானசம்பந்தருக்கும் காலத்தால் முற்பட்டவராகிய காரைக்கால் அம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் பின்வரும் பாடலில் "**வீணை**" குறிக்கப் பெற்றுள்ளது:—

துத்தம்கைக் கிள்ளை விளரி தாரம்
　　உழையிளி ஓசைபண் கெழுமப் பாடி
சச்சரி கொக்கரை தக்கை யோடு
　　தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்
　　தமருகம் குடமுழா மொந்தை வாசித்(து)
அத்தனை விரவினோ டாடும் எங்கள்
　　அப்பன் இடம்திரு ஆலங் காடே.

தேவாரத்தில் யாழும் வீணையும் †

திருநாவுக்கரசர்

மாசில் **வீணையும்**......நீழலே;
மண்ணார்ந்த **வீணை** பயின்ற......;

---

* பாணர் கைவழி என்ற நூல் பக்கம் 47-50 பார்க்க.

† இங்கிருந்து காணும் மேற்கோட் பகுதிகளுட் சிலவற்றைத் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் மதுரகவி, வித்துவான் திரு. தா. ம. வெள்ளை வாரணம் அவர்கள் தொகுத்துதவினார்கள்.

முளைக்கதிர்......மழலை **வீணையர்;**
அங்கையுள்......தங்கை **வீணை** வைத்தார்;
கொக்கரை தாளம் **வீணை** பாணி செய் குழகர்;
விடுபட்டி......குழல் தாளம் **வீணை** மொந்தை;
பெருங்கடல்மூடி...எம்மிறை நல்**வீணை** வாசிக்குமே;
நங்கையை......தங்கையின் **யாழும்** வைத்தார்;
காளங்கடந்ததொர்......**யாழ்** கொண்டும்;
கொக்கரை குழல் **வீணை** கொடு கொட்டி;
பட்டுடுத்து......**வீணை**யுண்டே;
வெந்தார்வெண்......**வீணை**யேந்தி;
பாடுமே ஒழியாமே......குடமுழவம் **வீணை** தாளம்
குறுநடைய சிறுபூதம் முழக்க;
வீறுடைய ஏறேறி **வீணை**யேந்தி;
குழையார்...ஏழிசை **யாழ்வீணை** முரலக்கண்டேன்;

பண்ணார்ந்த **வீணை** பயின்றதுண்டோ;
அறைகலந்த குழல்மொந்தை **வீணையாழும்;**
விரையுண்ட......ஒருகை **வீணை**யுண்டு;
கட்டியொக்கு......**வீணை** விகிர்தனர்:
சடையொன்றில்...இசை**வீணை** தடவிக்கொண்டார்.

சம்பந்தர்

ஞாழலும்......**யாழி** னதிசையுடை யிறைவர்;
பண்ணி**யாழ்** பயில்கின்ற;
யாழ் நரம்பின் னிசை;
பாராரு முழவம் மொந்தை குழல் **யாழொலி;**
வேத மலிந்தவொலி......**வீணை**யொலி:

ஆலேசேர்......பாலையாழ் வேணுபுரம்;
மாசில்மன......தேசவொலி வீணையொடு;
வண்ணமுகில்......இசையாழ் மருவு தேவூர்;
காலையொடு......யாழ்முழவு காமருவு சீர்;
வேயுறு தோளி......மிக நல்ல வீணை தடவி;
குழலினேசை வீணை மொந்தை;
தமிழினீர்மை பேசித்தாளம் வீணைபண்ணி;
பண்ணுலாம் பாடல் வீணை பயில்வான்;
பரசுபாணியர் பாடல் வீணையர்;
பாடல் வீணையர்;
சல்லரி யாழ் முழவம்;
பண்ணில் யாழினர்;
கட்டிணை புதுமலர்......வீணையர்.

குறிப்பு:— நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர் அருளிய திருப்பாடல்களைத் தம் யாழில் உடன் வாசித்து வந்தவர் திரு நீலகண்ட யாழ்ப்பாணர் ஆவர்.

சுந்தரர்

தாழ்வெனும் தன்மைவிட்டு......யாழ் முயன்றிருக்கும் ஆரூர்;
தக்கை தண்ணுமை தாளம் வீணை;
கொங்கார் மலர்......வீணையுடையவனே;
விட்டதோர் சடைதாழ வீணை விடங்காக;
வித்தக வீணையொடு;
மண்ணெலாம் முழவமதிர...பண்ணியாழ் முரலும்.

சேரமான் பெருமாள்

சுந்தரர் காலத்தவர் சேரமான் பெருமாள்; அவர் பெற்ற திருமுகப் பாசுரத்தில், "பண்பால் **யாழ்பயில்** பாணபத்திரன்" என்றுள்ளது.

அவருடைய **திருக்கைலாய ஞான உலாவில்** (24) 'மன்னும் அகத்தியன் யாழ் வாசிப்ப'; (46) குடமுழவம் கொக்கரை **வீணை குழல் யாழ்**; (122) காமரம் யாழ் அமைத்து; (141) இன்னிசை **வீணையை** வாங்கி; (143) மன்னிய **வீணையும்** கைவிட்டு என்று யாழும் வீணையும் குறிக்கப்பெற்றுள்ளன.

மாணிக்கவாசகர்

இன்னிசை **வீணையில்** இசைந்தோன் காண்க (திருவண்டப் பகுதி-35); இன்னிசை **வீணையர் யாழினர்** ஒருபால் (திருப்பள்ளி யெழுச்சி-4); பொன்னியலும் திருமேனி ......**வீணை** முரன்றெழும் (திருப்படையாட்சி-6).

மேலே காட்டியவாறு சைவ சமய குரவர் நால்வரும் சேரமான் பெருமாளும் வீணையையும் யாழையும் பல இடங்களில் குறித்துள்ளனர். சிவபெருமான் "நல் வீணை வாசிக்கும்" என்றும், "கையில் வீணை வைத்தார்" என்றும் கூறப்பெறுகிறார்; அவர் "தம் கையில் யாழும் வைத்தார்" என்றும் சொல்லப் பெறுகிறார். இதனால் **யாழும் வீணையும்** ஒன்றே என்று கருத இடமுண்டு.

ஆனால், "அறைகலந்த குழல்மொந்தை **வீணை யாழும்**" என்றும், ஏழிசை **யாழ்வீணை** முரலக் கண்டேன்" என்றும், யாழையும் வீணையையும் அப்பரும்,

'குடமுழவம் கொக்கரை வீணை குழல் யாழ்' என்று சேரமான் பெருமாள் நாயனுரும் ஒரு சேரக் கூறுதலி னின்று இவை வெவ்வேறு கருவிகள் தாமோ என்று நினைக்கத் தோன்றுகிறது. "இன்னிசை வீணையர் யாழி னர் ஒரு பால்" என்ற திருவாசகம் இக்கருத்துக்கு ஆதரவு தருவதாக உள்ளது.

சேக்கிழாரும் வீணையும்

7ஆம் நூற்ருண்டினராய திருநாவுக்கரசர் நீற்றறை யிலிடப்பட்ட பொழுது பாடிய பதிகத்தின் முதற் செய்யுள்:

"மாசில் வீணையும் மாலைமதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே" என்பது.

12ஆம் நூற்ருண்டில் இரண்டாம் குலோத்துங்க சோழனுடைய உயர் அலுவலராயமர்ந்து பெரிய புரா ணம் பாடியருளிய உத்தமராகிய சேக்கிழார், "மாசில் வீணை" என்ற தேவாரத்துக்கு விளக்கவுரை தருவது போல ஒரு பாடலை எழுதியுள்ளார். அப் பாடல் பின் வருமாறு:—

வெய்யநீற் றறையதுதான் வீங்கிளவே னிற்பருவம்
தைவருதண் தென்றலணை தண்கழுநீர்த் தடம்போன்று
மொய்யொளிவெண் ணிலவலர்ந்து முரன்றயாழ் ஒலியினதாய்
ஐயர்திரு வடிநீழல் அருளாகிக் குளிர்ந்ததே.

இப்பாடலில் "மாசில் வீணை" என்றதை "முரன் றயாழொலி" என்று விளக்கினர் சேக்கிழார் என்றுணர

லாம். இதனுல் **வீணையும்யாழும்** ஒன்றே என்ற கருத்துடையவர் சேக்கிழார் சுவாமிகள் என்று கருதலாம். ஆனுல் திருநாளைப் போவார் புராணத்தில்,

> " போர்வைத்தோல் விசிவார்என் றினையனவும் புகலுமிசை
> நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலவகையில்
> சேர்வுற்ற தந்திரியும் தேவர்பிரான் அர்ச்சனைகட்(கு)
> ஆர்வத்தி னுடன்கோரோ சனையுமிவை அளித்துள்ளார் "

என்ற திருப்பாடலில் **வீணையும் யாழும்** வெவ்வேறு கருவிகள் என்பதைக் காட்டியுள்ளார். இங்ஙனமே சம்பந்தர் புராணத்துள் " கோதையர்.........ஏதமில் விபஞ்சி **வீணை யாழொலி** ஒருபால் " என்றும் கூறியமை காண்க.

ஒட்டக்கூத்தர்: மூவருலா

1. விக்கிரம சோழனுலா

(102) விரல் கவரும் **வீணையும்** யாழும் குழலும்;
(274) பாடுகெனக் கூனல் யாழ் எடுத்தான் பாணன்;
(279) விசைத்தெழுந்த வீணையிசையாலோ.

2. குலோத்துங்க சோழனுலா

(216) யாழாய் மிடற்றுல் வணக்குதும்;
(252) முரல் யாழ் நடைக்கை.

3. ராசராச சோழனுலா

(266) மதுரயாழ் வாங்கி;
(269) விரல்கவரும், **வீணைக்ககப்பட** வேழம்.

ஜங்கொண்டார்: கலிங்கத்துப்பரணி

(18) கேழல் மேழிகலை யாளி **வீணை** சிலை
கெண்டை என்றினைய பல்கொடி*;
(323) **வீணை** யாழ்குழல் தண்ணுமை வல்லவர்.

ஜயங்கொண்டார், முதற் குலோத்துங்கன் காலத்தவர். முதற் குலோத்துங்கனுக்கு அடுத்து ஆண்ட விக்கிரம சோழன் முதலிய மூவரசர் காலத்திலும் வாழ்ந்தவர், ஒட்டக்கூத்தர். இவ்விரு பெரும் புலவர்களும் **வீணையையும் யாழையும் வேறுவேருகவே கருதினர்** என்றறியலாம்.

கருவூர்த் தேவர்

கருவூர்த்தேவர் முதலாம் இராசராசன் காலத்தவர்; மேற்குறித்த புலவர்களுக்கும் காலத்தால் ஒரு நூற்ருண்டு முற்பட்டவர். அவர் திருவிசைப்பாவில், ''தன்னக மழலை'' என்ற பாடலில், ''கின்னரம் முழவம் மழலை யாழ்**வீணை** கெழுவு கம்பலைசெய் கிழ்க்கோட்டூர்'' என்று இவ்விரு இசைக் கருவிகளையும் வேறுவேருகக் குறித்துள்ளமை அறியத்தக்கது.

கம்பரும் வீணையும்

மகரயாழ் (பாலகாண்டம் நாட்டுப் படலம் செ.3);
மகரயாழிசை (ஷை ஷை செ. 43);
மகர**வீணை**யின் கிளையொலி (ஷை நகரப்படலம் செ. 61);
மாடகம் பயிற்றிய மகர**வீணை** (ஷை உண்டாட்டு செ.32);
தைவரு மகர**வீணை** தண்ணுமை
(ஷை மிதிலைப்படலம் செ. 9);
நல்லியல் மகர**வீணை**த் தேறுக
(ஷை கார்முகப்படலம் செ. 38);

---

* இக் கட்டுரை ''வீணைக்கொடி'' என்ற தலைப்பைக் காண்க.

என்ற மேற்குறித்த பகுதிகளுள் மகரவீணையும் மகரயாழும் கூறப்பெற்றுள்ளன. இவை வேறு வேறு னவை என்று தோன்றுமாறில்லை.

சுந்தரகாண்டத்தில் "குழலும் **வீணையும் யாழும்** என்றிணையன" (ஊர்தேடுபடலம் செ. 6) என்றும், ஆரணிய காண்டத்தில் மாரிசன் வதைப்படலத்தில் (செ. 36இல்) "முழவினில் **வீணையின்** முரளி **யாழினில்**" என்றும் கூறுதலினின்று **வீணை வேறு யாழ் வேறு** என்பது **கம்பர் கருத்து** என அறியலாம்.

நிகண்டுகளில் வீணை

நாம தீப நிகண்டில் (செ. 112 இல்) மிதுனராசியின் பெயர்களில் ஒன்றாக **வீணை** குறிக்கப் பெற்றுள்ளது: (செ. 464 இல்) வீணையின் பெயர்களுள் ஒன்றாக '**யாழ்**' கூறப் பெற்றது.

சூடாமணி நிகண்டில், "வாரி கின்னரம் **வீணையின் பேர்** கிளத்திய தண்டுமாகும்" என்றும், "மன்னிய **யாழ்ப் பேர்** கோணவ்தியொடு விபஞ்சியாகும்" என்றும் உள்ளது. (பத்தாவது ஒலி பற்றிய பெயர்த் தொகுதி, செ. 42.) மிதுனத்தின் பெயராக "யாழ்" என்பதைச் சூடாமணி நிகண்டு கூறும் (முதலாவது தேவப் பெயர்த் தொகுதி, செ, 64).

பிங்கல நிகண்டில், ஆறுவது அநுபோக வகையில், (நூற்பா 328 இல்) "**வீணை** கின்னரம் தண்டுமாகும்" என்று கூறியவர், அடுத்து (329 இல்) யாழின் பெயர்களுள் ஒன்றாக **வீணையைக் குறித்துள்ளார்**; பத்தாவது

ஒரு சொற் பல்பொருள் வகை நூற்பா 975இல், "மிதுன ராசியும் வீணைக் கருவியும் அசுபதி நாளும் யாழென லாகும்" என்றுள்ளது.

எனவே வீணையும் யாழும் வெவ்வேறு கருவிகள் என்று சூடாமணி நிகண்டு ஆசிரியர் கொண்டார் என்றும், மற்ற இருவரும் அவ்விரண்டினையும் ஒன்ருகவே கொண்டார் என்றும் அறிகிருேம்.

முடிந்தது முடித்தல்

இதுகாறும் கூறியவாற்ருன், மிகப் பழமையான காவியமாகிய சிலப்பதிகாரத்தில் வீணை கூறப்பெற்றுள்ளது என்றும், பெருங்கதை, சீவகசிந்தாமணி ஆசிரியர்கள் வீணையும் யாழும் ஒன்றே என்று கொண்டார்கள் என்றும், நச்சிஞர்க்கினியர் வீணை என்ற விடத்து யாழ் என்றே உரைவகுத்தார் என்றும், "வீணை என்பது தாளத்தோடே கண்டத்திலும் கருவியிலும் பிறக்கும் பாட்டு" என்று நச்சிஞர்க்கினியர் கூறியுள்ளார் என்றும், சம்பந்தர், அப்பர், சுந்தரர்,* சேரமான் பெருமாள், மாணிக்க வாசகர் ஆகிய சமயப் பெரியோர்களும், ஒட்டக்கூத்தர், ஜயங்கொண்டார், கம்பர் போன்ற இடைக் காலப் புலவர்களும் வீணையையும் யாழையும் வெவ்வேறு கருவிகளாகவே கருதினர் என்றும், சேக்கிழார் மாசில்வீணை என்பதற்கு "யாழொலி" என்று உரை வகுத்தாலும், திருநாளைப்போவார் புராணத்தில் இவ்

---

* சுந்தரர், "கைகிளரும் வீணை வலவன் கண்டாய்"; 'பண்ணூர்ந்த வீணை பயின்றதுண்டோ"; "வீணை தான், அவர் கருவியோ" என்றும் கூறியமை அறிதற்பாலனவாம்.

விரு கருவிகளையும் வெவ்வேருகவே கருதினர் என்றும் கண்டோம்.

பல்லவ அரசரும் வீணையும்

மகேந்திரவர்மன் (கி. பி. 615-630) என்ற பல்லவ அரசன் இசை வல்லவன்; **சங்கீரண சாதி** என்ற சிறப்புப் பெயருடையவன். 'தாளவகை ஐந்தனுள் **சங்கீரணம்** என்பதைக் கண்டுபிடித்து அதன் வகைகளை அமைத்தவன்' என்பது அதன் பொருள். மகேந்திரனது குடுமியா மலைக்கல்வெட்டு "**சித்தம் நமசிவாய**" என்று தொடங்குவது; அது இசைபற்றிய கல்வெட்டு; அதன் இறுதியில் "**இவை எட்டிற்கும் ஏழிற்குமுரிய**" என்றுள்ளது. "மகேந்திரன் கண்டறிந்த பண்கள் எட்டு நரம்புகள் கொண்ட வீணைக்கும் ஏழு நரம்புகள் கொண்ட வீணைக்கும் உரிய" என்பது இதன் பொருள் என்றும், "எட்டு நரம்புகளைக் கொண்ட வீணையை இவன் கண்டுபிடித்தவன்" என்றும் ஆராய்ச்சியாளர் கருதுவர். இவ்வரசன் "**பரிவாதினி**" என்ற **வீணையில் வல்லவன்**. "பரிவாதினி" என்ற சொல் இவ்வரசனது குடுமியாமலைக் கல்லெழுத்தில் பயின்றுள்ளது. அசுவகோஷர் என்பார் தாம் எழுதிய புத்த சரித்திரத்தில், **பரிவாதினி** என்பது **பொன் நரம்புகளையுடையது** என்றும், ஒரு பெண் தன் தோழியை அணைத்துக்கொண்டு படுப்பது போல ஒருத்தி பரிவாதினியை அணைத்துக் கொண்டாள் என்றும் கூறுகிருர்.*

---

*Dr C. Minakshi; Administraton and Social Life under the Pallavas - Pages 248-9;

Dr. இராசமாணிக்கஞர், பல்லவர் வரலாறு, பக்கம் 181, 182.

நரசிம்மவர்மன் காலத்தவை (கி. பி. 630-668) மகாபலிபுரத்தில் உள்ள கல்தேர்கள். அவற்றுள் ஒன்று தருமராசர் தேர் எனப்பெறும். இத்தேர் மூன்று நிலைகளை யுடைய மாடக்கோயில். இதில் இரண்டாவது நிலையில் ஒரு சிற்பம் **வீணாதர மூர்த்தியாகும்.** இவர் சிவபெருமான்; நின்ற நிலையில் இருக்கிறார்; "தண்டு என்னும் வீணையை வலதுகையினாலும் இடதுகையினாலும் இடது மார்பின்மேல் சாய்த்துப் பிடித்து வீணை வாசிக்கிறார்; வீணை இசையில் ஈடுபட்டுச் செவி சாய்த்திருக்கிறார்; இசையின்பத்தை வியப்பது போல மற்றொரு வலது கையைத் தூக்கி விரல்களை விரித்து வியப்புக் குறியைக் காட்டுகிறார்; இன்னொரு இடதுகை விரல்கள் தாளம் அமைத்தல் போலக் காணப்படுகின்றன. சிவபெருமான் வீணைவாசித்துக் கொண்டு அந்த வீணை இன்பத்தில் முழுவதும் ஈடுபட்டிருக்கும் காட்சி இது."†

இராசசிம்மன் (கி. பி. 687-705) என்ற பல்லவ அரசன் இசையில் பெரும் புலமையுடையவன். இதனை, **வாத்ய வித்யாதரன், ஆதோத்ய தும்புரு, வீணாநாரதன்** என்ற இவனது சிறப்புப் பெயர்கள் வலியுறுத்தும். இவற்றால் இவ்வரசன், இசைக் கருவிகளை இயக்குவதில் வித்யாதரர்களைப் போன்றவன் என்றும், ஆதோத்ய வீணையில் தும்புருவைப் போல வல்லவன் என்றும், வீணையில் நாரதனை ஒத்தவன் என்றும் அறிகிறோம். இவ்வரசனே காஞ்சிபுரத்தில் கயிலாசநாதர் கோயிலைக் கட்டியவன். கயிலாசநாதர் கோயிலில் வீணாதரனாகச் சிவபெருமான் இரு சிற்பங்களில் உள்ளார். "இச்சிற்பங்களில் உள்ள

---

† மயிலை, சீனி, வேங்கடசாமி-நரசிம்மவர்மன்; பக்கம் 121.

வீணைக்கும் தற்கால வீணைக்கும் பல வேற்றுமைகள் உண்டு. இக்கோயில் சிற்பங்களில் உள்ள வீணைகளுக்கு ஒரே சுரைக்காய்தான் உண்டு. இச்சுரைக்காயைச் சிவன் தன் இடத் தோள் மேல் சார்த்தித் தண்டத்தின் மேல் அமைந்திருக்கும் தந்திகளை மீட்டுகின்றார். ஒரு சிற்பத்தில் வீணைக்கு நான்கு நரம்புகளும், மற்றொரு வீணையில் ஒரே நரம்பும் செதுக்கப்பட்டுள்ளது[1]"

சோழர் அமைத்த வீணைக்காணி[2]

திண்டிவனத்தில் முதல் இராசராசனது 10ஆவது ஆட்சி யாண்டுக் கல்லெழுத்தில், "தரிசாகக் கிடந்த 2910 குழிநிலம் பண்படுத்தப் பெற்றுக் கிடங்கில் திண்டீச்சுவரர் கோயிலில் வீணைவாசிப்பார் ஒருவர்க்கும், உடன் வாய்ப்பாட்டுப் பாடுவார் ஒருவர்க்கும் அளிக்கப் பெற்றது" என்று இருக்கிறது.[3]

விக்ரம சோழனது 6ஆவது ஆண்டுக் கல்லெழுத்தில்,[4] வேப்பத்தூர் மகேசுவரர்களும், சிவப்பிராமணர்களும், சபையினரும், திருந்து தேவன்குடியில் அருமருந்துடையார் கோயிலில் வீணை வாசிக்க ஒரு சிவப்பிராமணனுக்கு வீணைக்காணி அளித்த செய்தி கூறப்பெற்றுள்ளது.

தஞ்சாவூர் ஜில்லா திருக்கடவூர்த் திருமயானத்துக் கண்ட திருபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மைகொண்

---

[1] தமிழிசை மலர்-5, பக்கம் 27.

[2] வீணை வாசிப்பார்க்கு அளிக்கப்பெற்ற இறையிலி நிலம்.

[3] 141 of 1900; S.I.I. VII, 154.

[4] 47 of 1910.

டான் என்பாருடைய 11ஆவது ஆண்டுக்குரிய கல்லெழுத்து வீணை வாசிப்பதற்கும் வேதம் ஓதுவதற்கும் நிபந்தம் அளித்ததைக் கூறுகிறது.[5]

வீணைக்கொடி

அன்னையர் எழுவர் வணக்கம் கூறுமிடத்துக் கலிங்கத்துப் பரணி ஆசிரியர் பல கொடிகளையும் கூறுவார், வீணைக்கொடியையும் கூறியுள்ளார்:—

கேழல் மேழி கலை யாளி வீணை சிலை
கெண்டையென் றினைய பல்கொடி
தாழ மேருவி லுயர்த்த செம்பியர்
தனிப் புலிக்கொடி தழைக்கவே (தாழிசை-18).

இனி, ஒட்டக்கூத்தர் தாம் பாடிய குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில் 64ஆவது பாடலில், "ஊழி பலவந்து பகைமேழியையும் வீணையையும்" என்றவிடத்து, இரண்டாம் குலோத்துங்க சோழனது பகை மன்னரின் கொடியாக வீணையைக் குறித்துள்ளார். வீணைக்கொடி சிங்களவர்க்கு உரியது. "பூமருவிய புவியேழும்" என்று தொடங்கும் இரண்டாம் குலோத்துங்க சோழனது இரண்டாவது ஆண்டுக் கல்லெழுத்துத் திருமழபாடியிலுள்ளது.[6] அதில் "வீணைக்கொடிச் சிங்களர்" என்று உள்ளது. இராவணனும் "வீணைக்கொடியோன்" எனப் பெற்றான்.

---

[5] 54 of 1906.

[6] 645 of S.I.I. Vol. V; No. 85 of 1895.

இராவணன் இசைவல்லுநன்; "வீணையின் இசை பாட வேதம் பாடுவான்†" என்பர் கம்பர். "ஏழிசை யாழ இராவணனே" என்பர் திருஞானசம்பந்தர்; "அரக்க ஞர்......யாழ் பாடவே" என்பதும் சம்பந்தர் தேவாரம். இராவணன் இசையில் தேர்ந்தவன் ஆதலின் அதற்கு அறிகுறியாகச் சிறந்த இசைக் கருவியான வீணையின் வடிவைக் கொடியிற் கொண்டனன் என்று கருதலாம். கம்பர், ஆரணியகாண்டம் சடாயு உயிர்நீத்த படலம், செ. 107இல் சடாயுவுக்கும் இராவணனுக்கும் போர் நடந்ததைக் கூறும்பொழுது சடாயு "நீண்ட வீணைக் கொடி பற்றி ஒடித்து உயர்வானவர் ஆசிகொண்டான்" என்றும், செ. 167இல் சீதையைத் தேடிச் செல்லும் இராம இலக்குமணர்கள் வீணைக்கொடி பார்மேல் கிடந்த தைக் கண்டார்கள் என்றும் கூறினர்:—

> மாக மால்வரை கால்பொர மறிந்தது மானப்
> பாக வீணையின் கொடியொன்று கிடந்தது பார்மேல்.

உயுத்தகாண்டம் இராவணன் வதைப்படலத்துள் செ. 87இல் 'இசையுறு கருவியின் இனிதுறு கொடி' என்றும், முதற் போர்ப் படலம் செ. 101இல், 'ஏழி சைக் கருவி...... தொல்கொடி' என்றும் கூறியுள்ளார்.

இராவணனது துவசம் மனிதன் தலைவடிவமெழுதப் பட்டது என்பர் ஸ்ரீ வால்மீகி முனிவர்‡. ஆனல் இரா வணனது கொடி. வீணைக்கொடி என்று கம்பர் கூறியது

---

† ஆரணியகாண்டம்-சடாயு உயிர்நீத்த படலம் செ. 21
‡ ஷை ஷை செ. 107ன் உரை
(வை. மு. ச; சே. கி.)

தம் காலத்துச் சிங்களவர்க்கு வீணைக் கொடியிருந்ததை நோக்கியே என்று கூறினும் பொருந்தும்.

பொது

'மாதங்கி' என்பது வீணைக்குரிய தெய்வம் (சிந்தாமணி செ. 411, 550 உரை); இசை நாடகம் காமத்தை விளைத்தலின் அவற்றுற் பிறக்கும் காமம் **வீணைச்செல்வம்** எனப்பெறும் (சிந்தாமணி செ. 411, உரை); சரீரத்தையும் வீணையென்று கூறுவதுண்டு (சிலப் 3 வரி 24; தக்கயாகப்பரணி 610 உரை); முதுகெலும்பினை **வீணா** தண்டு என்று சொல்வதுண்டு (ஞாநாமிர்தம் 14 இல் 15வது வரி); **வேதவீணை** என்பது ஒரு வீணை விசேடம் (தக்கயாகப்பரணி 623); நாரதன் வீணை '**மகதீ**' என்றும், சரசுவதியின் வீணை '**கச்சபீ**' என்றும் பெயர் பெறும்.

---

12. உடன்கட்டை ஏறல்

"எஞ்ஞான்றும் காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" என்பது ஔவையார் பாட்டு. காதலனும் காதலியும் இணைபிரியாது அன்பும் அருளும் தாங்கிச் சுற்றம் ஓம்பி, விருந்து புறந்தந்து அருந்தவர்ப்பேணி, இல்லறம் நடாத்துவதே இல் வாழ்க்கை. "இல்லற மல்லது நல்லறமன்று" என்பர் ஔவையார். "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்றார் வள்ளுவனாரும். ஆணும் பெண்ணும் இயைந்து வாழ்வதையே சராசரங்களில் எங்கும் காண்கிறோம். "காதன் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன்", "வரிக்குயில் பேடையொடாடி வைகி வருவன கண்டேன்", "பேடைமயிலொடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்" என்று ஆண் பெண் இணைந்து வாழும் வாழ்க்கையையே திருவையாற்றில் திருநாவுக்கரசர் கண்டார்.

> "இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனுக்
> கண்ணிறை நீர்கொண் டனள்"

என்பது திருவள்ளுவர் காட்டும் இல்லறக் காட்சிக ளுள் ஒன்று.

> "இம்மை மாறி மறுமை யாயினும்
> நீயா கியர்என் கணவனை
> யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே"

என்பது குறுந்தொகையிற் கண்ட தலைவி யொருத்தியின்

கூற்று. இத்தகைய இன்ப அன்பிஞேடு இல்வாழ்க்கை நடத்தும் இருவரை, ஒரு கணமேனும் பிரிந்துறை வாழ்க்கையைப் பொருத இருவர் என்றும், மனமொத்த இநவர் என்றுங் கூற்றுவன் கருதுவதில்லை. எவரே னும் ஒருவரைக் கூற்றுவன் முன்னர்க் கவர்தல் கண் கூடு.

தபுதார நிலை

மனைவி யிறப்பின் ஆண் மக்கள் அடுத்துத் தாரம் எய்துவது பெரும்பான்மை. வேறொருத்தியைக் கொள் ளாது இருப்பவர் சிலரே. வேறு மனைவியை மணக்காது தாரமிழந்த நிலையில், இருப்பதையே "**காதலியிழந்த தபுதாரநிலை**" என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். **சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை** என்பவருடைய மனைவி பெருங்கோப்பெண்டு இறந் தாள். அவள் பிரிவு இம்மன்னற்குப் பெருந் துன்பத்தை விளைவித்தது; "ஒள்ளழல் பள்ளிப் பாயல் சேர்த்தி, ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை, இன்னும் வாழ்வல், என்னுயிர் நீங்குகிற்றிலது" என்று வருந்தினுன். இச் செய்தியை அறிவிப்பதே புறம் 245 ஆம் செய்யுள்.

ஆரஞர்

"மக்கள் இழந்த இடும்பையினும் மனையாளிழந்த இடும்பையினும் மிக்க விடும்பை விதவையிடும்பை." இதனைன்றே சிலப்பதிகார வாசிரியரும் "ஆரஞர் உற்ற வீரபத்தினி" என்ற விடத்து விதவையிடும்பையை "ஆரஞர்" என்ற சொற்ருெடராற் குறித்தார்; இத னைப் பின்னும் விளக்குவார் போலக் "கணவனை இழந் தோர்க்குக் காட்டுவதில்" என்று வழக்குரை காதை

யிற் கூறினர். எனவே தந்தைதாய் முதலாயினரை யிழந்தார்க்கு அம்முறை சொல்லிக் காட்டலாம்; இஃது அவ்வாறு சொல்லலாகாமையின் இவ்விடும்பை பெரிய வருத்தமாகத் தோன்றுவது இயல்பேயாகும்.

காதலன் இறப்பின்

காதலன் இறப்பின் மனைவி யிறந்துவிடுவது குறித்துப் பல செய்திகள் காணப் பெறுகின்றன. தலைவன் உயிரை நீக்கின வேலாலே மனைக்கிழத்தி தன் உயிரை மாய்த்துக் கொள்ளுதல் ஒன்று. இஃது "ஆஞ்சிக் காஞ்சி" எனப்பெறும்.

"மன்னுயிர் நீத்த வேலின் மனையோள்
இன்னுயிர் நீப்பினும் அத்துறை யாகும்"

என்பர் புறப்பொருள் வெண்பாமாலை யாசிரியர். தொல்காப்பியனுர், "நீத்த கணவன் தீர்த்த வேலின் பெயர்த்த மனைவி ஆஞ்சி" என்ற துறையிலே அமைத்தது இதனையே என்டார் இளம்பூரணர்.

தொல்காப்பியர், "கொண்டோன் தலையொடு முலையும் முகனும் சேர்த்தி முடிந்தநிலை" என்ற ஒரு துறையைக் கூறுவர். கணவனது தலையோடு தனது முலைகளையும் முகத்தையும் சேர்த்துத் தலைவி இறந்து படுவது இதுவாகும். இதனைத் "தலையொடு முடிதல்" என்பர் புறப்பொருள் வெண்பாமாலையுடையார்.

இனிக், "காதலர் இறப்பின் கனையெரி பொத்தி, ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது, இன்னுயிர் ஈவர்" ஒரு சாரார். அவ்வாறு உடனுயிர் நீத்தவர் அறக்

கற்புடையார் எனப் பெறுவர். "கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று, வெள்வேல் கொற்றங் காண்" என்றனன் பாண்டியன் நெடுஞ்செழியன். 'என் கண வன் கள்வனல்லன்; என்காற் சிலம்பு மணியுடையரியே" என்று மறு மொழி பகர்ந்தனள் மறக் கற்புடைய கண் ணகி. "நன்று, யாமுடைச் சிலம்பு முத்துடையரியே" என்று பகர்ந்து, கண்ணகியின் சிலம்பை நெடுஞ்செழியன் சோதித்தான்; அவள் மாற்றத்தின் வாய்மையை யுணர்ந் தான்; 'கெடுக வென் ஆயுள்' என்று கூறிமயங்கி வீழ்ந் தான்; "கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பொறாஅள், மன்னவன் செல்வுழிச் செல்க யான்எனத், தன்னுயிர் கொண்டவன் உயிர்தே டினள்போல், பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்." கோப்பெருந் தேவியின் இச் செயலே சிறந்த கற்புக்கு எடுத்துக் காட்டு.

இவ்வாறு இரண்டு உயிர் என்று இன்றி, ஒருயிர் போல உடன் இறத்தலைக் கண்டார் அதிசயித்துச் சொல்வதனை "மூதானந்தம்" என்று ஒரு துறையாகப் புறப்பொருள் வெண்பாமாலை யாசிரியர் அமைத்துள்ளார். இவை நிற்க,

வயந்தமாலைக்கு மாதவி யுரைத்தது

கோவலன் இறந்த செய்தி கேட்டு மாதவி மனம் மாழ்கினாள். புகாரில் இந்திர விழாவும் வந்தது. அவ் விழாவுக்கு மணிமேகலையும், மாதவியும் வரவில்லை. மாதவியின் தாயாகிய சித்திராவதி, மாதவி வாராமையால் மனம் புழுங்கினாள்; வயந்த மாலையை அழைத்து ஊரார்

கூறும் பழிமொழியை மாதவிக்குச் சொல்லி வருமாறு அனுப்பினுள். அங்ஙனம் கூறிய வயந்த மாலையை நோக்கி மாதவி காதலனை இழந்தோர் நிலையைக் கூறுவாளாய்,

“ காதலன் உற்ற கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா உயிரொடு நின்றேன்
காதலர் இறப்பின் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்கா(து)
இன்னுயிர் ஈவர்; ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளிஎரி புகுவர்;
நளியெரி புகாஅ ராயின் அன்பரோ(டு)
உடன் உயிர் வாழ்க்கைக்கு நோற்(று) உடம்(பு)
அடுவர் ”

என்று மூன்று நிலைகளைக் கூறினுள். இம்மூன்றனுள் உடன் உயிர்நீத்தல் பாண்டியன் நெடுஞ்செழியனது கோப்பெருந்தேவி மாட்டும், இரண்டாவதாகிய தீப்பாய்தல் பூதப் பாண்டியன் தேவியிடத்தும் கண்டனவாகும். பின்னதாகிய கைம்மை நோன்பு நோற்றல் எண்ணிறந்த உலகோர் மாட்டுக் காணப்படுவதாகும்.

நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுதல்

கணவன் இறப்பின் “விதவையிடும்பையை” வெறுக்கும் மகளிர் கணவனேடு உடன் கட்டை ஏறுதல் ஓர் ஒழுகலாறு. இவ்வொழுக்கத்தை “சதி” என்றும், “சக கமனம்” என்றும் கூறுவர். இங்ஙனம் கணவன் இறக்க உடனுயிர் நீத்தவரை மாசத்தி அதாவது தெய்வம் என்று கொண்டு அவர் பொருட்டுக் கல் நாட்டியும், பிறவாறும் வணங்கி வழிபட்டனர். இக் கல்,

மாசத்திக்கல் எனப்பெறும். இவ்வொழுக்கத்தைத் தொல்காப்பியனுர், காஞ்சித்திணைத் துறைகளுள், "நல்லோள் கணவனெடு நளியழல் புகீஇச், சொல்லிடையிட்ட மாலைநிலை" என்ற துறையில் ஓதுவர். (நச்சினுர்க்கினியர் "பாலைநிலை" என்று பாடம் ஓதுவர்.) உடன் கட்டை ஏறுதல் எஞ்ஞான்றும் அருகிய வழக்கினதாகவே இருந்தது எனல் பொருந்தும். உடன்கட்டை ஏறுதலைப் பெண்டிர் பெருமையாகவே கொண்டனர்; அதனை விலக்குதல் அறிவுடையார் செயலாகவும் இருந்தது; விலக்குபவர், மாசத்திகளால் வெறுக்கப்பெற்றனர் என்றும் அறிய வேண்டும். சுருங்கக் கூறின் சக கமனம் ஒரு வியத்தகு செயலாகவே எப்பொழுதும் கருதப்பெற்றது எனலாம்.

ஒரு மந்தியின் செயல்

ஓர் ஆண் குரங்கு இறந்தது. மந்தி இப் பெரும் பிரிவை ஆற்ருதாயிற்று; கைம்மைத் துன்பத்தை வெறுத்தது. அதற்கு ஒரேஒரு குட்டியிருந்தது. அக் குட்டி மரமேறுதல் முதலியவற்றையுங் கற்கவில்லை. அதனையுங் கருதாது தன் சுற்றத்தினிடம் அக் குட்டியைச் சேர்த்து, மலைமேலிருந்து கீழே பாய்ந்து உயிர் விட்டது அம்மந்தி. இதனைப் பின்வரும் குறுந்தொகைச் செய்யுள் கூறுகிறது:—

"கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சாரல் நாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே."

இங்ஙனம் விலங்குகளிலும் ஆண் விலங்கு இறந்ததும் பெண் உடன் உயிர் நீத்த செயல் தலையன்பைக் காட்டு கிறது. விலங்குகளிடத்தும் பறவைகளிடத்தும் இணை பிரியாநிலை கண்கூடு. ஆகவே இம்மந்தியின் செயல் புலவர் கற்பனையன்று; உண்மையேயாம். இத்தலையன்பு மானிடர் மாட்டுக் காணப்படுதலை இயல்பாகவே கோடல் தகும்; எனினும் வியத்தகு செயலாகவே இலக்கி யங்களிற் காண்கிறோம்.

பெருங்கோப் பெண்டு

சங்ககாலத்துப் பாண்டிய அரசருள்ளே பழமை யான அரசன் **ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்;** இவன் ஒரு பெரும்புலவன்; இவன் மனைவியின் பெயர் பெருங்கோப் பெண்டு. இப் பெருங்கோப் பெண்டும் சிறந்த கல்வி யறிவு வாய்ந்தவள். பாண்டியன் இவளைச் சிறிதும் பிரிதலாற்றாப் **பேரன்பு** உடையவன் என்பது, ஒருகால் பாண்டிய அரசன் வஞ்சினம் கூற நேர்ந்த பொழுது, "சிறந்த பேரமர் உண்கண் இவளினும் பிரிக" என்றதால் விளங்கும். "நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும், பெருமை யுடைத்திவ் வுலகு," ஆகலின் பூதப்பாண்டியன் பூதவுடலை நீத்தான். பொருங்கோப் பெண்டு ஆற்றொணாத் துயரெய்தினாள்; ஈமத் தீயிற்பாய்ந்து உயிர்க்காதலனோடு இறப்பதே மேல் எனத் துணிந்தாள்; நீர் நிலைக்குச் சென்று மூழ்கினாள்; நீர் படிந்த கூந்தல் புறத்திலே தாழத் துன்பமேவிய கண்களையுடையவ ளாய்ப் புறங்காட்டை நோக்கி விரைந்து சென்றாள் (புறம்-247); தீயிற் பாய்ந்து உயிர்துறக்கத் துணிந்தாள். அப்பொழுது அங்கிருந்த மதுரைப் பேராலவாயார்

போன்ற சான்ருேர்கள் தீப்புகாதவாறு தடுக்க, அச்சான்ருேரை நோக்கி, "பல்சான்றீரே! நின் தலைவனேடு இறக்க நீபோ என்று கூறியிருத்தல் வேண்டும்; அவ்வாறு சொல்லாது "செல்லற்க" என்று தடுக்கின்றீர்கள்... கைம்மை நோன்பு மேற்கொண்டு துன்புறுதல் எனக்கு இயலாது...என் பெருந்தோட் கணவன் இறந்தாருகத் தாமரையுடைய நீர் செறிந்த பொய்கையும் தீயும் ஒரு தன்மைத்து" என்று கூறித் தீப்பாய்ந்தாள் (புறம்-246).

கழாத்தலையார் கூற்று

சேரமான் குடக்கோ நெடுஞ் சேரலாதனும் சோழன் வேல்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் திருப்போர்ப் புறத்துப் பொருதனர். முடிவில் இருவரும் இறந்தனர். யாரேனும் ஒருவர் வெற்றியுறின் வெற்றியுற்றவர் போர்க்களத்தைத் தமதாக்கிக் கொள்ளலாம். இருவரும் இறந்தமையாற் களங்கொளற் குரியோரின்றிப் போர் நின்றது. அவர் பெண்டிர் யாவரும் உடன்கட்டை ஏறினர்களாம்! இதனைக் கழாத்தலையார் என்னும் புலவர், "பெண்டிரும், பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார், மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே" என்று புறம் 62இற் பாடியுள்ளார்.

ஆய் அண்டிரன் மனைவியர்

பொதிய மலையைச் சூழ்ந்த நாட்டை ஆண்டவன் ஆய் அண்டிரன் என்ற வள்ளல். பழுமரத்தைச் சூழும் பறவைபோல ஆய் அண்டிரனை நோக்கிப் புலவர் வருவர்; அவனும் அவர்களுக்கு வேண்டியவற்றை

வழங்குவான். காலன் என்னும் கண்ணிலியுவப்ப இவனும் மேலோர் உலகம் எய்தினன். இவனுடைய உரிமை மனைவியர்களும் உடன் மாய்ந்தனர். இதனைக் குட்டுவன் கீரனார் புறம் 240இற் பாடியுள்ளார்.

ஆதிரைகாதை

ஆதிரை என்பாள் சாதுவன் என்னும் ஒரு வணிகனுக்கு மனைவி; ஒப்புயர்வில்லாக் கற்புடையவள். ஒருகால், சாதுவன் பொருள் தேட எண்ணிச் சில வணிகரோடு கப்பலேறிச் சென்றான். கப்பல் கவிழ்ந்தது. சாதுவன் பாய்மரத் துண்டமொன்றைப் பற்றி நீந்தி நாகர் மலைப்பக்கத்தேயடைந்து பிழைத்தான். கடலை நீந்திப் பிழைத்துக் காவிரிப்பூம்பட்டினம் வந்தோர் "சாதுவன் இறந்தான்" என்று ஆதிரைக்குக் கூறினர். அவள் இறக்கத் துணிந்து, மயானத்திற் குழிதோண்டி, அதில் விறகுகளை அடுக்குவித்துத் தீயை மூட்டி, "என் கணவன் வினைப்பயன் உய்ப்பப் புக்குழிப் புகுவேன்" என்று சொல்லித் தீப்பாய்ந்தாள். அவள் கற்பின் திறத்தால் அவளைத் தீச்சுடாதொழிந்தது; அவள் ஆடையும் நெருப்புப் பற்றவில்லை; கூந்தலிற் சூடிய மாலையும் தொன்னிறம் நீங்கிற்றிலது; தாமரையில் வீற்றிருந்த திருமகள் போலப் பொலிவுறத் தோன்றினாள்.

"உடுத்த கூறையும் ஒள்ளெரி யுருஅ(து);
ஆடிய சாந்தமும் அகைந்த கூந்தலிற்
சூடிய மாலையும் தொன்னிறம் வழாது;
விரைமலர்த் தாமரை ஒருதனி யிருந்த
திருவின் செய்யோள் போன்றினி(து) இருந்தனள்"

என்பர் மணிமேகலை யாசிரியர்.

மாதினியார்—திலகவதியார்

திருவாமூரில் வாழ்ந்தவர்கள் புகழனாரும் மாதினியாரும். இவ்விருவரும் பயந்த மாணிக்கங்களே திருநாவுக்கரசரும் திலகவதியெனும் மங்கை நல்லாளும். திலகவதியாருக்கு மணப்பருவம் வந்துற்றது. கலிப்பகையார் என்னும் வீரர்பெருந்தகைக்குத் திலகவதியாரை மணம் பேசி முடித்தனர் பெற்றோர். அவ்வமயம் வேந்தர்க் குற்றுழியுதவக் கலிப்பகையார் போர் மேற் செல்ல வேண்டியதாயிற்று. சின்னாள் கழிந்தன. புகழனார் நோய்வாய்ப்பட்டிறந்து விண்ணுலகடைந்தார். மாதினியார் 'சுற்றமுடன் மக்களையும் துகளாகவே நீத்துப் பிரியாத உலகெய்தும் கற்புநெறி வழுவாமற் கணவனுருடன் சென்றார்'. அதாவது தீப்பாய்ந்து உயிர் நீத்தார். இங்ஙனமாக, வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற் போலக் "கலிப்பகையார் போரில் உயிர் துறந்தார்" என்ற செய்தி திலகவதியாருக்கும் அவர் தம்பியார்க்கும் எட்டியது. "எந்தையும் எம் அன்னையும் என்னை அவர்க்குக் கொடுக்க இசைந்தார்கள்; ஆகையால் நான் அவர்க்கே உரியேன்; எனவே இந்த உயிரை அவருயிரோடு சேர்ப்பிப்பேன்" என்று திலகவதியார் இறக்கத் துணிந்தார். பின்னர்த் "தம்பியார் உளர் ஆக வேண்டும் எனும் தயாவினால் இம்பர் மனைத்தவம் புரிந்து, அனைத்துயிர்க்கும் அருள் தாங்கித்" திலகவதியார் உயிருடன் இருந்தார். இவ்விருவர் செய்திகளால் 7ஆம் நூற்றாண்டில் எரிபுகுதலாகிய ஒழுகலாறு இந்நாட்டில் நிலவியிருந்தமை தெளிவு.

வானவன் மாதேவியார்

இரண்டாம் பராந்தகனுகிய சுந்தரசோழன் கி. பி. 957 முதல் 970 வரை அரசாண்ட சோழ மன்னன் ஆவான். இவன் இறந்த பொழுது இவன் மனைவியருள் ஒருவராகிய வானவன் மாதேவி என்பார் உடன் கட்டை ஏறினர். இவரது செயற்கருஞ் செயலைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் புகழ்ந்து கூறும். திருக்கோவலூர்க் கல்லெழுத்து இவ்வருஞ் செயலைப் பின்வருமாறு கூறுகிறது :—

"செந்திரு மடந்தைமன் சீராஜ ராஜன்
இந்திர சமானன் இராஜசர் வஞ்ஞனெனும்
புலியைப் பயந்த பொன்மான் கலியைக்
கரந்து கரவாக் காரிகை சுரந்த
முலைமுகம் பிரிந்து முழங்கெரி நடுவணும்
தலைமகற் பிரியாத் தையல் நிலைபெறுந்
தூண்டா விளக்கு.........
மணிமுடி வளவன்
சுந்தர சோழன் மந்தர தாரன்
திருப்புய முயங்கும் தேவி."

அம் மாதேவி தன் இளங் குழந்தையைப் பிரிந்து உடன்கட்டை ஏறிய செய்தி யாவரையும் துன்பக் கடலுள் ஆழ்த்தத்தக்கது.

வீரமாதேவியார்

முதலாம் இராசேந்திரன் 1012 முதல் 1045 வரை ஆண்ட சோழ மன்னனுவான். இவனுடைய மனைவி களுள் வீரமாதேவி என்பாள் உடன்கட்டை ஏறியதாக

முதல் இராசாதிராசனது 26 ஆம் ஆட்சி யாண்டுக்குரிய பிரமதேயக் கல்லெழுத்துக் கூறுகிறது. பிரமதேயத்துச் சபையார் ஒரு புளியமரத்தின் கீழ்க்கூடி ஒரு தண்ணீர்ப் பந்தல் தருமம் நடத்த நிலம் விற்றனர். உடையார் சிறீ ராசேந்திர சோழதேவர் அடக்கம் செய்யப்பெற்ற கல்லறையிலேயே வீரமாதேவியும் அடக்கம் செய்யப் பெற்ருள் என்றும், அவ்விருவருடைய நீர் வேட்கையைத் தணிப்பதற்காக இத் தருமம் நிறுவப்பெற்றது என்றும் கூறப்பெறுகிறது. அவ்வரசமாதேவியின் உடன் பிறந்தாராகிய சேனுபதி மதுராந்தகனுன பரகேசரி வேளார் என்பவரே இத் தருமத்தைச் செய்தவராவார்.

கங்கமாதேவியார்

பரகேசரி வர்மனது 3 ஆம் ஆண்டுக்குரிய அள்ளூர்க் கல்லெழுத்து வீரசோழ இளங்கோ வேளார் என்ற ஒருவருடைய தேவியார் தீப்பாய்ந்ததாகக் கூறுகின்றது. அவர் தீப்பாயும் பொழுது ஒரு விளக்கு எரிக்க நிபந்தம் கொடுத்தார். "இளங்கோ வேளார் தேவியார் கங்கமா தேவியார் தீப்பாய்கின்ருர் குடுத்தது" என்பது கல்லெழுத்து வாசகம். இக் கல்லெழுத்து முதற்பராந்தக சோழன் காலத்ததாதல் கூடும் என்று அறிஞர் கருதுவர்.

மைசூர்ப்பகுதியில்

இரண்டாம் இராசேந்திரனுடைய 6 ஆம் ஆட்சி யாண்டு (சகரயாண்டு 979)க்குரிய கன்னடக்கல்லெழுத்து மைசூரில் பௌடூரு என்னும் ஊரில் உள்ளது. கி.பி. 1057 ஆம் ஆண்டில் ஒருவன் மல் யுத்தப் போட்டியில் அரசனுடைய உறவினன் ஒருவனைக் கொன்றுவிட்

டான். அக் குற்றத்திற்காக அவனுக்கு மரணதண்டனே விதிக்கப்பெற்றது. அவன் மனேவியும் நுங்கநாட்டுச் சிற்றரசன் மகளுமான தேகப்பே என்பாள் பெற்ருேர் எவ்வளவோ தடுத்துங் கேளாமல் தன் கணவனுடன் உடன் கட்டை ஏறத் தீர்மானித்தாள். இச்செய்தியைத் தெரிவிக்குங் கல்வெட்டுக் கன்னட மொழியில் உருக்கமாகக் கவிபோல் அமைந்திருக்கிறது.

பியாதரகல்லி என்ற ஊரில் வீரராசேந்திரனது 5 ஆம் ஆண்டு (1067) க்குரிய கல்லெழுத்து, ஒருத்தி தீப்பாய்ந்த செய்தியைத் தெரிவிக்கிறது.

பொட்டப்பள்ளி என்ற ஊரில் வீரராசேந்திரனது 6 ஆம் ஆட்சியாண்டுக்குரிய கல்லெழுத்துளது. ஒருவனுடைய தந்தை யிறந்தான்; தந்தையோடு தாயும் தீயிற் பாய்ந்தாள்; அவர்களின் நினேவாக நீர்நிலம் 50 குழியும் காட்டாரம்பம் 1000 குழியும் அவர்களுடைய மகன் தானஞ் செய்தான் என்று அக் கல்லெழுத்துப் புகல்கிறது.

கெப்பலகுப்பே என்ற ஊரில் முதல் குலோத்துங்க சோழனுடைய 18 ஆம் ஆண்டுக்குரிய அதாவது 1088-இல் வெட்டப்பட்ட கல்வெட்டுளது. அழகிய சோழன் என்று ஒருவனுடைய மகன் நவலாசிராசன் என்பான் இறந்தான்; அவனுடன் அவன் மனேவி உடன்கட்டை ஏறினுள்; இவ்விருவருடைய நலனுக்காக அந்த அழகிய சோழன் ஒரு நந்தவனத்தை ஏற்படுத்தினுன். இதுவே இக்கல்லெழுத்திற் கண்ட செய்தியாகும்.

திருக்கழுக்குன்றத்தில்

இரண்டாங் குலோத்துங்க சோழனுடைய 6 ஆம் ஆண்டுக் கல்லெழுத்துத் திருக்கழுக்குன்றத்தில் உள்ளது. எதிரிலி சோழச் சம்புவராயனுடைய சேனபதிகளுள் ஒருவன் இன்னெரு சேனபதியைக் கொன்று விட்டான்; இறந்தவனுடைய மனைவி உடன்கட்டை ஏறினுள்; இவ் விருவருடைய நன்மையின் பொருட்டு விளக்குகள் இரண்டு எரிக்க 90 ஆடுகளும் 31 பசுக்களுந் தானமாக அளிக்கப்பட்டன.

தேவப்பெருமாள்

தென்னர்க்காடு மாவட்டம் எல்வானுசூரில் உள்ள வீரராசேந்திர சோழனது கல்லெழுத்து ஓர் உருக்கமான செய்தியைச் சொல்லுகிறது. இராசராச மலயகுலராயன் ஆன நீரேற்ற பெருமாள் ஆன எதிரிகள் நாயன் என்ற சிற்றரசனுடைய மனைவி **தேவப் பெருமாள்** என்ற பெயருடையவள். அவள் அச்சிற்றரசனுடைய "வேலைக்காரி" எனப்பெற்ருள். அவன் இறந்ததும் அவள் உடன்கட்டை ஏறினுள்; கணவன் இறந்த பிறகு உயிருடன் இருந்தால் தன்னுடைய சக்களத்திகளுக்கு அடிமையாக உழைக்க நேரிடும் என்று கருதினுள்; தன்னைத் தீப்பாய வேண்டாம் என்று தடுப்பவன் தன் மனைவியைப் பிறர்க்களிக்கும் பாவத்திற்படுவான் என்று சாபமிட்டாள்; தன்னைக் கட்டித் தீயிற் போடாதவர்களையும் அங்ஙனமே சபித்தாள். இச்செய்தி வியப்பாகவும் உருக்கமாகவும் இருக்கிறது.

கோட்டம் கட்டுதல்

கணவன் இறந்ததும் ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர் புதைக்கப்பட்ட இடத்திற் கோட்டம் கட்டும் வழக்கம் பண்டைக்காலத்தில் இருந்தது. இன்னுர் இன்ன இடத்திலே புதைக்கப் பட்டுளார் என்பதையும் அக் கோட்டங்கள் அறிவித்தன. இச்செய்தியைப் பின்வரும் மணிமேகலையடிகள் அறிவிக்கும் :—

"அருந்தவர்க் காயினும் அரசர்க் காயினும்
ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்
நால்வேறு வருணத்துப் பால்வேறு காட்டி
இறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த
குறியவும் நெடியவும் குன்று கண்டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்."

முடிப்புரை

இதுகாறுங் கூறியவாற்ருன், உடன்கட்டை யேறுதல் பண்டு சிறுபான்மையேனும் இருந்தது என்றும், உடன்கட்டை யேறுதல் பெருமையாகவுங் கருதப்பட்டு வந்தது என்றும், உடன்கட்டை யேறினேரைக் கோயில் கட்டியும் வணங்கினர் என்றுமறிகிருேம். இவ்வழக்கு இற்றை ஞான்று இல்லை; சட்டத்தாலுந் தடை செய்யப் பட்டுளது.

13. போர்வைக் கோப்பெருநற்கிள்ளி

உறையூர்

உறையூர், சங்க காலச் சோழரது உள்நாட்டுத் தலைநகராய் இலங்கியது; உறந்தை யென்றும் கூறப்பெற்றது; பண்டு இங்கு ஒரு கோழி யானையொடு பொருது வென்றமையால், கோழி என்றும் பெயர் பெற்றது. 'முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கிய புறஞ்சிறை வாரணம்'' என்பது சிலப்பதிகாரம். இவ்வரிகளுக்குப் பழைய வுரையாசிரியர், "யானையைச் சயித்த கோழி தோன்றினவிடம் வலியுடைத்தென்று கருதி அவ்விடத்து அதன் பெயராலே சோழன் ஊர் காண்கின்றபொழுது சிறையும் கழுத்துமாக ஆக்கியவதனாலே புறம்பே சிறையையுடைய கோழியென்றாயிற்று'' என்று விளக்கவுரை எழுதியுள்ளார். இவ்வுறந்தையை இளங்கோவடிகள், "பீடாருறந்தை'' என்று புகழ்வர்; 'வெண்ணெல் வேலியுறந்தை '(352), 'செல்லா நல்லிசை யுறந்தை' (395) என்று புறமும், 'நொச்சி வேலித் தித்தனுறந்தை' (222) என்று அகமும் புகழும். 'சோழன் உறந்தைக் கரும்பு இனிது' என்பது பொய்கையார் வாக்கு. உறையூரவையில் அறம் நின்று நிலைபெற்றதென்று கூறுவர்: "மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து, அறம் நின்று நிலையிற்று'' (புறம் – 39), "மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து, அறங்கெட வறியா தாங்கு (நற்றிணை - 400), "ஆரங் கண்ணி அடுபோர்ச்

சோழர், அறங்கெழு நல்லவை உறந்தை" (அகம்-93) என்பன இதனை வலியுறுத்தும். இவ்வரும் பெறல் மரபின் பெரும் பெயர் மூதூர் பல செந்தமிழ்ப் புலவர்களைத் தோற்றுவித்த பெருமையுடையது; இளம்பொன் வாணிகனர், ஏணிச் சேரி முடமோசியார், மருத்துவன் தாமோதரனர், முதுகண்ணன் சாத்தனர், முதுகூத்தனர் என்பவர் உறையூரொடு சார்த்திக் கூறப்பெற்ற செந்தமிழ்ப் புலவராவர்.

தித்தன்

இவ்வுறையூரில் **தித்தன்** என்ற சோழ மன்னன் ஆட்சி செய்து வந்தான். இவன் ஒரு பெருவீரன்; பெறலருங் குரிசில்; சிறுகண்யானையும் பரிநன்மாவுமுடையவன்; மழைவளம் போலத் தரும் வண்மையுடையவன். இத்தகைய சீர்சான்ற விழுச்சிறப்பினையுடைய தித்தற்குப் **போர்வைக் கோப்பெருநற்கிள்ளி** என்னும் மகன் இருந்தான்; ஐயை என்னும் ஒரு மகள் இருந்தனள். ஐயை சிறந்த கற்புடையவள். இவளது கற்பின் சிறப்பு நோக்கி, '**ஐயை தந்தை**' என்று (அகம்-6இல்) தித்தன் புகழப் பெற்றுள்ளான்.

போர்வைக் கோப்பெருநற்கிள்ளி

இவன் மற்போரில் வல்லவன்; போரெனில் புகலும் புனைகழல் மன்னவன்; அடிபுனை தொடுகழல் மையணல் காளை; போரெதிர்ந்து போர்க்களம் புகினே விரைந்து வெல்லும் பெருந்தோளன். யாதுகாரணத்தாலோ தந்தைக்கும் தனயனுக்கும் மனவேற்றுமை யுண்டா

யிற்று. மகனுகிய இப்பெருநற்கிள்ளி அரண்மனையை நீத்து வேற்றூர்க்குச் சென்ருன்; அரச வாழ்க்கை ஒழிந்து எளிய வாழ்க்கை மேற்கொண்டான்; புற்கை யுண்டான்; எனினும் போரில் ஊக்கமும் வெற்றியும் குறைந்தானல்லன்.

மற்போர்

ஒருநாள் முக்காவல் நாட்டு ஆமூர் மல்லன் என்பான் போர்வைக் கோப்பெருநற்கிள்ளியிருந்த ஊரைத் தன தாக்கிக்கொள்ள வந்தான். பெருநற்கிள்ளி வாளாவிருப் பனே? ஊர்கொள வந்த பொருநனெடு மற்போர் புரிந் தான்; ஆமூர் மல்லனைக் கீழே தள்ளினுன்; ஒரு காலை அவன் மார்பின் மேல் மடித்துவைத்தான்; இன்னெரு காலால் அவன் செய்கின்ற உபாயத்தை விலக்கி முதுகின் கண் வளைத்தான்; பசியுடைய யானையொன்று மூங்கிலை மடித்துத் தின்பதற்கு முயல்வதுபோல அம் மல்லனது தலையும் காலுமாகிய இரண்டிடமும் முறியுமாறு மோதிக் கொன்று வெற்றிச் செருக்குடன் நின்ருன். இக்காட்சி யைச் சாத்தந்தையார் என்னும் புலவர் கண் இமைக்காது பார்த்துக்கொண்டிருந்தார்; "பெருநற்கிள்ளி பொருது அட்டு நின்ற நிலையை இவன் தந்தை தித்தன் காண்க; காணின் மகிழ்வான்! மகிழினும் மகிழாது விடினும் தித்தன் இதனை அறிவானுக! தித்தன் உவவானுயின் இவனை நோக்கி அஞ்சுவானுக" என்று பாடினுர்.

இதோ, அப்பாடல்:—

இன்கடுங் கள்ளின் ஆமூ ராங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பொதுங் கின்றே; ஒருகால்

வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே;
நல்கினும் நல்கா னாயினும் வெல்போர்ப்
போரருந் தித்தன் காண்கதில் அம்ம!
பசித்துப் பணைமுயலும் யானை போல
இருதலை ஒசிய எற்றிக்
களம்புகு மல்லன் கடந்தடு நிலையே. —புறம், 80

ஆர்புனை தெரியல் நெடுந்தகை போர்

ஏழைப் பாட்டாளி; காலை முதல் மாலை வரை இடையறாது உழைப்பவன்; அவனூரில் திருவிழா வொன்று தொடங்க விருந்தது; அதற்கு அவன் ஊழியஞ் செய்யப் போகவேண்டும். அவன் மனைவி பிள்ளை பெறுதலைப் பொருந்தினாள்; வீட்டில் அவளுக்கு உதவ யாருமில்லை; அவனே அவளுக்கு உதவவேண்டியிருந்தது. மழையோ பெய்யத் தொடங்கியது. மகப்பேறுற்ற மனைவி இருக்கக் கட்டில் வேண்டும்; கட்டிலோ பழு துற்றிருந்தது; பழுதுற்ற பகுதியைப் பிணிக்க வேண்டும்; மாலைக் காலமும் நெருங்கியது; கட்டிலைப் பிணிக்கலுற் றான்; விரைவாக முடிக்கவேண்டும். அவன் கையகத்த தாகிய ஊசியை எவ்வளவு விரைவாகச் செலுத்தியிருப் பான்? சொல்லவேண்டியதே யில்லை. இக் காட்சியை முன்னொரு நாள் சாத்தந்தையார் கூர்ந்து நோக்கியவர்; பெருநற்கிள்ளி ஊர்கொள வந்த பொருநனொடு பொரும் போரைக் கண்டதும் இதுவே அவர் அகக்கண்முன் நின்றது. உடனே முகிழ்த்தது பின்வரும் பாட்டு:—

சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டில் நிணக்கும் இழிசினன் கையது

போழ்தூண்(டு) ஊசியின் விரைந்தன்று மாதோ
ஊர்கொள வந்த பொருநனொ(டு)
ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே. -புறம், 82

நக்கண்ணையார் காதல்

ஆர்புனை தெரியல் நெடுந்தகை தங்கியிருந்த ஓர் ஊரில் ஒரு பெண்பாற் புலவர் இருந்தார். அவர் நக்**கண்ணையார்** என்னும் பெயரினர்; பெருங்கோழி நாய்கன் என்பவருடைய மகள் ஆவர். இந்நங்கை போரவைக் கோப்பெருநற்கிள்ளியின் மேல் காதல் கொண்டாள். இக்காதலை அவன் அறியான்; ஆகவே அவன் இந்நங்கையைக் காமுற்றானல்லன். இம்மங்கை நல்லாள் அவனை யடைந்து முயங்க மாட்டாமையின் மெலிவுற்றாள்; கைகளினின்று வளைகள் நெகிழ்ந்தன; வளைகள் நெகிழ்ந்தமையை யாய் அறியின் கடிந்து கூறுவளே என அஞ்சினாள்; வளைகள் நெகிழாதிருக்கும் வண்ணம் 'அவன் தோளை முயங்கலாம்' எனினோ, 'அவையின் கண் யாங்ஙனம் இது கூடும்?' என்று நாணமடைந்தாள்; 'இவ்வூர் யாய் நிலையிலேயே இருக்கக்கூடாதா? நான் என்னையை முயங்கலாமே' என்று ஏங்கினாள்; 'யாய் இல்லாதிருப்பின் வளைகள் கழன்றாலென்? அதற்கு அஞ்சவேண்டா' என்று நினைத்தாள். ஒத்தகாம முறுவழித் தோன்றிய மனக்குமுறல் ஒரு செய்யுள் வடிவெடுத்தது. அது வருமாறு:—

அடிபுனை தொடுகழல் மையணல் காளைக்(கு) என்
தொடிகழித் திடுதல்யான் யாய்அஞ் சுவலே
அடுதோள் முயங்கல் அவைநா ணுவலே
என்போல் பெருவிதுப் புறுக என்றும்
ஒருபாற் படாஅ தாகி
இருபாற் பட்டஇம் மையல் ஊரே. —புறம், 83

யான் கண்டனன் அவன் வென்றி

ஆமூர் மல்லனைப் பெருநற் கிள்ளி வென்ற நிலையை நக்கண்ணையாரும் கண்டார். மல்லர்க் கடந்தடு நிலையைக் கண்டவருள் ஒரு சாரார், 'இவர்க்கு ஊர் இஃதன்று ஆகலானும், இவர்க்கு நாடு இஃதன்று ஆகலானும், இவர்க்கு இயல்பாய வென்றியை இவரது வென்றியே யாகும்' என்று சிலர் சிறப்பாகப் பேசினர். இக் காரணத்தையே காட்டி, 'இஃது இவரது வென்றியன்று' என்று பிறிதொரு சாரார் கூறினர். நக்கண்ணையார் இவ் விரு சாராரது கூற்றையும் கேட்டார்; காற்சிலம்பொலிப் பத் தம் வீட்டருகே ஓடினார்; மனையருகே யிருந்த பனையைப் பொருந்தி நின்றார்; தன்வளையும் கலையும் அவன் பொருட்டு நெகிழ்தலின் அவனுக்குத்தான் தோற்றமையால் அவனே வென்றவனாதலைக் கண்டார். இச்செய்திகளைக் கூறும் அவர் பாடல் பின் வருமாறு :—

என்னைக்(கு) ஊரிஃ(து) அன்மை யானும்
என்னைக்கு நாடிஃ(து) அன்மை யானும்
ஆடா(டு) என்ப ஒருசா ரோரே
ஆடன்(று) என்ப ஒருசா ரோரே
நல்ல பல்லோர் இருநன் மொழியே
அஞ்சிலம்(பு) ஒலிப்ப ஓடி எம்மில்
முழாவரைப் போந்தை பொருந்திநின்(று)
யான்கண் டனன்அவன் ஆடா குதலே. —புறம், 85

புறவுரை

இங்ஙனம் புலவர் பாடும் புகழுடையனாய் விளங்கியவன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி. இவன் நக்கண்ணையாரை மணந்தனனோ என்பது தெரிந்திலது, இவன்

பேரில் இவ்விரு புலவர்களாலும் பாடப்பெற்ற எல்லாப் பாடல்களும் தொல்காப்பிய உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றன. தித்தற்கும் இவ விளங்கோவிற்கும் மனவொற்றுமை உண்டாயிற்று என்பதும் தெரிந்திலது.

சாத்தந்தையார் புறம் 287 ஆம் பாடலையும் பாடியுள்ளார். அப்பாடல் வஞ்சித்திணையுள் **மாராயம் பெற்ற நெடு மொழி** என்னும் துறைக்கு மேற்கோளாக ஆளப் பெற்றுள்ளது. இப் புலவருடைய மகனார் **கண்ணஞ் சேந்தனார்** என்ற புலவர் ஆவர். இவர் தாமும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய **திணைமொழி யைம்பது** என்ற நூலின் ஆசிரியர் ஆவர்.

நக்கண்ணையார் அகத்துறையமைந்த பாடல்களும் பாடியுள்ளார். அவை அகம் 252, நற்றிணை 19, 87ஆம் பாடல்களாகும்.

புறம் 352 ஆம் பாட்டிலும், அகம் ஆறிலும் **பரணரும்**, புறம் 395 இல் **நக்கீரரும்** தித்தனைக் குறித் துள்ளமையின் இப்புலவர்கள் காலத்துக்குத் தித்தன் முற்பட்டவன் என்பது உறுதி.

தித்தன்வெளியன் என்று ஒருவர் அகம் 226 இல் குறிக்கப்பெற்றுள்ளார். இவரைத் தித்தன் மகன் என்பர் சிலர். தித்தனுக்கே தித்தன் வெளியன் என்ற பெயருண்டு என்பர் வேறு சிலர். **வீரைவெளியன் தித்தனார்** என்று அகநானூற்றுப் புலவர்களுள் ஒருவர் காணப்பெறுகிறார். இவர் அகம் 188 ஆவது செய்யுளைப்

பாடியவர். இவர் தித்தனது பெயரன் என்று கருதப் பெறுகிறார்.

போரவை

இனிப் " போர்வை" என்பதைப் "போரவை" என்று கொள்வர் **திரு ரா, இராகவையங்கார்** அவர்கள் (தமிழ் வரலாறு பக்கம், 60.) **"போரவையாவது** 'இருவர் மற்போர் முதலியன நிகழ்த்துங்கால் நடுநின்று, தோலாமை தோல்வி, இவற்றை உள்ளவாறு கூறவல்ல போர்முறை அறிந்த வீரர் அவை' என்று உய்த்து உணரக்கிடக்கின்றது. ஆமூர் மல்லனை மற்போரில் அட்டுவென்ற பெருநற்கிள்ளி போரவை காணப் பொருதனன் என்றும், அவன் போரவை ஒன்று புரந்தனன் என்றும் அறிதல் தகும்."

மற்போர் நிகழ்ந்த இடம் **ஆமூர்** ஆகும் என்று திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் கருதுவர்; 'போர்வை' என்பதைப் **'போரவை'** என்றே கூறி, "இவன் பெயரில் போரவை என்பது போர்வை எனக் காணப்படுவது ஏடுபெயர்த்தெழுதி னோரால் நேர்ந்தபிழை" என்றும் தம் புறநானூற்றுப் பதிப்பு 205 ஆம் பக்கத்தில் எழுதியுள்ளார்.

14. சமய இலக்கியம்*

தமிழ் மிகத் தொன்மை வாய்ந்த மொழி; வட வேங்கடம் தென் குமரிக்கு இடைப்பட்ட பெருநிலப் பரப்பில் பேசப்பெற்ற மொழி – பேசப் பெறும் மொழி; இம்மொழி, இலக்கிய வளம் பொருந்தியது; இலக்கண வரம்புடையது; சமய சாத்திர நூல்கள் பெருவாரியாகக் கொண்டு மிளிர்வது.

தமிழர் என்ஞான்றும் சிறந்த தெய்வ நம்பிக்கை யுடையவர். தமிழில் மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம். இதில் தமிழ் நாட்டு மக்களுக் குரிய தெய்வங்கள் கூறப்பெற்றுள்ளன. காடும் காடு சார்ந்த இடமும் முல்லை; இங்குத் தெய்வம் திருமால். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி; இங்குத் தெய்வம் முருகன். இங்ஙனம் ஒவ்வொரு நிலத்துக்கும் ஒவ் வொரு தெய்வம் கூறப்பெற்றுள்ளது.

தொல்காப்பியத்துக்குப் பிறகு எழுதப்பெற்ற நூல் திருக்குறள். திருவள்ளுவர் தனிப்பட்ட எந்தச் சமயக் கருத்தையும் கூறவில்லை; எனினும் திருக்குறள் சமய அறிவு உள்ளவர்களுக்கு நல் விருந்தாக இருக்கிறது. திருக்குறள் முதல் அதிகாரம் கடவுள் வாழ்த்து. முதற் குறள், உலகம் ஆதிபகவானுகிய முதலையுடையது என் கின்றது; கடவுளை எண்குணத்தான் என்கின்றது இன்

---

* ''தமிழ் வளர்ந்த கதை'' என்ற பேச்சு வரிசையில் திருச்சி வானொலியில் பேசிய பேச்சைத் தழுவி எழுதியது.

ளொரு குறள்; இறைவனடியை வணங்கியவர் பிறவிப் பெருங்கடலைக் கடக்கலாம் என்கின்றது பிறிதொரு குறள்; கற்றதனாலாய பயன், இறைவனது நற்றாளைத் தொழுதலே யாகும் என்பது இன்னும் ஒரு குறள். திருமகளும், திருமாலும், இந்திரனும் திருக்குறளில் இடம் பெற்றுள்ளனர்.

இனிச் சங்க இலக்கியங்களை நோக்குவாம். சங்க காலத்து நூல்கள் சமயத்தைப் பற்றி நிறையக் கூற வில்லை. எனினும் சங்க காலத்துப் புலவர்கள் தெய்வ நம்பிக்கையில் சிறிதும் குறைந்தவரல்லர். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பவர் ஒரு பாண்டிய அரசர். இவர் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் இருந்தவர். இவரைக் காரிகிழார் என்ற ஒரு புலவர் பாடியுள்ளார். 'அரசனே! முக்கட் செல்வன் நகர் வலம் செயற்கு நின்குடை தாழ்க' என்று பாடியுள்ளார். அதாவது சிவன் கோயிலை வலம் வரும்பொழுது குடையைத் தாழ்த்துக என்பது கருத்து. முக்கட் செல்வன் என்றது சிவபெருமானை; நகர் என்றது கோயிலை.

ஔவையார் என்ற புலவரை அறியாதவர் இரார். அவர்காலத்தில் இருந்த வள்ளல் அதியமான் நெடுமான் அஞ்சி என்பவர். ஒருநாள் அதியமானுக்கு ஒரு நெல்லிக் கனி கிடைத்தது. இக்கனியை உண்பவர் நெடு நாள் உயிர்வாழ்வார்களாம். இக் கனியை ஔவையார் உண்பது நல்லது என்று அதியமான் நினைத்தான்; ஔவையாரிடம் கொடுத்தான். ஔவையார் கனியை உண்ட பின்னரே கனியின் சிறப்பை அறிந்தார். அதியமானை நோக்கி 'வள்ளலே, பிறைநுதல் பொலிந்த சென்னி நீல

மணி மிடற்று ஒருவன் போல மன்னுக பெரும நீயே" என்று வாழ்த்தினர். பிறைச் சந்திரனைச் சூடியவனும் நீலகண்ட முடையவனுமான சிவபெருமானைப் போல நிலைபெற்று வாழ்வாயாக என்பதே அவ்வாழ்த்து.

இதுகாறும் கூறிய இரண்டு செய்திகளால் நாம் அறிவ தென்ன? சங்ககால மக்கள் தெய்வ நம்பிக்கை யுடையராய் இருந்தனர் என்பதே. தக்க இடங்களில் சமயக் கருத்துக்களை அமைத்துப் பாடினர் என்றும் நாம் அறிகிறோம்.

இச்சங்க காலத்து வாழ்ந்தவனே சேரன் செங்குட்டு வன். அவன் கண்ணகிக்குக் கல் கொணர்வதற்காகப் புறப்பட்டான். அப்பொழுது சிவன் கோயில் பிரசாதம் கொண்டுவந்து கொடுத்தனர். அதனைச் செங்குட்டுவன் தலையில் தரித்துக்கொண்டான். பிறகு திருமால் கோயிலி லிருந்து பிரசாதம் வந்தது. அதனையும் ஏற்றுத் தோளில் தரித்துக்கொண்டான். இதனைச் சிலப்பதிகாரம் சொல்லு கிறது. இதிலிருந்து சங்ககால மக்கள் சமய ஒழுக்கம் உடையராய் இருந்தனர் என்று அறிகிறோம். இச்சேர அரசன் காலத்தில் தமிழகத்தில் சைவம் வைணவம் பௌத்தம் சமணம் என்னும் நான்கு பெருஞ் சமயங்கள் இருந்தன.

இச் செங்குட்டுவன் தம்பி இளங்கோவடிகள். இவர் ஒரு சமணத் துறவி. இவர் எழுதிய நூலே சிலப்பதிகாரம். இது சமண சமயக் கருத்துக்களை அழகுற அறிவிக்கும் அரிய காப்பியம். இது கோவலன் கண்ணகி கதையைக் கூறுவது.

இக்காலத்தில் வாழ்ந்தவரே சீத்தலைச் சாத்தனார் என்ற புலவர். அவர் எழுதிய காவியம் மணிமேகலை என்பது. இந்நூல் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றைக்கூறுவது. இந்நூல் பௌத்த சமயக் கொள்கைகளை அழகாக இயம்புகிறது.

இச்சங்ககாலத்தில் மக்களிடையே சமய வேற்றுமையில்லை. சமயத்தின் பேரால் சச்சரவுகளும் இல்லை. அவரவர் விரும்பிய சமயத்தை அவரவர் கடைப்பிடிக்கலாம். ஆகவே சமயத்தைப் பற்றியே போதிக்கும் நூல்கள் எழுந்தில. எனினும் திருமுருகாற்றுப்படை முருகப்பெருமானைப் பற்றிய சங்க நூல் என்பது அறிதல் தகும்.

இச்சங்க காலத்துக்குப் பிறகு ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளை இருண்டகாலம் எனலாம். அக்காலத்திய வரலாற்றை நன்கு அறிவதற்குரிய சான்றுகள் இல்லை. களப்பிரர் என்ற வேற்றரசர் தமிழ் நாட்டில் புகுந்தனர். தமிழும் ஓரளவு புறக்கணிக்கப் பெற்றது. சமண சமயமும் பௌத்த சமயமும் இந்நாட்டில் மிகவும் பரவின. வடமொழிச் சொற்றொடர்களும் கருத்துக்களும் தமிழில் புகுந்தன. சங்கத் தமிழ் நடைமாறியது.

அன்றியும் இவ்விரு சமயங்களும் தமிழ் நாட்டுக்குரிய தொன்றுதொட்டு வழக்கிலிருந்த சமயங்கள் அல்ல; அச்சமயக் கருத்துக்கள் சில தமிழ் நாட்டுக்குப் பொருத்தம் அற்றவை. சமணர்களும் பௌத்தர்களும் கடுந்துறவு நிலையையே தமிழ் நாட்டில் போதித்தனர். மக்கள் முதலில் சமண பௌத்தர்களுடைய பேச்சைக் கேட்டனர்; அவர்களுடைய கல்வி கேள்விகளை நோக்கி

மெச்சினர்; அவர்கள் சொற்படி அச்சமயங்களிற் சேர்ந் தனர். எனினும் மக்கள் மனம் ஊசலாடிக்கொண்டு தான் இருந்தது. 7 ஆம் நூற்றுண்டில் மதுரையில் ஆண்ட மாறவர்மனும், காஞ்சிபுரத்தில் ஆண்ட மகேந் திரவர்மன் என்னும் பல்லவ அரசனும் சமண சமயத் தைச் சார்ந்தவர் ஆக இருந்தனர். அச்சமயங்கள் அரசர் ஆதரவு பெறவே மக்களும் பெருவாரியாக அச்சமயங்க ளேச் சார்ந்திருந்தனர். சைவ வைணவ சமயங்கள் தாழ்ந்திருந்தன.

இறைவன் திருவருளால் திருமுனேப்பாடி நாட்டில் திருநாவுக்கரசரும் சோழ நாட்டில் திருஞானசம்பந்தரும் தோன்றினுர்கள். இருவரும் ஒன்று சேர்ந்து இசைப் பாடல்களேப் பண்ணுடன் பாடினுர்கள். திருநாவுக்கர சர் மகேந்திர பல்லவ அரசனேச் சைவனுக்கினுர். திரு ஞான சம்பந்தரும் மாறவர்ம பாண்டியனேச் சைவத்தில் சேரச் செய்தார். சிவபெருமானே முழுமுதற் கடவுள்; சைவசமயமே மக்களுக்கு ஏற்ற சமயம்; இல்லறமே சிறந்த அறம்; இல்லறத்தில் இருந்தே இறைவன் அரு ளேப் பெறலாம் என்று எளிய இனிய பாடல்களில் பழந் தமிழரது ஒழுகலாறுகளேப் போதித்தார்கள். மக்களும் மனம் மாறினுர்கள்; சைவ சமயத்தைச் சேர்ந்தார்கள். இங்ஙனம் சமயப்பற்று ஊட்டுதற்குக் கருவியா யமைந்த வையே தேவாரம். தேவாரம் என்ருல் கடவுளுக்குச் சூட்டப்படும் பாமாலே என்பது பொருள். திருநாவுக் கரசர் பாடிய பதிகங்கள் 312; 3066 திருப்பாடல்கள். திருஞான சம்பந்தர் பாடிய பதிகங்கள் 383; 4147 திருப் பாடல்கள். இவ்விருவருக்கும் முன்பே வாழ்ந்தவர் காரைக்கால் அம்மையார். இவர் அற்புதத் திருவந்தாதி

என்ற நூலைப் பாடினார். சம்பந்தர் அப்பர் காலத்துக் குப்பின் ஒரு நூற்றாண்டுக்கு உள்ளே வாழ்ந்தவர் சுந்தரர். இவர் காலத்தில் சேரமான் பெருமாள் என்றவர் சேர மன்னனாக இருந்தார். இச் சேர மன்னன் சுந்தரருடைய தோழர். இவ்விருவரும் சேர்ந்து தமிழ் நாட்டுத் தலங்கள் பலவற்றைச் சுற்றி வந்தார்கள். சுந்தரர் பாடிய பதிகங்கள் 100. சேரமான் பெருமாள் பாடிய நூல்களுள் சிறந்தவை பொன்வண்ணத்தந்தாதி, திருக்கைலாய ஞானஉலா என்பன. இவர்களுக்குப் பின் வாழ்ந்தவர் மாணிக்கவாசகர். இவர் பாடியதே திருவாசகம். இது ஓதுபவருடைய மனத்தை உருக்க வல்லது. இத்திருவாசகத்தின் பெருமையை மேனாட்டவரும் நன்கு அறியுமாறு Dr. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். அண்மையில் திருவாசகமணி திரு. K. M. பாலசுப்பிரமணியம் அவர்களும் சீரிய முறையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளமை இங்கு அறிதல் தகும்.

இதுவரையிலும் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்று நால்வரைப் பற்றிக் கூறினேன். இந்நால்வரும் சைவ சமயகுரவர் எனப்பெறுவர். இவர் பாடியனவே தேவார திருவாசகங்களாம். இவர்களும் இவர்கள் வாழ்ந்த காலத்திலும் வாழ்ந்த சைவ அடியார்கள் நாயனார்கள் என்று கூறப்பெற்றார்கள். அந்நாயனார்களுடைய சரிதங்களைக் கூற எழுந்த நூலே பெரிய புராணம் எனப்பெறும். இதற்குத் திருத்தொண்டர் புராணம் என்றும் பேருண்டு. இதனை இயற்றியவர் 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் என்னும் புலவர் பெருமான்.

பெரிய புராணத்தோடு ஒத்து எண்ணப் பெறும் சைவசமய இலக்கியம் திருவிளையாடற் புராணம் ஆகும். இந்நூல் மதுரையில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களைக் கூறுவது. திருவிளையாடற் கதைகளைக் கூறும் நூல்களுள் சிறந்தது பரஞ்சோதிமுனிவர் பாடிய திருவிளையாடற் புராணம்.

இவற்றோடு ஒப்பக் கருதப்பெறும் இன்னொரு புராணம் கந்தபுராணம் என்பது. கந்தபுராணம் முருகப் பெருமானது வரலாற்றைக். கூறுவது. காஞ்சிபுரத்தில் வாழ்ந்த கச்சியப்ப சிவாசாரியார் இந்நூலைப் பாடியவர் ஆவர். இந்நூலில் தக்ஷ காண்டம் வள்ளியம்மை திருமணப் படலம் யாவரும் படித்து இன்புறுதற்குரியது.

கி. பி. 6 முதல் பத்தாம் நூற்றாண்டு வரை வாழ்ந்தவர்களே ஆழ்வார்களும். ஆழ்வார்கள் வைணவ சமயத்தைப் பரப்பியவர் ஆவர். அவர்கள் அருளிய பாடல்கள் நாலாயிரப் பிரபந்தம் எனப்பெறும். ஆழ்வார்களுள் சிறந்தவர்கள் நம்மாழ்வாரும் திருமங்கை யாழ்வாரும் ஆவர். 'மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர் கோன் நாலங்கம்கூற' என்பது இதனை வலியுறுத்தும். நம்மாழ்வார் பாடியது திருவாய்மொழி எனப்பெறும். ஆழ்வார்களில் இன்னொருவர் பெரியாழ்வார். அவர் பெற்றெடுத்த பெண்கொடியே ஆண்டாள் எனப் பெறுவார். இவருக்குச் சூடிக் கொடுத்த நாச்சியார் என்றும் பெயருண்டு.

இங்ஙனம் சைவர்களும் வைணவர்களும் பல தோத்திரப் பாடல்களும் இசையோடு பாடித் தத்தம் சமயத்தை ஓங்கச் செய்த அக்காலத்தில் சமணரும்

பௌத்தரும் செல்வாக்கு இழந்திருந்தனர். எனினும் சமணரும் பௌத்தரும் தமிழன்னைக்குப் பல அணிகளைச் சூட்டியுள்ளார்கள்.

சிலப்பதிகாரம் ஒரு சமண இலக்கியம் என்று முன்பே கூறப்பட்டது. அதனோடு ஒத்து எண்ணப் பெறும் சமண காவியங்களில் சிறந்தது சீவக சிந்தாமணி; சீவக சிந்தாமணியை இயற்றியவர் திருத்தக்க தேவர். இது சீவகன் என்னும் ஒருவனது கதையை இயம்புவது; மூவாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களையுடையது.

பெருங்கதை என்பது இன்னொரு சமண நூல். இதில் உதயணன் என்னும் ஒரு அரசனது கதை கூறப் பெற்றுள்ளது. மேருமந்தர புராணம், யசோதர காவியம், நாககுமார காவியம், நீலகேசி என்பனவும் சமணர் காவியங்களாம்.

மணிமேகலை என்பது பௌத்த சமய இலக்கியம் என்று மேலே கூறினேன். இடைக் காலத்தில் பல பௌத்த காவியங்கள் எழுந்தன. குண்டலகேசி வளையாபதி என்னும் நூல்கள் முழுவதும் இப்பொழுது கிடைக்கவில்லை; சில பகுதிகளே கிடைத்துள்ளன.

12 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு சைவசமய சாத்திரங்கள் தோன்றின. இவற்றுள் தலைசிறந்த நூல் சிவஞானபோதம். இதனை இயற்றியவர் மெய்கண்ட தேவர். இவர் நூலில் கண்ட பொருளை விரித்து எழுதப் பெற்றநூல் சிவஞான சித்தியார் எனப்பெறும். சிவஞான சித்தியாரை எழுதியவர் அருள் நந்தி சிவாசாரியர். சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு.

அண்மைக்காலத்தில் தமிழ் நாட்டில் முகம்மதிய மதமும் கிறிஸ்தவ மதமும் பரவின. தமிழ்நாட்டில் வாழ்ந்து தமிழறிந்தவர்களே முகமதியர்கள் ஆனுர்கள். ஆதலின் தமிழிலே முகமதிய மதத்தைக் குறித்து நூல்கள் பல எழுதினுர்கள். சவ்வாதுப் புலவர் என்பவர் 17ஆம் நூற்ருண்டில் வாழ்ந்தவர். இவர் முகையதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ் என்ற நூலைப் பாடினுர். உமறுப் புலவர் என்பவர் இன்னெரு சிறந்த முகமதியப் புலவர். இவர் சீருப் புராணம் என்னும் ஒரு காவியத்தை இயற்றினுர்; இது 12 ஆயிரம் செய்யுட்களை யுடையது.

தமிழ் நாட்டுக்கு வந்த மேலை நாட்டுக் கிறிஸ்தவர் தமிழை நன்கு கற்ருர்கள்; தம் சமயத்தைப் பரப்புவதற்காக நல்ல தமிழறிவைப் பெற்ருர்கள்; தமிழில் கிறிஸ்தவ சமய நூல்களும் இயற்றினுர்கள். மேலைநாட்டுக் கிறிஸ்தவத் தமிழ்ப் புலவர்களுள் சிறந்தவர் வீரமாமுனிவர். இயேசுவின் வாழ்க்கையைக் கூறும் தேம்பாவணி என்னும் காவியத்தை 1724 இல் இயற்றினுர். தமிழ் நாட்டில் பிறந்து கிறிஸ்தவ மதத்தைத் தழுவித் தமிழுக்குச் சிறந்த சேவை செய்தவர்கள் பலர் உண்டு. ஒருவர் H. A. கிருஷ்ணப்பிள்ளை என்ற பெயருடையவர். இவர் 19 ஆம் நூற்ருண்டில் வாழ்ந்தவர். இவர் யாத்த இலக்கியங்களுள் சிறந்தது இரக்ஷணிய யாத்திரிகம் என்பது.

ஒவ்வொரு சமயத்தவரும் பாடிய சிறு பிரபந்தங்கள் பலஉள. ஒவ்வொரு சமயத்தைப் பற்றியும் எழுதித் தமிழன்னைக்கு அணிகலன்கள் பல சூட்டி வாழ்ந்தவர் பலர். வாழிய பலசமயப் புலவர்களும்! வளர்க அவர் தம் இலக்கியத் தொண்டு !!